35

ராஜபக்தி

அல்லது

ஸத்ய விஜயம்

2808

2845

(ஓர் தமிழ் நாடகம்)

(இரண்டாம் பதிப்பு)

வீ. ஸீ. கோபாலரத்னம்

ராஜபக்தி

அல்லது

ஸத்ய விஜயம்

OFFICE OF THE REGISTRAR OF ...
7 - JAN 1937
MADRAS

894:8112

ஓர் தமிழ் நாடகம்
(இரண்டாம் பதிப்பு)

வீ. ஸீ. கோபாலரத்னம்

விலை அணா 10

PRINTED AT
ANANDA VIKATAN PRESS
MADRAS

TO FATHERS

whom the little

ones love to call

"MUTHANNA"

சமர்ப்பணை

முத்து முறுவல் முகத்தினிற் பூத்திடும்
தத்தை மொழியர் தநயர், தகைசேர்
வித்தையறிஞர், விதிநெறியுணர்ந்தோர்
அத்தனை மாக்களும் அன்புடனழைக்கும்
முத்து அண்ணாக்கு முதற்பொருள் படைப்பாம்

முதல் பதிப்பின் முன்னுரை

இரண்டு வருஷங்களுக்குமுன் மைசூரிலிருந்து, குப்பி (Gubbi) நாடகக் கம்பெனியார் என்னும் சிறந்த சபையினர், சென்னைக்கு வந்து அநேக நாடகங்களை நடித்தனர். அவர்கள் நடித்த நாடகங்களில், "ராஜபக்தி" யென்று பெயர் கொண்டதொன்று. மஹாராஷ்ட்ர பாஷையில் "ராக்ஷஸீ மஹத்வ காங்க்ஷா" என்னும் பெயருடன் விளங்கும் திவ்யமான நாடகத்தை ரஸபங்கம் கொஞ்சமுமின்றி அருமையான கன்னடத்தில் அமைத்து, "ராஜபக்தி" என்னும் அழகான பெயருடன் அரங்கேற்றினர்கள். அதைக் காணக் கொடுத்துவைத்தவர்களில் நான் ஒருவன். அதை யொருமுறை கண்டபின் எங்ஙனமாவது அந்த திவ்ய கதையை நமது மாத்ரு பாஷையில் வரைந்திட வேண்டுமென்னும் பேராவலை மேற்கொண்டேன். இத்தனை மாதங்கள் உழன்று முடிவில் என் மனமாற ஒருவாருய் முடித்தேன். இதில் அநேக குறைவுகளும், தவறுகளும் நிறைந்துள்ளன வென்பது திண்ணம். ஆயினும் கற்ரூர் நிறைந்த நமது தமிழ் நாட்டில் கசடனுகிய நான் இதைப் பிரசுரித்தது, அன்னிய பாஷையார் அனுபவித்திடும் அமிர்தத்தில் அணுவளவேனும் நமது தமிழ்நாட்டு ஸகோதரரும் ஸகோதரிகளும் அனுபவிக்கட்டும் என்னும் நல்லெண்ணத்துடனுகையால், அதைக்கொண்டு என் பிழைகளை யெல்லாம் க்ஷமித்திடக் கோருகிறேன்.

மஹாராஷ்ட்ர பாஷையில் வரைந்துள்ள மூல நாடகத்தை ரஸபின்னமின்றி தமிழிலெழுதிட எனக்கு விலையிலா உதவி புரிந்திட்ட ம-ா-ா-ஸ்ரீ H. ராம ராவ், B. A., B. L., Advocate அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். அவருடைய உதவியின்றி இப் புத்தகம் வெளிவந்திருக்கமாட்டாது.

இப்புத்தகத்தை அச்சிடும் விஷயத்தில் அனேக விதங்களில் அன்புடன் உதவிய ம-அ-அ-ஸ்ரீ V. நாராயண ஐயர் அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தை யளித்திடல் என் கடமையாகும்.

இந் நாடகத்தை நடத்திடக் கோருவோர்க்கு நான் தெரிவித்துக்கொள்ள வேண்டியவை சில உண்டு. மூன்று, மூன்றரை மணி ஸாவகாசத்திற்குள் இதை வரைந்தவாறே முழுதிலும் நடித்திடுவது அஸாத்தியம். ஆகையால் அவரவர்களுக்குத் தோன்றியவாறு அநேக இடங்களில் சுருக்கி நடத்திடல் வேண்டும். இந்த நாடகத்தில் அதிகமாய் பாட்டுகள் பாடிட இடங்களில்லை. அவ்வாறு செய்வதும் அநுசிதமாகும்.

இந்நாடகத்தை நடத்திடக் கோருவோர் நடித்திடு முன் என் அனுமதியைப் பெற்றிடல் வேண்டுமென்று வணக்கமாய் தெரிவித்திடுகிறேன்.

லக்ஷ்மீ விலாசம்
மயிலாப்பூர், 9-6-1930

வி. ஸி. கோபாலரத்னம்

(ALL RIGHTS RESERVED)

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

இந்த நாடகத்தின் முதல் பதிப்பில் அச்சிட்ட பிரதிகள் அனேகமாய் செலவாகி விட்டபடியால் இந்த இரண்டாம் பதிப்பை வெளியிடத் துணிந்தனன். அந்தத் துணிவுக்குக் காரணம் நமது தமிழ் நாட்டின் நாடகாபிமானிகள் இந்த நாடகத்தினுடைய பல குற்றங்களையும் பாராட்டாமல், இதிலுள்ள சில போற்றத்தக்க குணங்களையே ஏற்றுக்கொண்டு, தமது உதாரமான நன்மதிப்பை அளித்ததேயாகும். தமிழிலும், வடமொழியிலும் கரையிலாக் கல்வி சிரேஷ்டரான மஹா வித்வான் ம-ா-ா-ஸ்ரீ M. ராகவையங்கார் அவர்களுடைய அன்பார்ந்த பிரேரேபணையை அதி வினயத்துடன் ஏற்று, இந்த நாடகத்திற்கு "ஸத்ய விஜயம்" என்னும் பெயரையும் இட்டு வெளியிடலானேன். அந்தப் பெரியாருடைய நன்மதிப்பை இந்த நாடகம் அடையப்பெற்றது நான் என்றும் மறக்கவொண்ணாத பெரும் பாக்கியம். முதற் பதிப்பிலிருந்த பிழைகளைத் திருத்தியும், இரண்டு இடங்களில் கொஞ்சம் அதிகமாகச் சேர்த்தும் இந்தப் பதிப்பை வெளியிட்டிருக்கிறேன். அளவும், விலையும்கூட குறைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பதிப்பை வெகு சீக்கிரத்தில் அச்சிட்டு வெளியிட எனக்கு உதவிய என் அத்யந்த நண்பரும், தமிழ் வழங்கும் தேசங்களெங்கும் பெயர் பெற்ற "ஆனந்த விகடன்" ஆசிரியருமான ம-ா-ா-ஸ்ரீ S. S. வாஸன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

விஜய விலாஸம்
பார்க் டவுன், சென்னை
1—12—1936

வீ. ஸீ. கோபாலரத்னம்

நாடக பாத்திரங்கள்

சந்திரசேகரன்	....	விக்ரமாதித்ய ராஜனுடைய புத்ரன்
விக்ராந்தன்	....	விக்ரமாதித்ய ராஜனுடைய மைத்துனியின் கணவன்.
கோதண்டன்	....	விக்ரமாதித்ய ராஜனுடைய ஸேனாதிபதிகளில் ஒருவன்.
துர்ஜயன்	....	விக்ரமாதித்ய ராஜனுடைய ஸேனாதிபதிகளில் மற்றொருவன்.
கந்தனன்	....	விக்ராந்தனுடைய நம்பிக்கையான வேலையாள்.
விஜயஸேனன்	....	ஸரோஜினியின் மந்திரிகளில் ஒருவன்.
வஸந்தன்	....	விக்ராந்தனுடைய ஏக புத்ரன்.
மேகநாதன், சாரங்கன்	....	மதாலஸையின் அரண்மனை உத்யோகஸ்தர்கள்.
மதாலஸை	....	விக்ரமாதித்ய ராஜனுடைய தங்கை; அவன் இறந்தபின் ராஜ்யத்தைக் கைப்பற்றியவள்.
தேவாங்கனை	...	விக்ராந்தனுடைய மனைவி.
ஸரோஜினி	....	துர்ஜயனுடைய மனைவி.
ம்ருநாளினி	....	விக்ராந்தன் மீது காதல்கொண்ட ஓர் உத்தம கன்னிகை.
கமலா, குமுதா	...	ம்ருநாளினியின் தோழிகள்.

கொத்தவால், ஸேவகர்கள், போர்வீரர்கள், தோஸாயிகள், ஸர்தார், மண்டலியார் முதலியவர்கள்.

ராஜ பக்தி

அங்கம் 1. களம் 1.

இடம் :—மதாலஸையின் மாளிகையில் ஓர் அறை.

(மதாலஸை படபடப்புடன் உலாவிக்கொண் டிருக்கிறாள். சாரங்கன், மேகநாதன் முதலிய அதிகாரிகளும், ஸேவகர்களும் நிற்கிறார்கள்.)

மதாலஸை :—"உலகழிந்தாலும், உயிரிழந்தாலும், கொண்ட உறுதி கொஞ்சமும் குன்றாது" என்று என்னிடமா சொல்லச் சொன்னான்?

சாரங்கன் :—ஆம், அம்மணி!—எனக்குத் தெரிந்த வரையில் விக்ராந்தரை அடக்குவது அசாத்தியமெனத் தோன்றுகிறது.

மதாலஸை :—அசாத்தியம்! மதாலஸைக்கும் அசாத்தியம் என்றுண்டோ? அவன் எனக்கு அடங்கவாவது வேண்டும், அல்லது அழியவாவது வேண்டும்! மேகநாதா! தூர்ஜயன் என்ன சொல்லுகிறான்?

மேகநாதன் :—மஹாராணியின் தாஸாநுதாஸனாய் இருக்க அவர் காத்துக் கொண்டிருக்கிறார்.

மதாலஸை :—நல்லது. இருவரையும் என்னெதிரில் அழைத்துக்கொண்டு வாருங்கள்.

(ஸேவகர்கள் போகிறார்கள்.)

(ஸ்வகதம்) என் மதிக்கு சிறிது அமைதி வேண்டும். அதொன்று என்னிட மில்லாததினாலோ விக்ராந்தன் என் காதலை திரஸ்கரிக்கிறான்—அதோ! அதோ! வரு

கிறன் அவனை வெல்லவேண்டு மென்றெண்ணிய என்னை வென்றவன்.

(உருவிய கத்திகளுடன் காவலாளர்கள் சூழ, சங்கிலிகளால் கட்டப்பட்ட விக்ராந்தன் பிரவேசம்.)

இந்நாட்டையாளும் எமது நட்பின் நன்மையையும் எம்மைப் பகைப்பதாலடையும் பயனையும், சீர்தூக்கிச் சிந்திக்க எமது சிறைச்சாலை சாலவும் ஏற்றது. சிந்தனை யேதாகிலும் செய்ததுண்டோ?—

உன்னைத்தான் விக்ராந்தா! என் சிறைச்சாலையின் சுகமெப்படி?

விக்ராந்தன்:—ரணகளத்தில் நாளுக்குநாள் அன்னபானமில்லாமல், அணுவும் கஷ்டமில்லாமல் காலத்தை ஸுகமாய்க் கழித்தவனும், கடுங் கானகத்தில் இரவோடிரவாய் விஷமூலிகைகள் மேலும் விஷப்பூச்சிகள் மேலும் கவலையற்று கம்பளியுமின்றி ஸுக நித்திரை புரிந்தவனும், பயங்கர மிருகங்களுடன் உறவாடி உய்ந்தவனும், ம்ருத்யுவின் முகத்தை நோக்கி முனிந்தவனுமா உன் காராக்ரஹத்திற்கும் அதிலியற்றப்படும் சேஷ்டைகளுக்கும் அஞ்சுவேன்?

மதாலஸை:—ஆஹா! அப்படியா? இன்னும் உன் கர்வம் அடங்கவில்லையா?

விக்ராந்தன்:—மதாலஸே! ஸுகதுக்க மென்னும் நூல்களால் நெய்திருக்கும் வஸ்திரமாகிய இந்த ஆயுளில் நன்மையும் தீமையும் மாறி மாறி ஸம்பவிக்கும். நன்மை வாய்க்கும்போது எப்படி நகைப்புடன் கொள்கிறோமோ அப்படியே தீமை நேரும்போதும் களிப்புடன் ஏற்க வேண்டும். அவ்வாறு செய்யாதவன் புருஷனல்ல, பேடி.

மதாலஸை—ஆனால் என் ஸார்வபௌமத்வத்தை திரஸ்கரித்து சந்திரசேகரனையும் என்னிடம் அகப்பட

விடாமல் காப்பாற்றிட ஸ்திர எண்ணமா கொண்டிருக்கிருய் ?

விக்ராந்தன் :—ஸத்யம் ! இத்தேகத்தில் ஒரு துளியேனும் ரக்தம் இருக்கும் பரியந்தம் இந்த விக்ராந்தனுடைய சிரம் தானுக உனக்கு வணங்குவதென்பதோ, அநாதையாய் ஆப்தரின்றி அலேந்திடும் அவ்வரச குமாரனே உனக்ககப்படச் செய்வதென்பதோ, இல்லே, இல்லே, கனவிலும் இல்லே. விடு ஆசையை.

மதாலஸை :—விக்ராந்தா ! ஆக்கவும், அழிக்கவும், அறவே மாற்றவும் எனக்கிருக்கும் சக்தியை அறியாயோ ?

விக்ராந்தன் :—ஆம் ! அறிவேன் ! உன் சக்ராதிபத்யத்தை நன்ருய் அறிவேன். உன் ஸாமர்த்தியமும், சக்ராதிபத்யமும் அநித்யமென்று நன்ருய் அறிவேன். சக்ராதிபத்யமெனும் செறுக்கினுல் மதம் கொண்டிருப்பவரை சிம்மாஸனத்துடன் அரை நிமிஷ நேரத்தில் பாதாளத்தில் தள்ளி, அந்தச் செறுக்கையும் கருவறுக்கக்கூடிய ஏக சக்ராதிபதி ஒருவன் மேலுலகில் மேன்மையுடன் மேவுகிருன். அவன் ஒருவனே ஸர்வேச்வரன், ஸர்வ சக்தி யுடையவன். மற்றவர் எல்லாம் பாமரர்களே. உன்னேயும் என்னேயும்போல் பலமற்ற நரர்கள் அவனே மறந்தும், மறுத்தும் தம் புல்லிய வன்மையைப் புகழ்வது புத்திஹீன மன்ருே ?

மதாலஸை :—விக்ராந்தா ! வேண்டாம் ! எனக்கிணங்கியிருந்தால் கலிங்க தேசத்து மணிமகுடம் உன் முடி மேல் விளங்கிடச் செய்வேன்.

விக்ராந்தன் :—சீ ! போதும். நிறுத்து இந்தப் பேச்சை, மூர்க்க ஸ்த்ரீயே ! இந் நீச வார்த்தைகளால் எனக்கு ஆசை காட்டி என்னே சீலம் துறந்த அற்பனுக்கவோ எண்ணினுய் ? மகுடத்தால் என் சிரத்தை நான் அலங்கரித்துக்கொள்ள மனங் கொண்டிருந்தால், இந்த

அற்ப கலிங்க தேசத்து முடி மகுடமல்ல, ஆனால் அன்று வரையில் ஆதவன் குலத்தோர் அழகாய் அணிந்து வந்து இன்று கொடுங் கால கதியின் விதி வசத்தால் உன்போன்ற அதம சண்டாளி யின் கலையின் ஸ்பர்சத்தால் நிமிஷத்திற்கு நிமிஷம் மங்குகின்ற அந்த ஸூர்யரேகாங்கித சுசோபித தை தீப்யமான ஸாம்ராஜ்ய ஜோதி மகுடம், இந்த பாக்ய சாலியின் முடிமேல் என்றோ விளங்கி யிருக்குமே. எவ னுடைய பராக்கிரமத்தைக் கண்டு பொங்கி மனங் களித்து இந்த ப்ரஹ்மாவர்த்த ஸாம்ராஜ்ய லக்ஷ்மி அவன் பாதமிடை மூன்று முறை புரண்டு வந்த னளோ, ஆனால் மதாலஸே! எவன் தன்னுடைய பூர் வீக வம்ச புண்ய நிஷ்களங்க பலத்தால் அவளை மும் முறையும் மறுத்தனனோ, அவனிடமா, அந்த விக்ராந்த னிடமா, கேவலம் குலிங்கனும் விரும்பாத இந்த கலிங் கத்தின் மகுடத்தைக் காட்டிச் சீலமற்றவனாக்கப் பார்க்கிறாய்?

மதாலஸை:—விக்ராந்தா! மூன்று முறை மூர்க்கத் தன மாய் இருந்தது போதும். இதோ மற்றொரு முறை அதே ஸாம்ராஜ்ய லக்ஷ்மி உன் முன் நிற்கிறாள். அங்கீ கரி. அதுவே உனக்குத் தகும்.

விக்ராந்தன்:—தகாது செய்வதையே தர்மமாய்க் கொண்டு, ஸத்யத்யாகம் புரிந்திட்ட உனக்குத் "தகும்". என் றும் "தகாது" என்றும் உரைத்திட என்ன அதி காரம்?

மதாலஸை:—அடே! "ஸத்பம்" "ஸத்யம்" என்று என் பிதற்றுகிறாய்? அது ஒரு பிசாசு. அது பைத்தி யக்காரருடைய கெட்டழுகிப்போன மூளையில் விளைந்த ஒரு துர்க்கந்த வஸ்து. அது புத்தி கெட்டவரையும் தர்மப் பைத்தியம் பிடித்தவரையும் பிடிக்கும் பயங்கர ரோகம். அந்த ஆலகாலத்தை அமிர்தமென்றெண்ணி

அதற்காக உன் போன்ற ராஜ்பாலங்கார புருஷன் தன் பிராணனையும் த்யாகம் செய்வது முழுதும் முற்றின மூடத்தனமே.

விக்ராந்தன் :—போதும். என் வீண் வார்த்தை. நான் மோசம் போக மாட்டேன்.

(கோதண்டனும் மேகநாதனும் துர்ஜயனை அழைத்து வருகிறார்கள்.)

மதாலஸை :—துர்ஜயா !

துர்ஜயன் :—மஹாராணீ ஸர்க்கார் !

விக்ராந்தன் :—ஆஹா ! துர்ஜயனா இவ்வாறு பேசுவது ?

மதாலஸை :—துர்ஜயா ! என் கோபாக்கி பொங்கி எங்கும் பரவி உலகினையே அழிக்கக் கூடியது. நீ இன்னும் யௌவன பருவத்தில் இருக்கிறாய். உன் அழகிய மனைவி உனக்கு சீக்கிரத்திலேயே சுபுத்ரனை கொடுத்திடும் ஸ்திதியிலிருக்கிறாள். யாவற்றையும் யோசித்து சொல்வதைச் சொல்.

துர்ஜயன் :—மதாலஸா மஹாராணி ! நான் உங்களுடைய அநந்யசரணாகதன்.

விக்ராந்தன் :—துர்ஜயா ! துர்ஜயா ! என்ன வார்த்தை ! யோசனை செய். ஈச்வர சாக்ஷியாய் நீ செய்திருக்கும் ராஜநிஷ்டா ஸத்யத்தை மறவாதே. அடே ! விக்ரமாதித்ய மஹாராஜா கொலையுண்டதற்கு வருந்திய ஜனங்களின் கண்ணீர் இன்னும் வறண்டு விடவில்லை. தங்கள் ஆப்தர் அகன்றனரே யென்று ராஜ ஸ்திரீகள் இடும் ஓலம் இன்னும் அடங்கவில்லை. அப்படியிருக்க நம்முடைய ஆபத்துக்கெல்லாம் காரணமாயிருக்கும் இந்தச் சண்டாளியை, பரம பவித்ரமான ஸூர்ய குல ஸிம்மாஸனத்தை ப்ரஷ்டம் செய்திருக்கும் இந்தப் பிசாசை வணங்குவது நமக்கு அழகா ? வேண்டாம். அழியா அபகீர்த்தியைத் தேடிக்கொள்ளாதே.

துர்ஜயன் :—அபகீர்த்தியைப் பற்றி இப்பொழுதென்ன கவலை? முதலுக்கே மோசம் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். உங்களுக்கும் நான் சொல்கிறேன், கேளுங்கள்............

விக்ராந்தன் :—போதும், நிறுத்து! உன் பிரசங்கத்தைக் கேட்க எனக்கு இஷ்டமில்லை. அழைத்துப் போங்கள் என்னை என்னுடைய துர்க்கந்த சிறைக்கு. இதனிலும் அதுவே மேல்.

மதாலஸை :—இரு, இரு. நீ இதையெல்லாம் பார்த்து அநுபவிக்க வேண்டும். துர்ஜயா! என்னுடைய ஸார்வ பௌமத்வத்திற்கு அடங்கி இருப்பாயா?

துர்ஜயன் :—மஹாராணி ஸர்க்காரின் கிருபை எப்பொழுதும் என்னிடம் இருக்க வேண்டும். மஹாராணியின் சரணத்தின் கீழ் தாஸாநு தாஸனாய் இருப்பதே என் கோரிக்கை.

(முழந்தாளிட்டு அவள் கால் இருக்கும் இடத்தை முத்தமிடப் போகிறான்.)

விக்ராந்தன் :—(பதறிக்கொண்டு) துர்ஜயா! துர்ஜயா!! நில்! வேண்டாம்!! யோசனை செய். குனியாதே தலையை. ....

(இதற்குள் துர்ஜயன் தரையை முத்தமிடுகிறான்.)

போ—போ——போ———திருப்தியாய், ரௌரவ நரகத்திற்கு அவளுடன். அழைத்துப் போங்கள் என்னை இங்கிருந்து.

மதாலஸை :—(சிரித்துக்கொண்டு) துர்ஜயா! எழுந்திரு. நீ என் ஆட்சிக்கு உண்மையாய் அடங்கி இருப்பதாய் ஸத்யம் செய்ததும் உன்னை விடுதலை செய்கிறேன். விக்ராந்தா! இதோ பார் உன்னுடன் இருந்த ஸ்நேகிதரும் உனக்கு விரோதமாய் விட்டார்கள். இனியாவது உன் சிரத்தால் என் பாதங்களில் வணங்க மாட்டாயா சொல்.

விக்ராந்தன் :—இந்த சிரமா? உன் காலிலா?

மதாலஸை :—ஆம்! ஏன் கூடாது? பிரம்மாவர்த்தத்தின் பிரதாப தேவதையின் சரணங்களுக்கு உன் சிரம் வணங்கினாலாகாதோ?

விக்ராந்தன் :—எந்த ராஜத்ரோஹி உன் பாததூளியை நெற்றியில் பூஷணமாய் அணிகிறானோ, அவனிடம் உன் பிரதாபமெல்லாம் செல்லும். ஆனால் ஸூர்ய குலத்தின் ஸத்யமான ஸேவகனிடம் அது செல்லாது. நீ மிருத்யுவினுடைய ஸஹோதரி. படுகொலைக்குப் பிறப்பீந்த தாய். உன் ஆதீனத்திற் கடங்கியிருக்க மானமுடையோன் எவனும் ஒப்பான். நீ எனக்கு ராணியுமல்ல. நான் உனக்கு ப்ரஜையுமல்ல. நீ நின்றிடும் திக்கையும் நோக்கி என் சிரம் வணங்காது.

மதாலஸை :—நன்றாய் யோசனை செய். கடுஞ் சிறையில் படமுடியாத கஷ்டங்களை யெல்லாம் படவேண்டியிருக்கும்.

விக்ராந்தன் :—படுகொலைக்காரீ! பாபாசாரப் பேயே! பெண் பூதமே! உனக்கு பயந்தாய் உலகெங்கும் உலாவுவதிலும் என் துர்க்கந்தச் சிறையின் துஸ்ஸமான ஹிம்சையை யெல்லாம் துக்கமின்றி ஸகிப்பேன்.

மதாலஸை :—படுகொலைக்காரீ! பாபாசாரப் பேயே! பெண் பூதமே!

கோதண்டன் :—விக்ராந்தா! இந்த அவமரியாதையான சொற்களை யார் முன்னிலையில் பேசுகிறாய் என்று தெரியவில்லையா?

விக்ராந்தன் :—ஆஹா! தெரியும்! நன்றாய்த் தெரியும்! நீசமான காமாந்தகாரத்திற் குட்பட்டு எவள் தேவதாஸமான பூஜிதனான பதி தன் மடிமீது தலைசாய்த்து அயர்ந்து நித்திரை புரிந்திடும் வேளையில் தன் கரங்களினாலேயே அவருடைய உயிரை மாய்த்தனளோ, எவள்

ஸாம்ராஜ்யமெனும் மாயையைத் தேடி உன் மூல மாகத் தன் உடன் பிறந்த உத்தம ஸகோதரனையே கொன்றனளோ, இன்னும் எவள் பால்மணம் மாருத பாலகனுன தன் மருகனின் ரக்தத்தில் ம்ருதுவான தன் கைகளைத் தோய்த்து, பதிஹத்தியென்னும் அஸ்தி வாரத்தின் மேல் ப்ராத்ருஹத்தியெனும் மாளிகை யைக் கட்டி, பாலஹத்தியெனும் கலசத்தை அதன் மேல் ஸ்தாபிக்கக் கருதியிருக்கிருளோ அந்தக் குரூர ராக்ஷஸியின் முன்னிலையில் பேசுகிறேனென்று நன் ருய்த் தெரியும்.

மதாலஸை :—மூடு வாயை! மூடு இக்ஷணம்! உன்னுவைப் பிடுங்கி எறிந்திடச் செய்வேன்.

சாரங்கன் :—விக்ராந்தரே, இப்படி அவமான மடைவது சரியில்லை.

விக்ராந்தன் :—கொப்பளித்துப் பற்றி யெரியும் கொடுமலை யின் வாயினின்றுச் செந்தழலும் செழுந் தீயுமன்றி வேறென்ன வெளிவரும்?

மதாலஸை :—ஆஹா! அந்த அக்னி மழைபொழியும் எரி மலையின் அகத்தீயை வேருடன் களைந்தெறிவேன் இக்ஷணமே.

விக்ராந்தன் :—அமர்க்களத்தில் கத்திகளின் கணகண சப் தத்திலும் பேரிகைகளின் கடகட சப்தத்திலும் ஸதா இருந்து வளர்ந்து வந்தவனுக்கு ஒரு ஸ்திரீ செய்யும் குணுகுண சப்தமா பீதியை உண்டாக்கும்?

மதாலஸை :—வீரம்! வீரம்! யாரிடத்தில் வீரம்? மஹா ராணி மதாலஸையிடமா வீரம்? மண்டலத்தை யாளும் மதாலஸையிடமா வீரம்? மாரகனும் மருண்டோடும் மாகாளியிடமா வீரம்? விக்ராந்தா, பார்! பார்! உன் வீரத்தின் விதியை. கோதண்டா! நாளை ஸூர்யாஸ்த மனத்திற்கு ஸரியாய் வஸந்த மண்டபத்தில் நான்

ரமித்திடும் வேளையில் இந்த மதோன்மத்தனுடைய மஸ்தகம் மண்மீது புரண்டு என் மணிபாதத்தை முத்த மிட வேண்டும். வீரம்! வீரம்!

(போகிறாள்)

கோதண்டன் :—மஹாராணி! ஆக்ஞைப்படி.

(விக்ராந்தன் சிரித்தவண்ணம் மேலே பார்க்கிறான்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 1. களம் 2.

இடம் :—ம்ருநாளினியினுடைய தங்கமயமான மாளிகை.

(ம்ருநாளினியும், ஸரோஜினியும், கமலா, குமுதா முதலிய தோழிகளுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

கமலா :—அம்மா ம்ருநாளினி! ஏன் உன் மனம் இன்று வாட்ட மடைந்திருக்கிறது?

ம்ருநாளினி :—ஆம், வாஸ்தவந்தான். எனக்கென்னமோ, உலகத்தின்மீது வெறுப்புத் தோன்ற ஆரம்பித்துவிட் டது.

சரோஜினி :—ம்ருநாளினி! இவ்வாறு நீ உலகையே வெறுத் தால் அப்புறம் எங்குதான் நீ போயிருப்பது?

ம்ருநாளினி :—ஆம், எங்கு போவது? ஸ்வர்க்கத்தில் வாழ்ந்தாலும் பிரிய வஸ்துவின் ஸமீபமின்றி ஸுக மெங்கிருந்து வந்திடும்?

கமலா :—பிரிய வஸ்துவை யடைய வேண்டுபவர் ஸுலப மாய் கிட்டக் கூடியதை விரும்ப வேண்டும். துர்லப வஸ்துவின் மீது ஆசை வைத்தால் துக்கம்தான் சம்ப விக்கும்.

ம்ருநாளினி :—துர்லப வஸ்துவென்பதே இல்லை. அகண்ட பக்தியினால் அரனையும் அடையலாம்.

கமலா :—பரமேச்வரனை யடைய வேண்டுவோர் ஸர்வ ஸங்க பரித்யாகம் செய்ய வேண்டுமே. நீங்கள் இந்த யௌவன பருவத்தில் அவ்வித த்யாகம் செய்வது சரியா ?

குமுதா :—ஸரியோ இல்லையோ. இப்பொழுதே முக்கால் ஸந்நியாசம்தானே !

ம்ருநாளினி :—குமுதா ! உலகில் ஒவ்வொரு பருவப் பெண்ணுக்கும் ச்ரேஷ்டமான வஸ்துவின்மேல் ஆசை வைத்து ஸந்நியாசினியாய்ப் போய்விடுவது ஸாத்யமன்று. விக்ராந்த மஹாராஜாவைப் போன்ற லோகோத்தர குணவான்மேல் என்மனம் நாடினது என் புண்ணியமே. ஸாமான்யப் பெண்கள் கண்களாலும் நாடமுடியாத உத்தம புருஷன் மீது என் மனம் நாடியது என் பாக்கியம். விக்ராந்த மஹாராஜாவைப் போன்ற மஹா புருஷனை யடைவதென்றால் ஒன்றில்லை, பத்துஜன்மம் தபஸ்வினியாய் இருந்திடுவேன்.

ஸரோஜினி :—ஆனால் தபஸ்வினியாய் இருந்து காலம் கழிப்பதனாலேயே அவரை யடைய முடியுமோ ?—ஊம் ?

கமலா :—நீ அவர்மேல் காதல் கொண்டிருக்கிறாய் என்றாலும் அவர் அறிவாரா?—அவர் உன் போல் கல்யாணமாகாதவரன்றே ?

குமுதா :—அவருக்கும் அவருடைய பத்னியின்மேல் அத்யந்த விச்வாஸ மாயிற்றே ?

ஸரோஜினி :—அவர் தேவாங்கனையை விட்டு உன்மீது காதல் கொள்வது அரிதாயிற்றே ?

ம்ருநாளினி :—தேவி தேவாங்கனையிடம் அவர் வைத்திருக்கும் அன்பு மாறி என்னிடம் திரும்ப வேண்டுமென்று நான் கனவிலும் நினைப்பவளன்று. தேவாங்கனா தேவியின் அந்தஸ்துக்கு அருகிலாவது அணுகிட எனக்கு யோக்யதை யில்லை யென்று நன்றாய் அறிவேன்.

விக்ராந்த மஹாராஜாவின் காதலான நந்தவனத்தில் அவள் நன்ருய் உலாவட்டும். அத் திவ்ய வனத்தில் ஒரு மூலையில் ஒரு குடிசை போட்டுக்கொண்டு நானிருக்க மாத்திரம் ஸம்மதிக்கட்டும்.

(உள்ளே பெருத்த ஆரவாரம்.)

கந்தனன் :—(உள்ளிருந்தே) விடுங்கள்! விடுங்கள்! நான் உள்ளே போக வேண்டும். என் தாயைப் பார்க்க வேண்டும்.

ஸேவகன் :—போ வெளியே! இல்லா போனு பிடிச்சுத் தள்ளுவேன்.

கந்தனன் :—ஆனல் தடுத்துக் கொள்ளுங்கள், முடிந்தால்.

(உடம்பெல்லாம் ரக்தமும் மண்ணும் படிந்து, தலைமேல் ஒரு பெரும் பெட்டியை எடுத்துக்கொண்டு பிரவேசிக்கிருன். அவனுடன் ஆரவாரம் செய்துகொண்டு ம்ருநாளினியின ஸேவகர்கள் வருகிருர்கள்.)

கந்தனன் :—(பெட்டியை ம்ருநாளினியின் முன் வைத்து) அம்மணீ! சரணுகதனைக் காப்பாற்ற வேண்டும். தயை செய்து தங்க இடம் தர வேண்டும். விக்ராந்த மஹாராஜாவின் பேருக்காக இப் பேருதவி செய்ய வேண்டும்.

ம்ருநாளினி :—விக்ராந்த மஹாராஜாவின் பேருக்காகவா? அவருக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம்?

முதல் வேலையாள் :—ஸம்பந்தமில்லே கிம்பந்தமில்லே. சுத்த பொய்.

இரண்டாம் வேலையாள் :—இவன் யாரோ பெரிய திருடன்

கந்தனன் :—இல்லே, இல்லே. நான் மஹாராஜா விக்ராந்தருடைய ஸேவகன். விக்ரமாதித்ய மஹாராஜாவின் விலேயற்ற செல்வங்கள் இப் பெட்டியில் இருக்கின்றன. ராணியின் அதிகாரிகள் இவைகளேக் கொள்ளேயடிக்கப் பார்க்கிருர்கள். என்னே அவர்கள் துரத்தி வரவே

இங்கே புகுந்தேன். என்னைக் காப்பாற்றுங்கள். மஹாராஜா விக்ராந்தர் பேரைக் காப்பாற்றுங்கள்.

முதல் வேலையாள் —பொய்! பொய்! முழுப் பொய்.

ம்ருநாளினி :—(வேலையாட்களை நோக்கி) முன்பு நீங்கள் வெளியில் போய் அரண்மனைக் கதவுகளையெல்லாம் மூடி விடுங்கள். யாராவது சோதனை செய்ய வந்தால் இங்கு ஒருவரும் வரவில்லையென்று சொல்லி விடுங்கள். ஜாக்கிரதை, போங்கள். (வேலையாட்கள் போகிறார்கள்) (கந்தனனிடம்) உன் உடம்பெல்லாம் ரக்தமாயிருக்கிறதே, ராணியின் ஸேவகர்களுடன் யுத்தம் செய்தனையா ?

கந்தனன் :—ஆம், அம்மணி. அவர்களில் நாலைந்து பேரை என் கத்திக்கிரையாக்கினேன். நானும் காயப்பட்டேன். ஆயினும் பெரிதல்ல.

ம்ருநாளினி :—நீ விக்ராந்த மஹாராஜாவினுடைய ஸேவகனென்றுரைப்பதால் உன்னை நம்பி உனக்கு அடைக்கலம் கொடுக்கிறேன். நீ உரைத்தது வாஸ்தவமாயில்லாவிட்டால்........

கந்தனன் :—அம்மணீ வேண்டாம். அப்படி ஏற்பட்டால் என் தலையைச் சேதித்துவிட உத்தரவிடுங்கள்.

முதல் வேலையாள் :—(ப்ரவேசித்து) அம்மணி! ராணி வேலைக்காரரு உள்ளே பூந்து ரொம்ப தொந்தரவு பண்ராங்க. நாங்க கதவுங்களெ மூடரத்துக்கு முன்னே பூந்துட்டாங்க.

ம்ருநாளினி :—ஸரி. ஆனால் அந்தப் பெட்டியை அங்கே வைத்து அதன்மேல் இந்த வஸ்திரத்தைப் பரப்புங்கள்.

(ம்ருநாளினி குமுதாவிடம் ஏதோ காதில் சொல்ல அவள் உள்ளே சென்று ஒரு புடவையைக் கொண்டு வருகிறாள்.)

(கந்தனைப் பார்த்து) அப்பா, இதோ இந்தப் புடவையை உடுத்திக்கொண்டு என் தாதியருடன் ஒரு புறமாய் இரு. ஜாக்கிரதை.

(சந்தனன் அதை வாங்கிக்கொண்டு ஒரு புறமாய்ப் போய்க் கட்டிக் கொள்கிறான்.)

கமலா! குமுதா!! நீங்களும் மற்ற தாதியரும் ஏதேதோ வேலைகள் செய்வதுபோல் நடியுங்கள். ஸரோஜினி! வா! என்னருகிலேயே இரு.

(கந்தனன், கமலா, குமுதா முதலியோர் ஒரு புறமாய்ப் போகிறார்கள். ம்ருநாளினியும், ஸரோஜினியும் பெட்டியின்மேல் உட்கார்ந்து பேசுகிறார்கள். ஒரு தாதி வழி காட்ட, கொத்தவாலும், இரண்டு சிப்பாய்களும் பிரவேசிக்கிறார்கள்.)

ம்ருநாளினி :—யார் நீங்கள்? இவ்வேளையில் இம்மாதிரி இங்கு வர என்ன காரணம்?

கோத்தவால் :—அம்மணி, மன்னிக்கவேண்டும். ஒரு கைதி தப்பித்துக்கொண்டு ஓடி வருகையில் இங்கே புகுந்தான். ஆகையால் இங்கே சோதனை செய்து அவனைப் பிடித்துப்போக வந்தோம்.

ம்ருநாளினி :—(தன் ஸேவகனைப் பார்த்து) யாராவது சற்று முன் நமது அரண்மனையுள் புகுந்தனரா?

ஸேவசன் :—இல்லையே அம்மணீ!

மு. ஸிப்பாய் :—ஏயா? அவர் தலேமேலே பெரிய பொட்டி இல்லே?

இ. சிப்பாய் :—இல்லியா? நொழையும்போது நான் பார்த்தேனே?

ஸேவகன் :—நா பாக்கலயே!

மு. சிப்பாய் :—முழுப் பொய்.

கோத்தவால் :—அம்மணீ! இவர்கள் ஸர்க்கார் ஸிப்பாய்கள். இவர்கள் கண்களுக்கு ஒன்றும் தவறுதலாப் படாது.

இ. ஸிப்பாய் :—அதுவும் இருட்டிலே படவே படாது.

ம்ருநாளினி :—வாஸ்தவம்! ஐயா! உங்களுக்கேன் வீண் ஸந்தேஹம். நீங்கள் தடையின்றி முழுதும் சோதித்துச் செல்லுங்கள்.

கோத்தவால் :—அம்மணீ! நான் என்ன செய்வேன்? சட்டப்படி நடக்க வேண்டியவன். அடே! நீங்கள் போய் முழுதும் சுற்றிச் சோதித்து வாருங்கள். நான் இங்கேயே இருக்கிறேன்.

(ஸிப்பாய்களும், அவர்களுடன் ம்ருநாளினியுடைய ஆட்கள் சிலரும் போகிறார்கள்.)

ம்ருநாளினி :—இது என்ன விஷயம்? தயவுசெய்து எனக்கு தெரியும்படி சொல்ல வேண்டும். உட்காருங்கள்.

கோத்தவால் :—அம்மா! உங்கள் உபசாரத்திற்காக மிகவும் வந்தனம். இரண்டு நாழிகைகளுக்கு முன் ஒருவன் ஒரு பெரிய பெட்டியுடன் இராஜ வீதியில் போகையில் காவற்காரர் ஸந்தேஹித்து அவனை நிறுத்த, அவன் உடனே தன் கத்தியை உருவி, ஐந்து பேரைக் கொன்று விட்டு பெட்டியுடன் ஓடி வந்து உமது வீட்டில் புகுந்தான்! ஆகையால்............

(ஸிப்பாய்கள வருகிறார்கள்.)

மு. ஸிப்பாய் :—ஸர்க்கார்! அவே எங்கியும் ஆப்டலே.

கோத்தவால் :—நீங்கள் ஸரியாய் பார்க்கவில்லை. பார்த்தால் அகப்படுவான்.

ம்ருநாளினி :—இல்லாத இடத்தில் பார்த்தால் எங்கு அகப்படுவது?—அவன் எங்கே புகுந்தானோ?

கோத்தவால் :—அம்மா! அதில்தான் எங்கள் ஸாமர்த்தியம் இருக்கிறது. நான் பார்க்கிறேன். (அறை முழுதும் சுற்றிப் பார்க்கிறான்.)

ம்ருநாளினி :—ஐயா! நன்ருய்ப் பாருங்கள். அதோ அவர்கள் என் தாயியர். (எழுந்து) ஸரோஜினி! எழுந்திரு. நாங்கள் உட்கார்ந்திருந்த இந்த ஆஸனத்தின் கீழ் பார்க்கிறீரா ?

கோத்தவால் :—அம்மா! உங்களுக்கு சிரிப்பாய் இருக்கிறது. இருட்டில் அலேவது எங்களுக்குத் தெரியும்.

மு. ஸிப்பாய் :—ராவெ என்னுத்துக்கு பண்ணு சாமி? திருடர்த்துக்கு பண்ணு. அதைக் கண்டு பிடிக்றதுக்கா பண்ணு ?

கோத்தவால் :—நன்ருய் சொன்னுய். அம்மணீ நான் உங்களுக்கு மிகவும் சிரமம் கொடுத்தேன். க்ஷமிக்க வேண்டும்.

ம்ருநாளினி :—க்ஷமிப்பதென்ன? உங்கள் கடமையைச் செய்தீர்கள்.

கோத்தவால் :—(மிகவும் ஸந்தேஹத்துடன்) "ஊ—ம்" இவ்வளவு கெட்டிக்காரர் அகப்படுவார்களா? ஒரு வேளே நாளே காலேயில் கூட வந்தாலும் வரவேண்டியிருக்கும், மன்னிக்க வேண்டும். நான் வருகிறேன்.

(மெல்லத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு ஸிப்பாய்களுடன் போகிருன்.)

ம்ருநாளினி :—ஸேவகா, அவர்கள் பின்னுல்போய் என்ன செய்கிருர்கள் என்று பார்த்துவா. கந்தனு! இப்பொழுது என்னமோ தப்பிவிட்டோம். இனி என்ன செய்வது ?

கந்தனன் :—அம்மா! இந்த பேருபகாரத்திற்கு நான் என்ன செய்வது? உங்கள் சாதுர்யமும் புத்தி கூர்மையும் காப்பாற்றி யிராவிடில் என்னென்ன அநர்த்தங்கள் ஸம்பவித்திருக்குமோ? நீங்கள் செய்திருக்கும் உபகாரத்தின் மஹிமை இந்தப் பெட்டியிலடங்கி யிருக்

கும் விக்ரமாதித்ய மஹாராஜாவினுடைய அமூல்யமான நிதியை ஒருமுறை பார்ப்பீர்களானால் தெரிய வரும்.

ம்ருநாளினி :—ஆஹா! அதென்ன? அந்த நிதியைத்தான் பார்ப்போம்!

கந்தனன் :—(பெட்டியைத் திறந்து) பாருங்கள் அம்மணி. பாருங்கள்! விக்ரமாதித்யருடைய விலையிலா நிதியை.

(ம்ருநாளினியும், ஸரோஜினியும், பெட்டியினுள் மூர்ச்சையாய் சந்திரசேகரனிருப்பதைப் பார்த்து ஸ்தம்பித்து நிற்கிறார்கள்.)

உயிர் துறந்த மஹாராஜரின் உத்தம குமாரன் உறங்குவதைப் பாருங்கள்.

ம்ருநாளினி :—யாரிது? சந்திரசேகர மஹாராஜாவா?

ஸரோஜினி :—இந்த ஸ்திதிக்கு எப்படி வந்தார்?

கந்தனன் :—பயப்பட வேண்டாம். அவர் உயிருக்குப் பயமில்லை. மயக்கமாயிருப்பதற்கு மருந்து கொடுத்திருக்கிறது.

ம்ருநாளினி :—இதற்கெல்லாம் என்ன காரணம்?

கந்தனன் :—மதாலஸையிடமிருந்து காப்பாற்ற வேண்டுமென்று விக்ராந்த மஹாராஜா இவரை வெகு ரகஸ்யமாய் வைத்திருந்தார். வெகு நாளாய்த் தேடி ராணியின் ஸேவகர் அந்த இடத்தைக் கண்டு பிடித்து விட்டார்கள். உடனே தேவி தேவாங்கனையின் உத்தரவுப்படி இவரை இப் பெட்டியில் மறைத்து, மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லும் வழியில் இந்த விக்னம் ஏற்பட்டது. உங்கள் கிருபையால் நிவர்த்தியாயிற்று.

ம்ருநாளினி :—நான் என்ன செய்தேன். பரமேச்வரன் கிருபையால் மீண்டோம். எடுத்துச் செல்வோம் இவரை உள்ளே.

கந்தனன் :—அம்மணி. இது வெளியில் தெரிந்தால்...........

ம்ருநாளினி :—உனக்கு அந்தக் கவலை வேண்டாம். இனி நான் உத்தரவாதம்.

(ம்ருநாளினியும், ஸரோஜினியும் ஏதோ ரஹஸ்யமாய்பேசு கிறார்கள்)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 1. களம் 3.

இடம் :—சந்திரசேகரனை மறைத்து வைத் திருந்த இடம்.

தேவாங்கனை :—மனமே! பதறாதே! கொண்ட உறுதியில் கொஞ்சமும் குன்றாதே. இன்றே உன்னை சோதித் திடும் நாள்—பதியின் பாழில்லாப் புகழ்—என் கண் ணினும் அரிய கண்மணி, ஏக புத்ரன்—இவை யிரண் டில் முதற் சொன்னதையே முன்கொண்டு காத்திட வேண்டும். மைந்தன் மேல் கொண்ட பாசத்தால் மனந் திரும்பி பதியின் பாழில்லாப் பேரைப் பழுது படச் செய்தால், தெய்வ கடாக்ஷத்தையும் இழந்து, உலக சுகத்தையும் துறக்க வேண்டியதுதான்—ஐயோ! என் உதரத்தில் உதித்த உத்தம மைந்தனல்லவா? எப்படி அவனை என் கையால் நானே சத்ருக்களின் கத்திகளுக்கு காட்டிக் கொடுப்பேன்? தெய்வமே! இது வரையில் எவளாவது இவ்வுலகில் தான் பெற்ற மைந்தனையே கொலைக் களத்திற்கு அனுப்பி யிருக்கி றாளா?——சீ! என்ன புத்திஹீன சபலம்! தன் னுடைய நற்பேரைக் காக்க வேண்டுமென்ற கருத் துடையோர் உலகில் யாவற்றையும் இழந்துவிட ஸித்த மாயிருக்க வேண்டும். அப்படியிருக்க ஏன் இந்த அஞ் ஞான இருள் வந்து என்னை மயங்கிடச் செய்ய வேண் டும்—மஹாராஜா விக்ராந்தருடைய பத்னி புத்திர பாசத்தால் முறை தப்பி ராஜத்ரோஹம் புரிந்தாள்

என்னும் அபக்யாதியை நான் எவ்வாறு பொறுப்பேன்? இல்லே! இல்லே!! ஒரு நாளும் அந்த அபக்யாதி ஸம்பவித்திடாது. என் மனதைக் கலக்கிச் சலனப்படுத்தும் பாப பாசமே! இதோ உன்னே வேருடன் களேந்தெறிந்தேன். என் மனதிற் குடிகொண்ட தெய்வீக புருஷார்த்தத்தைக் கோரி இதோ புறப்பட்டேன். புத்திர பாசத்தால் கட்டுண்டு என் பர்த்தாவின் பரம பாவன கீர்த்தியைக் கொளுத்தி யழிக்கவோ நான் உடன்படுவேன்?—"நீ உன் மனம்போல் செய். ஆனல் சந்திரசேகரனே மட்டும் ஸமஸ்தத்தையும் கொடுத்து ஸம்ரக்ஷித்திடு" என்று என் பதி என்னிடம் இட்டுச் சென்ற தீர்க்க ஆணையைக் கடப்பேனு? பதினெட்டு நாட்களாய் அமானுஷமானதும், கோரமானதுமான காராக்ரஹத்திலிருந்து ஸகல கஷ்டங்களேயும் அநுபவித்துக்கொண்டு அவர் காப்பாற்றி வரும் அவருடைய நற்பேரை, அவரை அக்னி ஸாக்ஷியாய் மணந்த பத்னியும், அவருடைய பூரண விச்வாஸத்திற்குப் பாத்திரமானவளுமான நான் என் மைந்தன் மேல் கொண்ட மோஹத்தால் மயங்கி நாசமாக்குவது தர்மமா?—ஸரி. தர்மரக்ஷணர்த்தம் என் மைந்தனேயும் இன்று மனமார இழப்பேன்.

(வஸந்தன் பிரவேசம்)

கண்ணே வஸந்தா! நீ க்ஷத்திரிய வீரருடைய குமாரனல்லவா? .

வஸந்தன் :—அம்மா! அதற்கென்ன ஸந்தேஹம்?

தேவாங்கனே :—உன் தந்தையின் கிர்த்தி எவ்வளவு விசாலமானது தெரியுமா?

வஸந்தன்—நன்ருய்த் தெரியும். ஸர்வலோக ஜனங்களும் என் தந்தையின் நாமத்திற்கு "ஜய" "ஜய" கோஷம் செய்கிருர்கள்.

தேவாங்கனே :—கண்ணே! அது என் சொல்.

வஸந்தன் :—அம்மா ! என் தந்தையின் பராக்கிரமம் அப்படிப்பட்டது.

தேவாங்கனை :—வஸந்தா ! அவ்வளவு பராக்கிரமும் கீர்த்தியும் படைத்தவருடைய புத்ரன் அவருக்கேற்க நடந்துகொள்ள வேண்டாமா?

வஸந்தன் :—அம்மா, அப்படியே நடந்துகொள்வேன். என் தந்தையைப் போல் சௌர்யவானுய் பெருத்த போர்களி லெல்லாம் வென்று சந்திர சேகர மஹாராஜாவினுடைய வைபவத்தை வளர்த்துவேன். அப்படியே அவர்முன் நான் ஸத்தியம் செய்திருக்கிறேன்.

தேவாங்கனை :—ஆனல் யுத்தத்தில் சத்ருருக்களின் கையால் நீ மடிந்து விட்டால் ?

வஸந்தன் :—அதனு லென்ன ? என் அரசனுக்காக என் உயிரைக் கொடுத்தால் கீர்த்தியும், பதமும் கிடைக்கும்.

தேவாங்கனை :—ஆனல் அரசனுக்காக யுத்தமில்லாமல் மற்ற சந்தர்ப்பங்களில் மரணம் ஸம்பவித்தால் ?

வஸந்தன் :—அம்மா ! அதனுலென்ன ? ராஜாவுக்காக உயிரைக் கொடுக்க வேண்டியதே முதல் கடமை. யுத்தத்தினுலென்ன? வேறெப்படியானு லென்ன ?

தேவாங்கனை :—ஆனல், நான் சொல்வதைக் கவனமாய்க் கேள். சந்திர சேகரனை நாம் இங்கு வைத்திருந்ததை யறிந்து மதாலஸையின் தூதர்கள் அவனைப் பிடித்துப் போக இங்கு வந்தால், நீ அவனுக்காக உன் உயிரைக் கொடுக்க ஸித்தமா யிருக்கிருயா ?

வஸந்தன் :—அம்மா ! எப்பொழுதும் ஆவலுடன் ஸித்தமா யிருக்கிறேன். நீ வேடிக்கை பார்க்கிருயா ? இதோ போய் என் வாளைக்கொண்டு வருகிறேன்.

(போக முயல்கிறுன்.)

தேவாங்கனை :—இரு. க்ஷத்ரிய வீரம் வாய்ந்த நீ மத்தகஜம் போன்றவன். ஆனல் கண்ணே, ஒருவேளை உன்

கையில் வாளுமின்றி நிராயுதனுய் உயிர் இழக்க வேண்டிவரின் என்ன செய்வாய்?

வஸந்தன் :—அம்மா! வாளையும் வீசாமல் உயிரிழப்பதென்ருல் அது எப்படி முடியும்?

தேவாங்கனே :—(ஒரு மருந்து புட்டியைக் காட்டி) அப்பா! இதில் மயக்கத்தைக் கொடுக்கும் மருந்திருக்கிறது. இதை சாப்பிட்டுவிட்டு உன் மஞ்சத்தின்மேல் படுத்து நன்ருய் உறங்க வேண்டும்.

வஸந்தன் :—தூங்கிக்கொண்டு எப்படி சாவதம்மா?

தேவாங்கனே :—ராணியின் தூதர்கள் வந்தால் சந்திரசேகரன் நீதான் என்று காண்பிக்கின்றேன். உன்னைக் கொன்றுவிடுவார்கள்.

வஸந்தன் :—சே! அம்மாதிரி உயிரிழக்க நான் ஒரு நாளும் சம்மதியேன்.

தேவாங்கனே :—ஆனல் சந்திர சேகரனுடைய பிராண ரக்ஷண மெப்படி யாகும்?

வஸந்தன் :—ஏன் ஆகாது?

தேவாங்கனே :—கண்ணே! நான் சொன்ன உபாயப்படி செய்யாவிடில் சந்திரசேகரன் உயிருடனிருக்கிருனென்று மதாலஸை எங்கும் தேடவாரம்பித்தால் எப்படியாவது அவனைக் கண்டுபிடித்து விடுவாள். ஆனல் நான் சொன்னபடி செய்தால் சந்திரசேகரன் இறந்துவிட்டானென்று நம்பித் தேடுவதை நிறுத்திவிடுவாள். அப்பொழுது அவனை ரக்ஷிப்பது மிகவும் ஸுலபம்.

வஸந்தன் :—(யோசிக்கிருன்).

தேவாங்கனே :—மரணத்திற்கு அஞ்சுகிருயா?

வஸந்தன் :—சே! விக்ராந்த மஹாராஜாவின் புத்திரனுக்கு மரண மென்னும் பயமும் உண்டாகுமோ?

தேவாங்கனை :—உனக்குத் 'தாய்' 'தகப்பன்' என்னும் பந்தம் விடவில்லையா?

வஸந்தன் :—அம்மா நான் சிறியவனுதலால் நீ அப்படி நினைப்பது சகஜம். ஆனல் நான் சுத்த க்ஷத்ரியன். சுத்த க்ஷத்ரியனுடைய சித்தத்தைக் கலக்கக்கூடிய மாயை இவ்வுலகிலில்லை.

தேவாங்கனை :—ஆனல் என்ன யோசனை செய்கிருய்?

வஸந்தன் :—தூக்கத்தில் ராணியின் தூதரின் கத்திக்கிரை யாவது பிடிக்கவில்லை.

தேவாங்கனை :—கண்ணே! வேறு வழியில்லையே!

வஸந்தன் :—ஏன் இல்லை? தூங்கும்போது நான் சந்திர சேகர மஹாராஜாவைப் போலிருந்தால் விழித்திருக் கும்போது ஏன் அப்படி இருக்க முடியாது!

தேவாங்கனை :—ஆனல்?

வஸந்தன் :—ஆனல் என்ன? ராணியின் தூதர்கள் வந்தால் கொஞ்சமும் யோசிக்காமல் நான்தான் சந்திரசேகர மஹாராஜாவென்று என்னைக் காட்டிவிடு. நானும் அவ் வாறே நடிக்கிறேன். பிறகு என்ன கஷ்டம்?

தேவாங்கனை :—(வாரிக் கட்டி யணைத்து முத்தமிட்டு) கண்ணே! கண்ணே!! மெச்சினேன்! பரமேச்வரா! என் உயிரினும் அரிய இக்குழந்தைக்கும்...............

(கண்ணீர் விடுகிருள்.)

வஸந்தன் :—அம்மா! கண்ணீர் விடாதே. சற்றுமுன் மாயை, பந்தம் என்னை விடவில்லையென்று ஏளனம் செய்தாயே. நீ இப்பொழுது அவைகளுக்கு உட்பட லாமா?

தேவாங்கனை :—கண்ணே அப்படியில்லை. உன்னை இழந்து விடப் போகிறேனே யென்று நான் அழவில்லை. உன் புத்தி கூர்மையைக் கண்டு என் கண்களில் ஆனந்த

பாஷ்பம் பொழிந்தது. வேறில்லை. (கட்டி யணைக்கிருள்)

(வெளியில் "யாரங்கே! தேவாங்கனே!! கதவைத் திறவுங்கள்" என்ற ஆரவாரம்.)

தேவாங்கனை :—ஐயோ! அதோ வந்துவிட்டார்களே யம தூதர்கள். என் கண்ணே மரித்திட ஸித்தமாயிரு.

வஸந்தன் :—ஸித்தமா யிருக்கிறேன். (உள்ளேபோக முயல்கிருன்)

தேவாங்கனை :—(அவனைத் தடுத்து) ஆனல் கொஞ்சமிரு. நீ அம்மருந்து சாப்பிடுவதே எனக்கு நல்லதென்று தோன்றுகிறது.

வஸந்தன் :—இல்லை, வேண்டாம், ஒருநாளும் மாட்டேன்.

தேவாங்கனை :—ஐயோ! உன்னை சந்திரசேகரனைப்போல மாற்றி மோசம் செய்வது கஷ்டமாயிற்றே.

வஸந்தன் :—அதைப்பற்றி நீ பயப்படாதே.

தேவாங்கனை :—இல்லை, இல்லை; நீ இதை குடிக்கத்தான் வேண்டும்.

வஸந்தன் :—மாட்டேன்.

(வெளியில் முன்போல் ஆரவாரம்)

தேவாங்கனை :—நீ குடித்தே தீரவேண்டும். (அவனை பலாத்காரமாய்க் குடிக்க வைக்கப் பார்க்கும்போது அவன் அதைப் பிடுங்கித் தூர எறிந்து விடுகிருன். வெளியில் அதிகமாக ஆரவாரம்.)

வஸந்தன் :—(திமிறிக்கொண்டு) விடு என்னை. நான் என் வாளைக்கொண்டு வருகிறேன். நீ பயப்படாதே. நான் வீரனுடைய புத்ரன். உன்னை வீர மாதாவாக்கி என் உயிரைத் துறக்கிறேன். நீ சொன்னமாதிரி மரணம் வேண்டாம். (போக முயல்கிருன்)

(வெளியில் அதிக ஆரவாரம்)

தேவாங்கனை :—கொஞ்சம் நில்லடா கண்மணி! உன்னைக் கடைசி முறை கட்டி யணைத்து முத்தமிடுகிறேன். (முத்தமிடுகிறாள்) ஒன்று (மறுபடியும் முத்தமிடுகிறாள்) இன்னொன்று (மறுபடியும் முத்தமிடுகிறாள்) இன்னும் ஒன்று (மறுபடியும் மறுபடியும் முத்தமிட்டு விட்டு விடுகிறாள்.)

[வெளியில் ஆரவாரம் அதிகரிக்கின்றது. வஸந்தன் உள்ளே போகிறான். தேவாங்கனை அவனைப் பார்த்துக்கொண்டே ஒருபுறமாய் வெளியே வருகிறாள். இதற்குள் கோதண்டனும் மற்ற தூதர்களும், கதவை உடைத்துச் சுவரேறிக் குதித்து நாற்புறமும் வந்து தேவாங்கனையை சூழ்ந்து கொள்ளுகிறார்கள்.]

கோதண்டன் :—விக்ராந்தனுடைய பத்தினி தேவாங்கனை எங்கே?

தேவாங்கனை :—எதற்கு?

கோதண்டன் :—எங்கே தேவாங்கனை?

தேவாங்கனை :—தேவாங்கனை நான் தான். நீங்கள் யார்? இந்த இரவில் இங்கே வரவேண்டிய காரணம் என்ன? இந்த ஸிப்பாய்கள், இந்த உருவிய கத்திகள், இந்த முற்றுகை. இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?

கோதண்டன் :—நான் மஹாராணி மதாலஸையின் ஸேனாதிபதி கோதண்டன். மஹாராணியின் ஆக்ஞையின் பேரில் சந்திரசேகரனை எடுத்துப் போக வந்திருக்கிறேன்.

தேவாங்கனை :—சந்திரசேகர னிங்கே இருப்பதாக உங்களுக்கு யாருரைத்தது?

கோதண்டன் :—யார் என்ன சொல்வது? சந்திரசேகரன் இங்கே இருப்பது வாஸ்தவம். நீங்கள் அவனுக்கு பெரிய தாயார் என்பதும் அவனுக்கு உங்களிடம் உள்ள பெரும் பற்றும் விக்ரமாதித்ய மஹாராஜா தன்

பார்யை இறந்த பின் அவனை உங்களிடம் ஒப்புவித்த தும் யாவருக்கும் தெரிந்த விஷயமே.

தேவாங்கனை :—ஆயினும் இப்பொழுது அவன் இங்கே இருக்கிறுனென்று எப்படிச் சொல்கிறீர்கள் ?

கோதண்டன் :—எப்படியாவ திருக்கட்டும். நான் இங்கே இருக்கிறுனென்று சொல்கிறேன். மஹாராணியின் உத்தரவிற் குட்பட்டு அவனை என்னிடம் ஒப்புவிக்கப் போகிறீர்களா இல்லையா ?

தேவாங்கனை :—உங்கள் மஹாராணிக்கு அவன் விஷயத் தில் இவ்வளவு தாகவிடாய் ஏன் ?

கோதண்டன் :—அவனுடைய ரக்தம் நிரம்ப ருசியான தென்று அவர்கள் கேள்வி யுற்றிருக்கிறுர்கள்.

தேவாங்கனை :—கோதண்டா ! யார் முன்னிலையில் பேசுகிறு யென்ற யோசனை இருக்கட்டும்.

கோதண்டன் :—அந்த யோசனை நீங்களே இதற்கு முன் செய்திருக்க வேண்டும். அதெல்லாம் வேண்டாம். சந்திர சேகரனெங்கே ? அவனுடைய ரக்தத்திற்காக மஹாராணி மிகவும் ஆவலாயிருக்கிறுர்கள்.

தேவாங்கனை :—ஆனுல் அவள் ஜன்ம முழுதிலும் அவ் வாறே நாவைத் தீட்டிக் கொண்டிருக்க வேண்டியது தான். சந்திரசேகரன் கண்டிப்பாய் உங்கள் கையில் அகப்படுவதில்லை.

கோதண்டன் :—என் இந்த வீண் ஹடம் ? உங்கள் கையி லிருந்து வலுவிற் பிடுங்கிச் செல்வேன்.

தேவாங்கனை :—இந்த உடலில் உயிருள்ள வரையில் அந்த எண்ணத்தை மறந்துவிடு.

கோதண்டன் :—மஹாராணியின் சரணங்களில் அவன் சிரம் உருள வேண்டும். அதைச் செய்தே தீருவோம். கெட்டியாய் அறி.

தேவாங்கனை :—(கோதண்டன் தலையைக் காட்டி) இந்த சிரத்தின் ஆசையை விட்டுவிட்டு அந்த சிரத்தின் பேச்சைப் பேசு.

கோதண்டன் :—போதும்! வீண் பேச்சு வேண்டாம்! ராஜ குமாரன் எங்கே காண்பி. மஹாராணியின் நாவை விட என் கரவாளின் செந்நாவு அவன் மதுர மான ரக்தத்தைக் குடிக்க வேண்டுமென்று ஆவலா யிருக்கிறது. மரியாதையாய் அவனை எங்கள் வசம் ஒப்புவிக்காவிடில் தண்டோபாய முறையைக் கொள்ள வேண்டியது தான்.

தேவாங்கனை :—என்ன! தண்டோபாயமா?

கோதண்டன் :—ஆம், தண்டோபாயம்.

தேவாங்கனை :—நல்லது, மிகவும் நல்லது. நன்றாய் நடத்து. இதற்கெல்லாம் பயப்படுபவள் நானல்ல. (போகமுயல் கிறாள்).

கோதண்டன் :—நில், ஒரு அடியும் எடுத்து வைக்காதே. நீ என் கைதி.

தேவாங்கனை :—ஆஹா! விக்ராந்த மஹாராஜாவின் தர்ம பத்தினியா ஒருவனுடைய கைதி?

கோதண்டன் :—அடே! இவளைப் பிடித்துக் கட்டுங்கள். உள்ளே போய் சந்திரசேகரனை தேடிப்பிடித்து வாருங்கள்.

தேவாங்கனை :—(வழியை மறித்து) உங்களை உள்ளே போக விடேன்.

கோதண்டன் :—பிடித்திழுத்து தூரத் தள்ளுங்கள் அவளை. போங்கள் உள்ளே.

தேவாங்கனை :—என் பிணத்தைத் தாண்டிப் போனாலொழிய வேறெப்படியும் முடியாது.

கோதண்டன் :—அப்படியா! ஆனால் உன் பிணத்தைத் தாண்டியே போகிறோம்.

(அவளைப் பிடித்திழுக்கிறான். கத்தியைச் சுழற்றிக்கொண்டு வஸந்தன் பிரவேசம்.)

வஸந்தன் :—ஜாக்கிரதை! உள்ளே வராதே!! திரும்புங்கள் !! போ !!

(ஸிப்பாய்கள் திரும்பி விடுகிறார்கள்.)

கோதண்டனைப்பார்த்து, என்ன என்ன இது! என்ன கலகம் செய்கிறாய் இங்கு?

கோதண்டன் :—என்னடா! சிறு பயலே!! என்ன தடபுடலாய்ப் பேசுகிறாய்?

வஸந்தன் :—விடுங்கள் தேவாங்கனா தேவியை. சந்திரசேகரன் சொற்படி செய்யாவிடில் இந்த வாளுக்கிரையாவீர்கள்.

கோதண்டன் :—அடேடே! இவன் தான். இவன் தான் சந்திரசேகரன்; நமக்குரிய பக்ஷணம்.

(ஸிப்பாய்கள் வஸந்தனைப் பிடிக்கப் போகையில் தேவாங்கனை குறுக்காய் வருகிறாள்.)

தேவாங்கனை :—முதலில் இந்த சரீரத்தைக் கொல்லுங்கள். பிறகு என் பிராணனினும் அருமையான சந்திரசேகரனிடம்........

[கோதண்டனும் இன்னும் சிலரும் வஸந்தனிடம் போகிறார்கள். மற்றும் சிலர் தேவாங்கனையை இழுத்துப் போகிறார்கள். வஸந்தன் விசித்ரமாய்ச் சண்டை செய்து கொல்லப் படுகிறான். தேவாங்கனையை கைது செய்து இழுத்துப் போகிறார்கள். கோதண்டன் வஸந்தன் தலையை வெட்டிக்கொண்டு எடுத்துப் போகின்றான்.]

(காட்சி முடிகிறது.)

அங்கம் 1. களம் 4.

இடம் :—ஓர் வீதி.

(கோதண்டன் ரக்தம் தோய்ந்த வஸந்தனுடைய சிரத்துடன் பிரவேசம்)

சந்திர சேகரா! சந்திரசேகரா! விக்ரமாதித்யன் வம்சம் விநாசமடைந்தது. மதாலஸையின் மனம் மகிழ்ந்தது. ஆஹா! இந்த சிரத்தை ஸம்ரக்ஷிக்க விக்ராந்தனும் தேவாங்கனையும் செய்த ஏற்பாடுகள் இப்போதென்ன வாயின? இதன்மேல் முடி சூட்ட செய்த முயற்சிகளெல்லாம் என்ன வாயின? சந்திர சேகரா! பார் என்னை! உன் வம்சத்தை வேருடன் அழித்தவனை உற்றுப் பார். இந்தக் கைகளில் தோய்ந்திருக்கும் உன் சிவந்த ரக்தத்தை எவ்வளவு திருப்தியுடன் என் மதாலஸை நோக்குவாள் தெரியுமா? ஆனால் போ! உனக்கு ஒன்றும் குறைவில்லை. உன்னை அவளெதிரில் கொண்டு நான் வைக்கும்போது அவள் முத்தனைய முறுவல் செய்து உன்னை நோக்குவாள். அது ஒன்றே போதாதா உனக்கு? ஒரு வேளை அவள் பாதமிடை உன்னை நான் வைக்கும்போது தன் மணி பாதத்தால் உன்னை உதைத்து சண்டாடிடுவாள்....போ. உன் ஜன்மத்தின் பலனை அடைவாய்......கோதண்டன்!........கோதண்ட மஹாராஜன்!.... இல்லை—கோதண்ட சக்கரவர்த்தி!....என்ன இனிமையான மொழிகள்! மதாலஸே! மதாலஸே! இதோ வந்தேன் உன் பாத காணிக்கையுடன்! இதோ வருகிறான் ப்ரம்ஹாவர்த்த சக்ரவர்த்தி கோதண்ட மன்னர் பிரான்.......களிப்பாய்........

(போகிறான்)

அங்கம் 2. களம் 1.

இடம்.—மதாலஸையின் அரண்மனை.

(பிரவேசம்: மதாலஸை, கோதண்டன், துர்ஜயன், ஸர்தார்கள், வேலையாட்கள், முதலியவர்)

மதாலஸை :—ஆஹா! பிரம்மதேவன் மனிதர்களை கால கோடி விஷத்தால் செய்தானு? இல்லாவிடில் தேவாங்கனை ஏன் சந்திரசேகரனை ரக்ஷிப்பதற்கு தன் மகனையே பறிகொடுக்க வேண்டும்?

துர்ஜயன் :—ஸர்க்கார்! அவள் சித்த ஸ்வாதீன மில்லாமல் இதைச் செய்திருக்கலாம்.

கோதண்டன் :—அவள் மைந்தனுக்கும் சித்த ஸ்வாதீன மில்லாமல் போயிருக்க வேண்டும். அவனும்தான் சந்திர சேகரன் என்று எப்படி நடித்தான்?

மதாலஸை :—சத்துருக்களுக்கு அணுவளவும் ஸந்தேஹம் பிறக்காமல் நடப்பது தான் சூழ்ச்சி. அதை அவ்வாறே செய்திருக்கிருள் தேவாங்கனை. இருக்கட்டும். இதற்காக ப்ராயச்சித்தம் செய்விக்கிறேன்.

(ஸேவகர்கள் தேவாங்கனையைக் கொண்டுவந்து நிறுத்துகிறார்கள்.)

நிறுத்துங்கள் என் முன்பு இந்த மாயக்காரியை. என் கண்களின் ஜ்வாலையினுல் நின்ற இடத்தில் சுட்டுக் கருக்கி விடுகிறேன் இவளை. என்னடீ! சண்டி! எங்களை ஏமாற்றவோ நீ பார்த்தாய்?

தேவாங்கனை :—ஏமாற்றமா?

கோதண்டன்:—ஆம்.

துர்ஜயன் :—கபட சூழ்ச்சி—விச்வாஸ காதகம்!

கோதண்டன் :—மோசம்—நீச ப்ரயத்னம்!

துர்ஜயன்:—ராஜத்ரோஹம்!

(தேவாங்கனை பேசாமல் நிற்கிருள்)

மதாலஸை:—ஏன் ஊமையைப்போல் மௌனமா யிருக்கிருய்? இதோ இந்த ரக்தம் தோய்ந்த தலை யாருடையது? நன்ருய்ப் பார்த்துச் சொல்.

தேவாங்கனே:—(ஸ்வகதம்) கண்ணீரே! அடங்கியிரு. மனமே! பதருதே. நாவே! தடுமாருதே.

மதாலஸை:—சொல். ஸ்வாமி ஸாக்ஷியாய், இது யாருடைய சிரம்?

தேவாங்கனே:—இது மஹாராஜா சந்திர சேகரனுடைய சிரம்.

மதாலஸை :—பொய்! பொய்!! முழுப் பொய்! என்ன நீலியடி நீ? துர்ஜயா! இது யாருடைய சிரம தெரியுமா?

துர்ஜயன்:—ஸர்க்கார்! இது விக்ராந்தனுடைய புத்திரன் வஸந்தனுடையது.

தேவாங்கனே :—ஐயோ! இவனுடைய நாவழியாதா?

மதாலஸை:—ஏனடீ! இது உன்னுடைய குமாரனுடையதல்லவா? சொல்!

தேவாங்கனே:—சந்திரசேகரனேயும் என் புத்திரனுகவே பாவித்து வந்தேன். இது என் புத்திரன் தலைதான் என்று சொல்ல ஆக்ஷேபனே யில்லை.

மதாலஸை:—என்ன பித்தலாட்டக்காரி இவள்! இந்த மாய வித்தை யெல்லாம் எங்கேயடி கற்ருய்?

தேவாங்கனே:—இவை யெல்லாம் மாய வித்தையா யிருந்தால் நீயே என் குரு.

கோதண்டன் :—தேவாங்கனே! நீ செய்த மோசத்தை உன் வார்த்தையினுல் மறைக்க முடியாது.

துர்ஜயன் :—வாஸ்தவத்தை ஒப்புக்கொண்டு தப்பும் மார்க்கத்தைப் பார்.

தேவாங்கனை:—என்ன மோசம்? எதை ஒப்புக்கொள்வது?— இது மஹாராஜா சந்திர சேகரனுடைய சிரம். அவ்வளவு தான்.

கோதண்டன்:—அது பொய்.

துர்ஜயன் :—முழுப் பொய்.

மதாலஸை :—மேலும் உன் தந்திரம் எல்லாம் எனக்குத் தெரியும். கோதண்டா! உடனே காராக்ரஹத்திற்குச் சென்று அந்தத் த்ரோஹி விக்ராந்தனை இங்கே கொண்டு வா. இந்த சிரம் யாருடைய தென்று அவனிடமிருந்து அறிந்து இவளை அவமானப்படுத்துகிறேன்.

தேவாங்கனை:—என் மானத்தைப் போக்கப் பார்த்து, உனக்கிருப்பதையும் போக்கிக் கொள்ளாதே.

(கோதண்டன் போகிறான்.)

துர்ஜயன்:—மஹாராணீ ஸர்க்கார்! நல்ல யுக்தி செய்தீர்கள்.

தேவாங்கனை:—(ஸ்வகதம்) ஐயோ! ஈசனே! இதென்ன பெரிய விபத்து! என் நாதன் வந்து இது வஸந்தனுடையதென்றால் நான் என்ன செய்வேன்?

துர்ஜயன் :—தேவாங்கனா! ஒப்புக்கொண்டுவிடு. விக்ராந்தன் வந்து விட்டால் உன் கதி அதோ கதி தான்.

தேவாங்கனை:—ஏன் இவ்வளவு அவசரம்? அவர் வரட்டும். யாருக்கு அதோகதியோ அப்பொழுது தெரிகிறது. (ஸ்வகதம்) ஐயோ! எவ்விதம் என் நாதருக்கு ஸமிக்ஞை செய்வது! அவர் தப்பித்துப் போயிருக்கலாகாதா! ஈசனே! ஈசனே!! அவ்வாறே அருளமாட்டீரா?

மதாலஸை :—தேவாங்கனா! நீ எவ்வளவு பொய் சொன்னாலும் சந்திரசேகரன் உயிருடன் எங்கோ ஒளிக்கப்

பட்டு இருக்கிருனென்று தெரியும். சொல்லிவிடு. எங்கிருக்கிருன்?

தேவாங்கனே :—(மேலே காட்டி) அங்கே! ஸ்வர்க்கத்தில். பரமபவித்ரமான பரமேச்வரனுடைய பாதார விந்தங்களில்.

துர்ஜயன் :—சீ! த்ரோஹீ! உண்மையைச் சொல்.

மதாலஸை :—வீணுய்க் கஷ்டப்படாதே.

தேவாங்கனே :—இனி அவ்விஷயமாய் ஒரு அக்ஷரமும் என் வாயினின்று வெளி வராது.

துர்ஜயன் :—வலித்திழுத்து வரவழைத்திடுவோம்.

தேவாங்கனே :—என்ன வீரன்! திக்விஜயன்!!

மதாலஸை :—தேவாங்கனு! என் கோபம் பொங்கிவிடும்.

தேவாங்கனே :—நன்ருய்ப் பொங்கட்டும். எனக்கென்ன?

மதாலஸை :—ஸரி. ஆனுல் குரூரமான ஹிம்சைகளுக்கெல்லாம் ஸித்தமா யிரு.

தேவாங்கனே :—ஸித்தமா யிருக்கிறேன். மதாலஸே! மஹாராஜா விக்ராந்தருடைய பத்னியை ஸாமான்ய ஸ்திரீயென்ரு நினைத்தாய்? தேவாங்கனேயின் உடலில் க்ஷத்ரிய உதிரம் ஓடும் பரியந்தம் அவளே தர்மத்தினின்றும் தப்ப வைப்பது எந்த ராக்ஷஸ ப்ரயத்தினத்தாலும் ஆகாது.

மதாலஸை :—இன்னும் எவ்வளவு நேரம் இவ்வாறு பேசுகிருயோ, பார்ப்போம். துர்ஜயா! ஏன் இன்னும் கோதண்டன் அவனேக் கொண்டு வரவில்லே.

தேவாங்கனே :—(ஸ்வகதம்) ஐயோ. ஒன்றும் தெரியவில்லேயே. என்ன செய்வது?—ஸரி ஏதாவது யுக்தி செய்து அவருக்கு ஸமிக்ஞை மூலமாய் தெரிவிக்க வேண்டும்.

துர்ஜயன் :—ஸர்க்கார்! விக்ராந்தன் வரும்போது இவளை இங்கு வைத்திருக்காதீர்கள். ஏதாவது ஸமிக்ஞை செய்து அவனுக்குத் தெரிவித்து விடுவாள்.

மதாலஸை :—வாஸ்தவம்தான். இவளை வெளியில் அழைத்துப்போய் வைத்திருங்கள்.

தேவாங்கனை :—(ஸ்வகதம்) ஐயோ. இச் சண்டாளனால் என் பிரயத்தனங்கள் யாவும் அழிந்து விடுமோ? என் குழந்தையைப் பறி கொடுத்தும், பயனற்று விடுமோ?

(வெளியில் ஆரவாரம்)

துர்ஜயன் :—கோதண்டன் வருகிறான். ஸேவகா! இவளை வெளியில் அழைத்துப் போ.

தேவாங்கனை :—நான் இங்கிருந்து போகமாட்டேன்.

துர்ஜயன் :—ஏன் நிற்கிறீர்கள்? இழுத்துச் செல்லுங்கள்.

தேவாங்கனை :—என்னை எவராவது தீண்டினால் ஜாக்கிரதை.

மதாலஸை :—ஏன் தயங்குகிறீர்கள்? கொண்டுபோங்கள்.

(சேவகர் இழுத்துப்போக தேவாங்கனை, "விக்ராந்த மஹாராஜா" "விக்ராந்த மஹாராஜா" என்று கதறுகிறாள்.)

கோதண்டன் :—(வேகமாய் பிரவேசித்து) மஹாராணீ ஸர்க்கார்! மோசம் போனோம்.

மதாலஸை :—என்ன? என்ன?

(தேவாங்கனை திமிறிக்கொண்டு உள்ளே வருகிறாள். ஸேவகர்கள் ஓடி வந்து பிடித்துக் கொள்கிறார்கள்.)

தேவாங்கனை :—விக்ராந்த மஹாராஜா! விக்ராந்த மஹாராஜா!!

கோதண்டன் :—அம்மணீ! விக்ராந்தன் சிறையினின்றும் தப்பி ஓடி விட்டான்.

மதாலஸை :—என்ன? என்ன?

தேவாங்கனே :—என்ன ? என்ன ?

கோதண்டன் :—விக்ராந்தன் தப்பித்துக்கொண்டு போய் விட்டான்.

தேவாங்கனே :—ஆஹா—தேவதேவா ! என் கோரிக்கையை ஈடேற்றினையோ?

மதாலஸை :—ஆஹா ! எனக்கு மயக்கம் வரும்போ லிருக்கிறது...........விக்ராந்தன்.........தப்பியா.........ஓடிவிட்டான்...........அந்தக் காவலாளிகள் யாவரையும் சிரச்சேதம் செய்துவிடுங்கள். ஆஹா ! சந்திரசேகரன் அகப்படவில்லே ! விக்ராந்தன் தப்பிவிட்டான் !! எப்படி ஸகிப்பேனிதை........இருங்கள். யாவற்றிற்கும் இந்தச் சண்டாளியின் மீது பழி வாங்குகிறேன்.

தேவாங்கனே :—உன் மனமார வாங்கிக்கொள். தன் மனேவி வருந்துகிருளென்று தர்மத்தைக் கைவிடுவார் விக்ராந்தர் என்று மனப்பால் குடிக்காதே.

மதாலஸை :—சீ ! பேசாதே. இழுத்துச் செல்லுங்கள் இவளை. கோதண்டா ! விக்ராந்தனே எங்கும் தேடும்படி ஆட்களே யனுப்பு. போ. (கோதண்டன் போகிருன்) அவனே ஒழித்தாலன்றி என் மனமடங்காது.

தேவாங்கனே:—மதாலஸே! யாரை ஒழிப்பது ? நீயா ஒழிக்கப் போகிருய் ? பிரம்மா வர்த்தத்திலுள்ள ப்ரபல ரண துரந்தரர்களெல்லாம் கண்டு திகைத்து வெட்கியோடும்படி பராக்கிரமம் படைத்த என் விக்ராந்த ஸிம்மத்தையா நீ ஒழிக்கப் போகிருய்? வாயை அலம்பு.

மதாலஸை:—என்ன சொன்னுய்? (பதறிக்கொண்டு) எட்டு நாளுக்குள் உன் புருஷனுடைய தோலே உன் கண் முன் உரித்து, சந்திரசேகரனே உலேயில் வேக வைக்கிறேன் பார். கொண்டு போங்கள் இவளே. இந்த நீசனுடைய தலேயைக் காகங்கள் குத்த குப்பை மேட்டில் எறியுங்கள்.

தேவாங்கனை:—திவ்ய மகுடத்தா லலங்கரிக்க வென்று படைத்த என் சந்திரசேகரனுடைய சிரத்தை இவ்வாறு இகழும் நீ உன் சிரத்தைப்பற்றி சற்றாவது யோசித்தாயா?

மதாலஸை:—பேடிகள் அவ்வாறு யோசிப்பார்கள். என் போன்ற ஸாம்ராஜ்யம் படைத்த பாக்கியசாலிகள் கொஞ்சமும் பயமின்றி இம்மாதிரி நீசருடைய சிரங்களைக் காலினால் உதைத்துத் தள்ளுவார்கள்.

(வஸந்தன் தலையைக் காலினால் உதைத்துத் தள்ளுகிறாள்.)

தேவாங்கனை:—(உடலெல்லாம் நடுங்க, பதறிக்கொண்டு) சண்டாளி! உன்னுடைய மதோன்மத்தமான தலையையும் உன் சத்துருக்கள் இவ்வாறே அவமதித்து உதைக்கும்படி ஈசன் செய்திடுவார்.

(ஸேவகருடன் போகிறாள்.)

துர்ஜயன்:—ஸர்க்கார்! விக்ராந்தன் உயிருள்ள வரையிலும் தேவாங்கனையை விடுவித்திடப் பார்ப்பான்.

மதாலஸை:—அதையும் பார்த்துவிடலாம்.

(காட்சி முடிகிறது.)

அங்கம் 2. களம் 2.

இடம்:—சந்திரசேகரனை ஒளித்து வைத்திருந்த ரஹஸ்ய மாளிகை.

மாறுவேஷத்தில் விக்ராந்தன் பிரவேசிக்கிறான்.

விக்ராந்தன்:—(ஸ்வகதம்) ஆஹா! என்ன நிசப்தமாய் இருக்கிறது! யாரையும் காணோமே! நான் வருவேனென்று தெரிந்தும் ஏன் என் தேவாங்கனை இங்கே இல்லை? என் கண்களாகிய சந்திரசேகரனும் வஸந்தனும் இதற்குள் தூங்கிவிட்டார்களா? ஒருவேளை என் நிருபத்தில் எழுதியபடி தேவாங்கனை சந்திரசேகரனை

ஆட்களுடன் வேறெங்காவது அழைத்துப் போயிருக் கிருளா? இல்லாவிடில் ஒரு வேளை மதாலஸையின் ஆட்கள் எல்லோரையும் சிறை பிடித்துச் சென்ருர் களா? ஐயோ! இங்கேனே ச்மசானம்போல் தோன்று கிறது? ஏதோ அமங்களகரமானது என் செவிக்கு படும்போல் தோன்றுகிறதே! ஆஹா! அதோ யாரோ இருவர் தீவட்டிகளுடன் வருகிருர்கள். பார்த்தால் மதாலஸையின் ஸேவகர்கள் போலிருக்கிருர்களே. மறைந்திருந்து என்ன பேசுகிருர்களோ கேட்போம்.

(மறைந்து கொள்கிருன்.)

(மதாலஸையின் ஸேவகர் இருவர் பிரவேசிக்கிருர்கள்.)

முதல் ஸேவகன் :—இது என்னமோ பேயுங்க வேலேயாதாං இக்கணுண்டா. இல்லாப்போனு இதுக்குள்ளோ அந்த பொண் எங்கடா போச்சு?

இரண்டாம் ஸேவகன் :—இதின்னுடா அதிசயமாகீது. இங் கேதானடா கொண்ணு போட்டுட்டு போனே. யாரு எடுத்துப் போயிருப்பாங்க?

முதல் ஸேவகன் :—பெரிய எபவா போச்சே. கோதண்ட மவாராசா ரொம்ப கோவம் பண்ணிக்குவாரே!

விக்ராந்தன் :—(ஸ்வகதம்) இவர்கள் கோதண்டனுடைய ஆட்கள் போலும். யாருடைய ப்ரேதத்தைப் பற்றிப் பேசிக் கொள்கிருர்கள்?

முதல் ஸேவகன் :—ஆஹா! என்னு சூரண்டா அந்த பய்யං? அபிமன்யு வாட்டං சண்டெ போட்டான்டா. அவெං வாள் வீசெங்க இன்னுං எங் கண்ணு முன்னியே இருக்குது.

இரண்டாம் ஸேவகன் :—எனக்கின்னமோ பய்யமாவே இருந்துச்சு. எந்தே சின்ன பையன் என்னு சூரத் தனம் காட்டினுண்டா!

விக்ராந்தன் :—எந்தப் பையனைக் குறித்து இவர்கள் பேசுகிறார்கள்? இந்த ராக்ஷஸர்களையும் பயப்படச் செய்த பராக்கிரமுடைய சிறுவன் யாரா யிருக்கலாம்?

முதல் ஸேவகன் :—அவெ0 மேலே கை எடுக்கக்கூட முடியாதே நின்னுட்டே0.

இரண்டாம் ஸேவகன் :—நானுங் கூடதா0 பொம்மெ போலே நின்னுட்டே.

விக்ராந்தன் :—இன்னும் ஏன் இவர்கள் அந்தப் பாலகனுடைய பெயரை சொல்லமாட்டேனென்கிறார்கள்? அவன் யாரோ தெரியவில்லையே.

முதல் ஸேவகன் :—ஆறு நான்தா0 அவனுக்கு மொதல் காயம் கொடுத்தே0.

இரண்டாம் ஸேவகன் :—ஆறு அவெ0 தலையே வெட்டி கோதண்ட மஹாராசாவண்டெ கொடுத்தவ0 நானு.

விக்ராந்தன் :—ஐயோ! இந்த கொலைக்காரர் யாரோ? இவர்களுக்குப் பலியான பாலகன் யாரோ?

முதல் ஸேவகன் :—போச்சுடா! விக்ரமாதித்யமவாராஜா வம்ச0 போச்சு இதோட.

விக்ராந்தன் :—ஐயோ! என் பிரிய சந்திரசேகரனையா இவர்கள் கொன்றிருக்கக்கூடும்?

இரண்டாம் ஸேவகன் :—ஆமாண்ட சந்திரசேகர மவாராஜா போனு சூரியகொலம் போனுபோலதா0.

விக்ராந்தன் :—ஐயோ! இந்த விக்ராந்தனுடைய உயிரும் பெயரும் இன்றுடன் ஒழிந்தனவே!

முதல் ஸேவகன் :—நம்ளுக்கு இண்ணிக்கு நல்ல எனு0 ஆப்டும்.

விக்ராந்தன் :—(திடீரென்று வெளிவந்து) இதோ நான் தருகிறேன் நல்ல இனும். (அவர்களைப் புடைக்கிறான்.)

அவர்கள், "கலகம்" "கலகம்" என்று கூக்குரலிடு கிறார்கள்). த்ரோஹிகளே! உங்களுக்குப் பிராயச்சித் தம் இதுதான் (காயப்படுத்துகிறான்). சந்திரசேகர மஹாராஜாவைக் கொன்ற கொலையாளிகளே! மடியுங் கள்! துடித்து மடியுங்கள்!! (அவர்கள் கதறிக்கொண்டு மடிகிறார்கள்.) ஐயோ! சந்திரசேகரன் இந்த சண் டாளர் கையில் அகப்பட்டு மடிந்தானே! தேவாங்கனை ஏன் அவனை ரக்ஷிக்கவில்லை? ஆஹா! தேவாங்கனா! தேவாங்கனா! நீ என்ன செய்தாய்? உன் மகனுடைய உயிரைக் காக்க நினைந்து ராஜத்ரோஹம் புரியவும் உட்பட்டாயோ? மாத்ருஸ்நேகத்தைக் காட்டும் ஸம யம் இதுதானா? ஐயோ! இது உனக்குத் தெரியாதா?

(ம்ருநாளினி உள்ளிருந்து மெல்ல வருகிறாள்.)

ஹா! பாலா! வஸந்தா! நீ எவ்வளவு துர்பாக்கியன். சந்திரசேகரனை ரக்ஷிக்கும் பொருட்டு நீ இந்த இடத் தில் உன் உயிரைக் கொடுத்து மடிந்திருந்தால் நமது குலத்திற்கே அழியாப் பெரும்புகழ் கிடைத்திருக் குமே. போயிற்று! போயிற்று!! இந்த விக்ராந்த னுடைய புகழ் மண்ணாய்ப் போயிற்று. உலகத்தில் உறைவதற்கு முக மில்லாமற் போயிற்று. என் மித்ர ரும் என்னை மதிக்கமாட்டார் இனி.

(ம்ருநாளினி விக்ராந்தனைப் பார்த்து பயந்து போகப் பார்க் கிறாள்.)

விக்ராந்தன் :—(காலடிச் சப்தம் கேட்டு) யாரது அங்கு நடந்துபோவது? சொல்! சொல்!! யாரது? நில்! ஓரடி எடுத்து வைத்தால் விக்ராந்தனுடைய கத்திக்கு இரையாவாய்.

ம்ருநாளினி :—யார்? மஹாராஜா!

விக்ராந்தன் :—ஆம். நான் விக்ராந்தன் தான். நீ யார் சொல். ஓரடியும் எடுத்து வைக்காதே. சொல் சீக்கிரம்.

ம்ருநாளினி :—நான் தேவாங்கனே.

விக்ராந்தன் :—தேவாங்கனு! தேவாங்கனேயா!!

ம்ருநாளினி :—ஆம்.

விக்ராந்தன் :—தேவாங்கனு! என்னுடைய தேவாங்கனேயா? நில்! நில்!! நீ இப்பொழுது என்னுடையவள் எப்படி? (ம்ருனுளினியின் கையைப் பிடித்துக்கொண்டு) சண்டாளீ! சொல்லு. நீ உயிருடனிருக்கும்போது என்னுடைய சந்திரசேகரன் மதாலஸையின் ஆட்களால் கொல்லப்பட்டது எப்படி? சொல்லு! இந்த பாபி விக்ராந்தன் உன்மீது ஸம்பூர்ணமாய் விச்வாஸம் வைத்திருந்தானே. அதற்கு இதுவா ப்ரதி? சொல்லு!! இல்லாவிடில் இந்த கத்தியினுல் இதோ உன்னே உடனே ஸ்வர்க்கம் அனுப்புவேன். சொல்லு!!!

ம்ருநாளினி :—சந்திரசேகர மஹாராஜா மடிந்ததாக யார் சொன்னது?

விக்ராந்தன் :—கோதண்டனுடைய ஸேவகர்கள்.

ம்ருநாளினி :—மஹாராஜா! அது பொய். சந்திரசேகர மஹாராஜா ஜீவந்தரா யிருக்கிருர்.

விக்ராந்தன் :—என்ன? என்ன? தேவாங்கனு! உயிருடனிருக்கிருனு? நீ காப்பாற்றி வைத்திருக்கிருயா அவனே?

ம்ருநாளினி :—ஆம்; ஸுகமாய் உயிருடனிருக்கிருர் ஒரு வித ஹானியுமின்றி.

விக்ராந்தன் :—இந்த சுபமொழிகளேக் கேட்டு என் மனம் எவ்வளவு ஆனந்திக்கிறது? ஹா! ஹா!! ஆனுல் தேவாங்கனு! மதாலஸையின் வீரர்களால் கொல்லப்பட்ட பாலகன் யார்? அந்த வீரர்களும் கொண்டாடும் பராக்கிரமம் படைத்த சிறுவன் பெயரென்ன?

ம்ருநாளினி :—மஹாராஜா! அவன்....அவன்....அவன்........

விக்ராந்தன் :—சொல். சீக்கிரம் அந்த பாலகனுடைய பெயரைக் கேட்க ஆவலாயிருக்கிறது. அவனுடைய பாரக்ரமத்தைக் கேட்டு என் மனம் பொங்கிப் பூரித்திருக்கிறது. சீக்கிரம் சொல்.

ம்ருநாளினி :—மஹாராஜா! அவன்......வஸந்தன்.

விக்ராந்தன் :—என்ன? வஸந்தனா? என்னுடைய தநயன் வஸந்தனா? என்னுடைய செல்வ வஸந்தனா? என்னுடைய பிராண வஸந்தனா?

ம்ருநாளினி :—உங்களுடைய வீர விக்ரமசாலியான குமாரன் வஸந்தன்.

விக்ராந்தன் :—ஆம். வீர விக்ரமசாலிதான் என் வஸந்தன். சத்துருக்களும் போற்றும்படியான பராக்கிரமம் படைத்தவன் வீர விக்ரமசாலி யல்லாமல் வேறென்ன? பேஷ்! பேஷ்!! கண்ணே! வஸந்த குமாரா! நீயே வீரன். நீ உன் தாயின் உதரத்திலிருந்து உதித்ததற்கு அவளை தன்யையாக்கினாய். உன் பிதாவின் நிர்மல கீர்த்தியை எங்கும் விளங்கும்படி செய்வித்தாய். தன்யன்! தன்யன்!! தன்யனானேன் நான். தேவாங்கனா! கண்ணினும் அரிய ஏக புத்ரனை பறி கொடுத்தாவது சந்திரசேகரனைக் காப்பாற்றினா யல்லவா? தேவீ! ஒரு க்ஷணநேரம் உன் சீலத்தை ஸந்தேகித்ததற்கு என்னை மன்னித்திடுவாய். வா, வா, என்னருகில் வா. உன்னை ஒரு முறை ஆலிங்கனம் செய்ய வேண்டும் வா! விலையற்ற உன் செயலுக்கு உன்னை கௌரவிக்க வேண்டும் வா!! பதியின் மானத்தைக் காக்க பிரகாசமான ஆத்மயக்ஞம் இழைத்திட்ட பத்தினியே! உன்னை எவ்வாறு போற்றுவது? ஏன் விலகி விலகிப் போகப் பார்க்கிறாய்? வா. வா. புத்திர சோகத்தால் சோர்ந்திருக்கும் உன் கோமள அந்தக்கரணத்தை சாந்தப்படுத்துகிறேன். வா என்னருகில்.

(போய் அவளை பிடிக்கப்போகிறான்.)

ம்ருநாளினி :—(விலகிப்போய்) மஹாராஜா! நான் தேவி தேவாங்கனை யல்ல.

விக்ராந்தன் :—(திடுக்கிட்டு) என்ன? தேவாங்கனையில்லையா? ஆனால் நீ யார்? என்னுடைய தேவாங்கனை எங்கே?

ம்ருநாளினி:—மஹாராஜா! வஸந்தனைக் கொன்றபின் கோதண்டன் தேவாங்கனையைக் கைதியாக்கிச் சென்றான்.

விக்ராந்தன் :—தேவாங்கனையை கோதண்டன் கைதி செய்தானா? ஆஹா! இதோ அரை க்ஷணத்தில் அவளை விடுவித்து வருகிறேன்.................. .. ஆனால் அம்மணி, நீங்கள் யார்?

ம்ருநாளினி :—நான் ம்ருநாளினி.

விக்ராந்தன்:—ம்ருநாளினி. ம்ருநாளினி? யார் ம்ருநாளினி?

ம்ருநாளினி:—ஸ்ரீகாந்தருடைய பெண்.

விக்ராந்தன் :—ஸ்ரீகாந்தருடைய பெண்ணா? ப்ரம்மாவர்த்தம் முழுதும் போற்ற, "பாலயோகினி" என்று லோகோத்தர வைராக்யத்துடன் விளங்கி, தன் கரையிலா ஔதாரியத்தால் ஸகலலோக ஜனங்களையும் வசமாக்கி ஸ்ரீகாந்தருக்கு ஏக புத்திரியாய் வாய்த்த உத்தமவதி ம்ருநாளினியா நீ? ஆஹா! இந்த ஸங்கட ஸமயத்தில் உன் போன்ற தேவதையின் தர்சனம் கிடைத்ததே எனக்கு? என் கீர்த்தி யெல்லாம் அழிந்ததென்று தைன்யகடைந்திருக்கும் ஸமயத்தில் உன் ஆனந்தகரமான வார்த்தைகளினால் உத்ஸாகப் படுத்தினதற்கு நான் எவ்வாறு உன்னை துதிப்பேன்? ம்ருநாளினி! இதோ மனமார உனக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

(நமஸ்கரிக்கப் போகிறான்.)

ம்ருநாளினி :—மஹாராஜா! இதென்ன?

(விலகிப்போகிறாள்.)

விக்ராந்தன் :—இல்லே. இல்லே. ம்ருநாளினீ! உன் போன்ற தெய்வீகமுடையவள் பாதகமலத்தில் என்போன்ற பாபியின் சிரம் பட்டாலும் பாவன மடையும்.

(நமஸ்கரிக்கிருன்.)

இந்த நள்ளிருளில் இந்த பயங்கரமான இடத்தில் உன்னுடைய தர்சனம் கிட்டினது எனக்குப் பெரிய சுப சகுனம். உடனே சென்று என்னுடைய தேவாங்கனையை விடுவிக்கவேண்டும்.......ஆனல் ம்ருநாளினீ, சந்திரசேகரன் உயிருடன் இருப்பதாக நீ சொன்னது வாஸ்தவம் தானே?

ம்ருநாளினி :—ஆம், மஹாராஜா.

விக்ராந்தன் :—ஆனல் நான் அவனே முதலில் பார்க்கவேண்டும். அவனிடம் அழைத்துச் செல் என்னே. அவனே பார்த்தபின் என் தேவாங்கனேயை ஸூர்ய உதயத்திற்குள் விடுவிக்கவேண்டும்

ம்ருநாளினி : - ஐயோ! முதலில் தேவியை விடுவித்து பிறகு சந்திரசேகரனேக் காணலாம்.

விக்ராந்தன் —இல்லே. இல்லே. முதலில் என் கண்ணர அவனேப் பார்க்க வேண்டும். எங்கிருக்கிருன் சந்திரசேகரன்?

ம்ருநாளினி :—கூர்மதுர்க்கத்தில் ராணி ஸரோஜினியிடம்.

விக்ராந்தன் :—என்ன? கூர்மதுர்க்கத்தில் ராணி சரோஜினியிடமா? அவளிடம் யார் அனுப்பியது?

ம்ருநாளினி :—நான்.

விக்ராந்தன் :—ஐயோ! எல்லாம் கெட்டுவிட்டதே ம்ருநாளினீ! சந்திரசேகரன் மதாலஸைக்கு இரையாய் விட்டானே. எல்லாம் பாழாய் விட்டதே.

ம்ருநாளினி :—ஆனல் மஹாராஜா நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

விக்ராந்தன் :—ம்ருநாளினீ ! நான் என்ன சொல்வது? சந்திரசேகரன் ஸரோஜினியின் கோட்டையில் இருப்பதும், மதாலஸையின் கையில் இருப்பதும் ஒன்றே. ஸரோஜினியின் கணவன் துர்ஜயன் ராஜத்ரோகம் செய்து மதாலஸை பக்ஷம் சேர்ந்து விட்டானே.

ம்ருநாளினி :—மஹாராஜா ! ஸரோஜினி த்ரோகம் புரிபவளென்று நான் நினைக்கவில்லை.

விக்ராந்தன் :—ம்ருநாளினி ! உன்னுடைய உதார குணத்தினால் உனக்கிவ்வாறு தோன்றியது ஸஹஜமே. ஆனால் இப்பொழுது வீண் வார்த்தைகள் பேசி என்ன பலன்? இதோ உடனே சென்று சந்திரசேகரனை ராணி ஸரோஜினியிட மிருந்து மீட்டுக்கொள்ள வேண்டும்.

ம்ருநாளினி :—மஹாராஜா ! ஸரோஜினியால் சந்திரசேகர மஹாராஜாவுக்கு ஒரு அபாயமுமில்லை. முதலில் தேவியைத் தப்பவைக்க வேண்டும். எந்த ஸ்திதியில் வைத்திருக்கிறாளோ துஷ்ட மதாலஸை அவளை.

விக்ராந்தன் :—உயிரினும் அரிய ஏக புத்ரனை இழந்ததினும் இன்னும் என்ன துர்தசை அவளுக்குச் சம்பவிக்கக் கூடும்? அதையே ஸர்வ சாந்தத்துடன் ஏற்றவள் மதாலஸையின் மிரட்டுகளால் மருளுவாளென்று நான் நம்பவில்லை. என் தேவாங்கனையினுடைய புத்தியிலும், தைரியத்திலும், எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. நான் போய் மீட்குமளவும் அவள் தன்னைக் காத்துக் கொள்ளும் திறமை வாய்ந்தவள். அப்படி ஒரு வேளை துரதிஷ்டவசத்தால் அவளுக்கு ஆபத்து சம்பவித்தால் அதையும் பொறுத்துக்கொள்ள வேண்டியதே. ஆனால் முதலில் ஸரோஜினியிட மிருந்து சந்திரசேகரனை மீட்டு வரவேண்டும்.

ம்ருநாளினி:—தாம் உத்தரவிட்டால் நான்சென்று சந்திரசேகரனை ஸரோஜினியிட மிருந்து அழைத்து வருகிறேன்.

விக்ராந்தன் :—வேண்டாம் நானே சென்று அழைத்து வருவேன்........யாரது உள்ளே பேசுவது?

ம்ருநாளினி :—என் ஸேவகர்கள். உம்முடைய ஆள் கந்தனன் மூலமாய் தேவி தேவாங்கனைக்கு ஏதோ அபாயம் ஸம்பவிக்கப் போவதாய் அறிந்து இரண்டு ஸேவகருடன் நான் இங்கு வருவதற்குள் இந்த அனர்த்தமெல்லாம் சம்பவித்து விட்டது. வஸந்தனுடைய முண்டத்திற்கு ஸகல ஸம்ஸ்காரங்களுடன் கிரியைகள் செய்ய எடுத்துப்போகப் பார்க்கையில் ராணியின் ஸேவகர்கள் தீவட்டிகளுடன் வந்துவிட்டார்கள்.

விக்ராந்தன் :-- ஆனால் என் கண்மணி வஸந்தனுடைய........ பிரேதம் இங்கே இருக்கின்றதா? நான் அதையாகிலும் ஒரு முறை கண்ணாரக் காணவேண்டும்.

ம்ருநாளினி :— அதோ பாரும் என் ஸேவகர் கொண்டு வருகிறார்கள்.

(ஸேவகர் முண்டத்தைக் கொண்டு வந்து வைக்கிறார்கள்.)

விக்ராந்தன் :—(அதை அணுகி உற்று நோக்கி) ஹா! பாலா! உன் உஜ்வலமான சரித்திரத்தைக் கேட்டு என் ஹ்ருதயம் வியப்படைந்தது. சத்ருக்களுடன் சமர் புரிந்து நீ சத்கதியடைந்ததைக் குறித்து என் மனம் ஆனந்தம் கொண்டு பூரிக்கின்றது. இந்நிலையில் என்நாவினாலன்றி வேறெவ்விதத்திலும் உன்னை கௌரவிக்க சக்தியற்றவனா யிருக்கிறேன். அன்றியும் என் அருந்தவ ஏக புத்திரனாகிய உனக்கு சாஸ்திரோக்தமாய் உத்தரக் கிரியைகள் செய்திடவும் எனக்கு ஸாத்தியமில்லை. என் புத்ர ரத்னமே! என்னை க்ஷமிப்பாய். ஆனால் ரணகளத்தில் போராடி மடிந்து கிடக்கும் ஒவ்வொரு வீரனுக்கும் இது வரையிலும் ஸேனாதிபதி யாகிய நான் எந்த உபசாரம் செய்து வருகிறேனோ அதே உபசாரத்தை இதோ உனக்கும் என் மனமார ப்ரீதியுடன்

செய்கிறேன். என் கண்ணே! அதை ஸ்வீகரித்துக் கொள்வாய்.

(கத்தியை உருவி வந்தனம் செய்து வஸந்தனுடைய காலை முத்தமிடுகிறான். தன் அங்கவஸ்திரத்தினால் முண்டத்தை முழுதும் பரிவுடன் மூடுகிறான்.)

என் அருந்தவ புத்ரா! நான் போய் வருகிறேன். பரமேச்வரன் உன்னைத் தன் பாதத்தில் சேர்த்துக்கொள்வார்....ம்ருநாளினீ! நான் வருகிறேன்....இதோ இவனுக்குச் செய்ய வேண்டியதைக் குறைவின்றி செய்வாயா? நான் உன்னைக் கேட்டுக்கொள்வது அதுவே.

ம்ருநாளினி :—மஹாராஜா! அந்த விஷயமாய் தமக்கு ஒரு கவலையும் வேண்டாம்.

விக்ராந்தன் :—அம்மா! உனக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். உன்னால் முடியுமானால் தேவாங்கனையை மதாலஸை யிடமிருந்து விடுவிக்கப் பார். அவளைப் பூர்ணமாய் உன் கையில் ஒப்புவித்துவிட்டுப் போகிறேன்.

(போகிறான்.)

ம்ருநாளினி :—ஆஹா! என்ன பெருமை! என்ன கம்பீரம்!! ஒரு பக்கத்தில் தவப்புதல்வன் தலை வெட்டுண்டு தரைமீது விழுந்திருக்க, மற்றொரு பக்கத்தில் பரம ஸாதுவான பத்னி பாதகர் கைகளில் சிக்கிப் பரிதபித்துக் கொண்டிருக்க, எவரும் திகைத்து எடுத்த தொழிலை எள்ளளவும் மதியாது ஏங்கி நின்றிடார்களா? ஆனால் இந்த மஹானுடைய உத்தம நிஷ்டை இந்த ஸ்திதியிலும் கலையவில்லையே. இவருடைய பெருமையை நான் எவ்வாறு சிலாகித்திடுவது? இவருடைய லோகாத்தரமான குணங்கள் என் மனதைக் கொள்ளைகொண்டு விட்டனவே (வஸந்தனிடம்சென்று) ஆஹா! இதென்ன தெய்வயோக விலக்ஷணம்? தாயும் தந்தையும் ஜீவித்திருக்க இந்த உத்தம சிறுவனுக்கு அந்தியக்கிரியைகள் செய்வித்திடும் பாக்கியம் கன்னிகை யாகிய எனக்கல்

லவோ கிட்டியது! இந்த இளம் வயதில் ராஜகார்ய நிர்த்தாரணத்திற்காக ரணரங்கத்தில் சத்ருக்களுடன் போராடி மாண்ட இந்த வீரனை எவ்வாறு போற்று வேன்? கண்ணே! வஸந்தா!! உன் வீரத்தை எவ்வாறு வியப்பது? நீ செய்த பெரும் ஆத்ம யக்ஞத்தைக்கண்டு என் மனம் பொங்குகிறது. என் நெஞ்சம் அடைக் கிறது. நாவெழவும் மாட்டேனென்கிறது. உனக்கு இவ்வுலகில் ஸுகம் கிடைக்கவில்லை. ஈச்வரனுடைய சரணங்களிலாவது சுகமடைவாயாக. உன்னை செல்வ மாய்ப்பெற்ற அன்னை உனக்கு அந்தியக்ரியைகள் செய் விக்கவும், உன் அருகிருந்து அழவும் கொடுத்துவைக்க வில்லை. இதோ அந்த தூய தேவிக்காக என் உடலி லுள்ள மாதுர் ஸ்நேகத்தையெல்லாம் என் கண்ணீ ரில் கரைத்து உன்மேல் பொழிகிறேன். ஏற்றுக்கொள்.

(அழுது அவன் காலின்மேல் விழுகிறாள்.)

ஸேவகன் :—அம்மணி! காலதாமதம் ஆகிறது.

ம்ருநாளினி :— ஆம். இதோ போவோம். (ஸ்வகதம்) ஆஹா! அகண்ட ஸம்பத்தையும், அநந்த ஸுகத்தை யும் அரைக்ஷணத்தில் அறவே அகற்றி இதோ ஒரு காரியத்தைக்கோரி புறப்பட்டுவிட்டேனே. இந்த அதி சயமான விரக்தியை என் சித்தத்தில் புகுந்திட அருளி னவர் எவரோ? இந்த பிரம்மாண்ட பிரபஞ்சத்தை த்ருணமாய் மதித்திட எனக்கு சக்தியளித்திட்ட உத் தமர் எவரோ? எவராயிருக்கக் கூடும்? யாருடைய ஸத்குண ஐச்வர்யத்தை இரண்டு வருஷங்களாய் நான் ஸதா போற்றிக்கொண் டிருக்கிறேனோ அவருடைய கிருபையே இது. மஹாராஜா! தம்முடைய ஆக்ஞை யைத் தலைமேல்தாங்கி என் வீடு வாசல் முதலிய ஸகல வித ஸாம்ராஜ்யத்தையும் துறந்து என் உயிரையும் கையில் பற்றிக்கொண்டு, தேவி தேவாங்கனையை மீட் டிட இதோ புறப்படுகிறேன். என் தலையால் பணிந்து

தரைமீது செய்யும் வணக்கம் நீர் எந்தத் திக்கிலிருந்தாலும் உமது பாதங்களிற் சேரட்டும் (வணங்குகிருள்). நான் மேற்கொண்ட காரியத்தில் ஜெயம்பெற உமது ஆசிர்வாதம் என்னைச் சேரட்டும். அப்படி எனக்கு விபத்து ஸம்பவித்து நான் ஸ்வர்க்கம் அடைந்தாலும் என்னுடைய பார்வை உமது சரணங்களைவிட்டகலாது.

(போகிருள்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 2. காட்சி 3.

இடம் :—மதாலஸையின் அரண்மனை.

ப்ரவேசம் :—மதாலஸை, துர்ஜயன், முதலியவர்கள்.

மதாலஸை :— என்ன? இந்த நான்கு நாளாய் இழைத்த ஹிம்சைகளுக்குக் கூடவா தேவாங்கனை அடங்கவில்லை?

துர்ஜயன் :—இல்லை, ஸர்க்கார். அவள் பெரிய பிடிவாதக்காரியாய் இருக்கிருள். சந்திரசேகரன் இறந்துவிட்டானென்றே சொல்லி வருகிருள்.

மதாலஸை :—ஆஹா! என்னிடமா இந்த ஹடம் செல்லும்? இருக்கட்டும். கொண்டுவாருங்கள் அவளை என் முன்பு. (துர்ஜயன் போகிருன்) இது வாஸ்தவமா அல்லது துர்ஜயன் சொல்வது பொய்யா? இல்லை. துர்ஜயன் எனக்கு த்ரோகம் செய்திருக்கமாட்டான். ஆனால், இத்தனை பயங்கர ஹிம்ஸைகளையும் பொறுத்துக்கொண்டு பிடிவாதத்தைவிடாமல் எப்படித்தான் இருக்கிருள் என்று எனக்கே வியப்பாயிருக்கிறது. (ஸேவகர் தேவாங்கனையை அழைத்துவருகிருர்கள்.) தேவாங்கனா! இப்பொழுதாவது சந்திரசேகரனிருக்கு மிடத்தைச் சொல்லிவிடு.

தேவாங்கனை :— சந்திரசேகர னிருக்கு மிடம். அதோ! மேலே!

மதாலஸை :—தேவாங்கனு! நீ செய்வது நன்மைக்குக் கால மில்லை.

தேவாங்கனை :—ஸரிதான். உன் ஹிம்ஸைகளை இன்னும் நாலு மடங்கு, பத்து மடங் காக்கப்போகிருய். அவ் வளவுதானே? நானதற்கு எப்பொழுதும் ஸித்தமா யிருக்கிறேன்.

மதாலஸை :—கஷ்டங்களுடன் நின்றுவிடாது. உயிருக்கே மோசம் விளையும். ஜாக்கிரதை!

தேவாங்கனை:—உயிரையிழக்க நானு பயப்படுவேன்? இதோ ஸித்தமா யிருக்கிறேன். எப்பொழுதும் ஸித்தமே. யாவரும் ஸித்தமாயிருக்க வேண்டியவரே. நீ மஹா ராணி யென்று நினைத்துக்கொண்டிருந்தால் மாத்திரம் அமரத்வம் அடைந்து விட்டாயோ? நான் இன்று இறந்தால் நாளை நீயும் அவ்வழி வரவேண்டியவளே.

மதாலஸை :—ஆஹா! உன்மேல் நான் கொண்டிருக்கும் கோபத்தில் நீ இறந்த பின்னும் உன் பிணத்தின்மேல் பழிவாங்குவேன். அதற்கு ஸத்கதி கிட்டவும் விட மாட்டேன். அதை நாய் நரிகள் பற்களால் கடித்துக் கிழித்து குப்பைமீது இழுத்துச் செல்லச் செய்வேன்.

தேவாங்கனை :—(சிரித்து) உன் மனமாரச் செய். உயிர் துறந்த உடலை நாய் தின்றுலென்ன? உன்போன்ற மனிதர் தின்ருல் என்ன?

மதாலஸை :—வேண்டாம்; வீணுய் என் கோபத்தை யதிகப் படுத்தாதே. என்னை நீ யறியாய்.

தேவாங்கனை :—ஆனுல் உன் கோபம் எவ்வளவுதான் மீறு மென்று பார்க்கலாம். அது பெரிதோ என் மனே திடம் பெரிதோ பார்த்துவிடலாம். நீயோ ஸகல சேனு சஸ்திர பலமும் படைத்திருக்கிருய். நான்

அஸஹாய அனுதையா யிருக்கிறேன். ஆயினும் உன்னுடைய கொடுமைக்குக் குழைந்து விடுகிறதா என்னுடைய த்ருட சித்தம் என்று பார்த்திடலாம்.

மதாலஸை :—சீ பேசாதே. உன் கண்களை அரை க்ஷணத்தில் இரும்புக் கம்பிகளால் குத்திவிடச் சொல்வேன்.

தேவாங்கனை :—ஸந்தோஷம்! இனியாவது உன்போன்ற சண்டாளிகளுடைய அமங்களகரமான முகங்களைப் பாராமலிருக்கலாம்.

மதாலஸை :—(ஸ்வகதம்) இவளை இவ்வளவு பேசவிடுவது தவறு.

தேவாங்கனை :—நான் கொண்ட ராஜநிஷ்டை என்னுடைய குற்றமா யிருக்கிறது. அக் குற்றத்திற்காக என்னை சாம்பலாய் எரித்தாலும் உட்படுவேன்.

மதாலஸை :—அப்படியா? ஸந்தோஷம். உன் ராஜநிஷ்டா விரதத்தை பூர்த்தி செய்விக்கிறேன். பயப்படாதே. துர்ஜயா! பழுக்கக் காய்ச்சின இரும்புக் கம்பிகளால் இவளுடைய கண்களைக் கிளரி அழித்துவிட உத்தரவிடு. அழைத்துப் போ.

தேவாங்கனை :—இதோ வந்தேன்.

(துர்ஜயனுடன் போகிறுள்.)

மதாலஸை :—(ஸ்வகதம்) அபிமானத்தின் ஹடமென்ன! ஆத்ம விச்வாஸத்தின் அந்தகமென்ன! நீதி தைரியத்தின் விஸ்தாரமென்ன! என்னையே வென்றிடவா கோருகிறுள்? தேவாங்கனு! தேவாங்கனு!! நீ எவ்வளவு பெரியவளா யிருந்தாலும், ஸத்யம் நிறைந்தவளா யிருந்தாலும், மதாலஸையை மாத்திரம் வெல்ல முடியாது?..........உன் ஸத்குணத்தைக் கண்டு எனக்கே மதி மயங்குகிறது..........ஆஹா! உன்னுடன் போராடுவது எனக்கு ஆனந்தம். ஆனல் உன்னுல் மாத்திரம் என்னை வெல்வது முடியாது. எந்த

பயங்கர பாபத்தையும் இழைத்திட நான் ஸித்தம். நீ என் காலில் விழுந்து வணங்கவாவது வேண்டும். அல்லது மண்ணுய் நசித்துப் போய்விட வேண்டும். இவ்விரண்டில் ஒன்று தப்பாது.

(போகிறுள்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 2. களம் 4.

இடம் :—மதாலஸையின் அரண்மனைக் கருகிலுள்ள அரண்யம்.

[இரண்டு வீரர்களுக்கு நடுவில் கண்கள் குத்தப்பட்டு அந்தகமாயிருக்கும் தேவாங்கனை தரையில் கிடக்கிறுள். துர்ஜயன் ஒருபுறம் நிற்கிறுன்.]

துர்ஜயன் :—தேவாங்கனு! உன் அந்திய காலம் கிட்டி விட்டது. இப்பொழுதாவது பிடிவாதத்தை விட்டு பிழைத்திடும் வழியைப் பார்.

தேவாங்கனை :—அந்த வார்த்தை வேண்டாம். இன்னும் அரை நாழிகையோ ஒரு நாழிகையோ நான் உயிருடனிருக்கப் போகிறேன். அதற்குள்ளாகவா பயந்து என் நிஷ்டையை விட்டு விடுவேன்?

துர்ஜயன் :—தேவாங்கனு! உன் போன்ற உத்தமிகள் இப்படி அவதிப்படுவது எனக்கு ஸம்மதமில்லை.

தேவாங்கனை :—உன் போன்ற உத்தமர் உலகில் நடமாடி வரும்போது வேறென்ன ஸம்பவிக்கும்? தெய்வ கிருபையால் நான் இன்னும் உயிருடன் இருக்கப்போவது அரை நாழிகை. உங்கள் கைகளினின்றும் தப்பி நீங்களணுகா பிரதேசத்தை அடையும் தருவாயில் இருக்கும் எனக்கு உன் தயையும் வேண்டாம், உன் பச்சாதாபமும் வேண்டாம்.

துர்ஜயன் :—ஆனால் அதோ கூண்டில் அடைபட்டிருக்கும் கொடிய விலங்குகளுக்கு உன்னை இரையாக்கிவிடு வோம்.

தேவாங்கனை :—செய்யுங்கள். பசித்திருக்கும் மிருகங்கள் என் உடலைத் தின்றுவது பசியாறட்டும். அதோ பாருங் கள்! ஆகாசத்தில் தேவஸ்திரீகள் என்னை எதிர்கொண் டழைக்கக் காத்திருக்கிறார்கள். சீக்கிரம் அனுப்புங்கள் என்னை.

துர்ஜயன் :—நீ ஏதாவது கடைசி வார்த்தையாய் சொல்லிக் கொள்ள வேண்டியதுண்டா?

தேவாங்கனை :— உன்னிடமா? போ. உன்னிடம் நான் உரைப்பதற்கு ஒன்றுமில்லை...... இல்லை. இல்லை. இரு. உன்னுடைய மதாலஸையிடம் போய் இவ் வார்த்தை களைக் கூறு. "நீ எந்த ஸ்திரீயோடு ஹடப்போர் செய் யப் பார்த்தனையோ, அந்த ஸ்திரீ, அந்த விக்ராந்த மஹாராஜாவின் பத்னி, அந்த தேவாங்கனை உன்னிடம் ஒரு சமயத்திலும் தோற்கவில்லை" யென்று அந்த அஹம்பாவம் கொண்டவளிடம் சொல். போ. " துஷ்ட மிருகங்களினால் கடித்து விழுங்கப்படும் தரு வாயிலும், உன்னை துச்சமாகவே நினைத்துதான் ஜயித்த ஆனந்தத்தால் புன்னகையுடன் விளங்கினாள் தேவாங் கனை " என்றுசொல். போ.

(பிரவேசம்—மதாலஸை)

மதலாஸை :—என்ன! தேவாங்கனா! சாகும் தருவாயிலும் மதாலஸையை அவமதித்து விஜயானந்தம் கொண்டா விளங்கிடுவாய்?

தேவாங்கனை :— ஆம் உன்னை வென்ற பேரானந்தத்தில் புன்னகை பூண்ட முகமுடன் மரிப்பேன்.

மதாலஸை :— அவ்வாறு ஆனந்திக்க உன்னை ஒருநாளும் விடமாட்டேன். அவமானப்பட்டு அகங்குழைந்து

அழியவேண்டும் நீ. என் ஜன்ம வைரி நீ; என் கண் முன் ஸுகமாய் மடிவதா? ஒருநாளும் இல்லே.

தேவாங்கனே — அவமானமா? தேவாங்கனேக்கா அவமானம்? எனக்கு அவமான மிழைத்திட எவருக்குத் திறமை யுண்டு.

தூர்ஜயன் :—(முன்வந்து) எவருக்குத் திறமையுண்டா? இந்த தூர்ஜயனுக்கு உண்டு. இதோ பார், தேவாங்கனு! தூர்ஜயன் உன்னுடைய உத்தான மஸ்தகத்தை உதைக்கிருன் பார். மஹாராணி மதாலஸையின் வைரிகளின் சிரங்கள் மேலெல்லாம் இவ்வாறே பாதங் கொண்டு உதைப்பான்.

(தேவாங்கனேயை தலேமேல் உதைக்கிருன்.)

தேவாங்கனே :—(பதறிக்கொண்டு) ஐயோ! ஈசனே! என் தலேமேல் இந்த சண்டாளனுடைய பாதமும் படலாயிற்றே. நாள்தோறும் உன்னேயே பணிந்து வணங்கின இச்சிரத்திற்கு இந்தப்பரிபவம் ஸம்பவித்திட விட்டனேயோ? மரண காலத்திலும் நான் மனமுடைந்து அழியவேண்டும் என்னும் பிடிவாதத்தை ஸாதித்து விட்டார்களே ஐயோ! இந்த அவமானத்தை நான் யாரிடம் கூறுவேன்? இதற்குப் பழிவாங்க யாரிடம் முறையிடுவேன்? மனிதப் பேய்கள் உலாவும் இந்த ச்மசானத்தில் என் தீன ஒலியைக் கேட்டு யார் வந்து உதவுவார்கள்? தேவதேவனே! என் ஆயுள் முழுதும் என்னே ஆதரித்து என் அந்திய காலத்தில் என்னே அவமானப் படுத்த நான் என்ன அபராதம் தான் செய்தேன்?

தூர்ஜயன் :—(முன்வந்து) என்ன அபராதமா? மஹாராணி மதாலஸைக்கு த்ரோஹம் செய்தது. அதற்கு பிராயச்சித்தம் இதுதான்.

தேவாங்கனே :—தூர்ஜயா! நீசா! எவளுடைய கிருபையைக் கோரி இந்த ஆண்மையற்ற தொழிலேப் புரிந்தனேயோ

அந்த பாதகியினுடைய காலினாலே உன் தலைமேல்........ போ. போ. வேண்டாம். பரமனடியை சேரும் வேளையில் உன்போன்ற பதரின்மேல் ஓர் சாபத்தை செலுத்தி என் பவித்ரமான வாக்கை பாழாக்கிட மன மில்லை. துஷ்டரை சிக்ஷை செய்ய ஈசன் ஒருவர் இருக்கிறார்.

மதாலஸை :—(முன்வந்து) அழு! கதறு!! நன்றாய் அலறு!!! உன் அவமானத்தையும், துக்கத்தையும், குழப்பத்தை யும் கண்ணாரக்கண்டேன். என் கண் பெற்றபேறு கிடைத்தது. போ. விஜயானந்தத்தில் மூழ்கி மன மாற இந்த நீச மிருகத்தின் வயிற்றுள் குடிகொள்போ. தூர்ஜயா! வா நாம் போவோம். ஸேவகர்களே! இந்த மிருகங்களைத் திறந்து விடுங்கள்.

(போகிறார்கள்.)

தேவாங்கனை :—ப்ரம்மாவர்த்த பிரஜா ஜனங்களே கேளுங் கள்! என்னுடைய, தேவாங்கனையுடைய, விக்ராந்த மஹாராஜாவின் பத்னியுடைய கடைசி மொழியைக் கேளுங்கள். என் அவமானத்தைக் கேட்டு அவமதி யாதீர்கள். இது தேவாங்கனையை மாத்திரம் செய்த அவமானமல்ல. ப்ரம்மாவர்த்தத்திலுள்ள வீரவான் களுக்கும், சௌர்யவான்களுக்கும், நடந்த அவமான மிது. மனுநெறி தவறாத மந்திரிகளுக்கெல்லாம் நேர்ந்த அவதூறு இது. தவம் புரிந்திடும் தவச்ரேஷ்டருக் கெல்லாம் இழைத்த தவறிது. எழுந்திருங்கள்! கல கம் புரியுங்கள்!! ரக்த சோபிதையாய் நிற்கும் மதா லஸையைக் கீழே தள்ளுங்கள். ராஜகாதகனாகிய தூர் ஜயனை நிர்மூல மாக்குங்கள். ஸர்வஜகத்திலும் ஸஞ் சரித்திடும் வாயுவே! இதோ நான் முறையிடுவதை ப்ரம்மாவர்த்தம் முழுதும் பரவச் செய்திடு. ஸர்வ வியாபியான ஆகாசமே! இதோ நான் உரைப்பதை உலகெங்கும் ப்ரதித்வனிக்கச் செய்திடு. (மிருகங்கள்

கர்ச்சிக்கின்றன) வாருங்கள். வாருங்கள். மிருகங்களே, உங்கள் வரவை ஆவலாய் எதிர்பார்க்கிருள் தேவாங்கனே. துர்ஜயனுடைய பாதம்பட்ட இத்தலையை உங்கள் நகங்களால் கிழித்து சின்னுபின்னப் படுத்துங்கள். (மிருகங்கள் வருகின்றன.) விக்ராந்த மஹாராஜா! விக்ராந்த மஹாராஜா! நான் வருகிறேன். இதோ கடைசிமுறை உமது பாதங்களைப் பணிந்தேன். கண்ணே சந்திரசேகரா! உன்னை இதோ ஆசிர்வதிக்கின்றேன். நீயே கடைசியில் வென்று ஆசந்த்ரார்க்கமாய் நீடூழி வாழ்வாய். வஸந்தா! வஸந்தா!! இதோ வருகிறேன் உன்னிடம்.

(மிருகங்கள் தேவாங்கனைமேல் விழுந்து காயப்படுத்துகின்றன. தேவாங்கனை மூர்ச்சையாய் விழுகிருள். ம்ருநாளினியும், கந்தனனும், ஸேவகர்களும் ஓடி வந்து மிருகங்களைக் கொன்று தேவாங்கனையைக் காப்பாற்றுகிருர்கள். மதாலஸையின் வீரர் ஆக்ஷேபிக்க அவர்களையும் கொன்று விடுகிருர்கள்.)

ம்ருநாளினி :— (தேவாங்கனையை மடிமீது சாய்த்துக் கொண்டு) தேவீ! தேவாங்கனு! தேவீ!

தேவாங்கனை :—யாரது? இவ்வளவு ப்ரீதியாய் யார் என்னை அழைப்பது? யார் என்னை அன்போடு அணைத்திருப்பது?....நாதா....இல்லை...இல்லையே.

ம்ருநாளினி :—தேவீ! நான் ஸ்ரீகாந்தருடைய மகள் ம்ருநாளினி.

தேவாங்கனை :— ஸ்ரீகாந்தருடைய மகளா? பாலயோகினி ம்ருநாளினியா? அம்மா...நீ ஏன்....இங்கு வந்தாய்?

ம்ருநாளினி :—உன்னை விடுவிக்கவே வந்தேன்.

தேவாங்கனை:—என்னை விடுவிக்கவா? இது கடும் புலி வாழும் குகையாயிற்றே அம்மா! ஒன்றும் பயனில்லை....இன்னும் அரை நாழிகையில் என் உயிர் போய்விடும்.

என்னை... உன்....மடிமீது நன்ருய்ச் சாய்த்துக்கொண்டேயிரு. அப்படியே என் உயிரை விடுகிறேன்.

(ம்ருநாளினி அவ்வாறே செய்கிருள்.)

ம்ருநாளினி :—தேவி ! எங்களை யெல்லாம் விட்டுப் போய் விடலாமோ ?

தேவாங்கனை:—அம்மா வேறு வழியில்லை. அது ஈசனுக்ஞை. என் சரீரத்தில் கொஞ்சமும் சக்தியில்லை. மதாலஸை யிழைத்த ஹிம்சைகளால் சக்தியெல்லாம் தொலைந்தது. அவள் மிருகங்கள் செய்த காயங்களால் என் முடிவும் வந்துவிட்டது. ஆனால் என் மனம் சற்றும் தளரவில்லை. நான் ஒரு க்ஷத்திரிய ஸிம்ஹத்தின் தர்ம பத்னி. சரீரம் மாத்திரம் அற்றுவிட்டது. அம்மா ! அதற்கெல்லாம் நான் வருந்தவில்லை. கடைசி காலத்தில் எனக்கு ஸம்பவித்த அவமானத்தைக் குறித்து வருந்துகிறேன். இனி உயிர்வாழ்வது அனுசிதம்.

ம்ருநாளினி:—என்ன! தேவாங்கனை தேவிக்கு அவமானமா?

எல்லோரும் :— தேவி தேவாங்கனைவிற்கா அவமானம் ? பிரம்மாவர்த்தத்தின் புனிதமான தேவதைக்கா அவமானம் ! யாரிழைத்தது?

தேவாங்கனை :—துர்ஜயன், மரணகால மென்றும் பாராமல் அந்த அதமன் தன் காலினால் என் சிரம்மேல் உதைத்தான்.

எல்லோரும் :—ஆ ! ஆ ! ! பாபீ ! த்ரோஹீ ! !

ம்ருநாளினி :—இந்த லக்ஷ்மீகர மங்கள சிரத்தையா உதைத்தான். இதையா ! இதையா !

(தேவாங்கனையின் சிரத்தைத் தன் கண்களிலும், முகத்திலும், மார்பிலும் அணைத்துக் கொள்கிருள்.)

தேவாங்கனை :—அம்மா ! ம்ருநாளினி ! பந்துக்களே ! விக்ராந்த மஹாராஜாவிற்கும், சந்திரசேகர மஹாராஜா

விற்கும், இன்னும் ப்ரம்மா வர்த்தத்திலுள்ள ஸகல ஜனங்களுக்கும் என்னுடைய கஷ்டங்களையும், எனக்கு நேர்ந்த அவமானத்தையும் உரைத்திடுங்கள். இத்தேசத்திலுள்ள ஒவ்வொரு ஸ்த்ரீக்கும் இந்த ஸமாசாரம் தெரியட்டும். இந்த தேசத்திலுள்ள ஒவ்வொரு ஆடவரும் இந்த ஸம்பவங்களை யெல்லாம் கேட்டு துக்கிக்கட்டும். ப்ரம்மாவர்த்த க்ரோத சாகரத்தை இந்த அநியாய செய்கை செம்மையாய் கடைந்து கொதித்தெழச் செய்யட்டும். வீரரின் வாள்கள் உறைகளினின்று துள்ளி எழும்பி இக்கேட்டிற் கேற்ற பிராயச்சித்தத்தை முடிக்கட்டும். நிர்ஜீவிதமானவைகளும் உயிர் பெற்று க்ரோதா வேசமாகி உலகினையே அழிக்கட்டும். இதோ என் ரக்தத்தில் தோய்ந்திருக்கும் என் வஸ்திரத்தின் முந்தானையைக் கிழித்துத் தருகிறேன். அதைக்கொண்டு சந்திர சேகரனுடைய வெற்றிக் கொடியைச் செய்யுங்கள். ரண ரங்கத்தில் அது என்றும் விஜயம் அடையும்; அதன் கீழிருந்து போரிடும் எந்த வீரனுக்கும் பராக்கிரமம் பதின்மடங்கு அதிகரிக்கும். நான் இறந்தாலும் நீங்கள் செய்திடும் யாவற்றையும் ஸூக்ஷ்ம சரீரத்தைக் கொண்டு நோக்குவேன். ராஜ நிஷ்டா நிர்த்தாரண ப்ரயத்தனத்தில் நீங்கள் நன்று முயன்று ஸ்தாபித்தாலன்றி என் ஆத்மா திருப்தி யடையாது. அமைதியற்று அலைந்திடும் சந்திர சேகரனுக்காக, ஸூர்ய குலத்திற்காக, பிரம்மா வர்த்தத்திற்காக, புருஷனாகட்டும், ஸ்திரீயாகட்டும் யார் யார் ஸர்வத்யாகம் செய்ய ஸித்தமா யிருக்கிறுர்களோ அவர்கள் யாவரையும் என் வயிற்றில் ஜனித்த குழந்தைகளைப்போல் அசரீரியா யிருந்தே காப்பாற்றுவேன். ம்ருநாளினீ! விக்ராந்த மஹாராஜாவிடம் நான் விடைபெற்றுக் கொண்டதாகச் சொல்லு. அவருக்கு வேண்டிய ஸஹாயம் செய்திடுவாயா? செய்! செய்!! சந்திரசேகரனை

நான் ஆசிர்வதித்ததாகச் சொல்லு. அவன் முடி மேல் ப்ரம்மா வர்த்தத்தின் மகுடத்தை ஸ்தாபிக்கும் வரையில் நான் எப்பொழுதும் தேவதை உருவாய் அவனை ரக்ஷித்திடவே ச்ரத்தை கொண்டிருப்பேன் என்று சொல். ம்ருநாளினீ! இதோ கடைசி முறை என் ராஜபக்த ப்ரதிக்ஞையை உன் பவித்ரமான பாதங்கள் மீது என் கையை வைத்து செய்கிறேன். விச்வத்திலுள்ள ஸகல தேவதா ஸாக்ஷியாய் செய்கிறேன். பரமேச்வரன் நிறைவேற்ற ஸமர்த்தரா யிருக்கிறார். என் அந்தியகாலம் ஸமீபித்து விட்டது. அதோ பார்........தேவாங்கனைகள் என்னை ஸ்வீகரித்திட........ ஆகாயமார்க்கத்தில்........நிற்கிறார்கள். ம்ருநாளினீ! என்னை ஒருமுறை சேர்த்து கட்டிக்கொள். உன் கைகள் அணைக்க.......உன் மடிமீதிருந்து என்....... உயிரை விடும்.......பெரும் பாக்யம்......நான் என்றும்........எதிர் பார்க்கவில்லை......நான் தன்யையானேன் பந்துக்களே....நான்......வருகிறேன்.......... விக்ராந்த மஹாராஜா!........விக்ராந்த மஹாராஜா!

(பிராணன் போய் விடுகிறது. ம்ருநாளினியும் மற்ற யாவரும் நமஸ்கரிக்கின்றனர்கள்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 3. களம் 1.

இடம் :—கூர்மதுர்க்கம். ஸரோஜினியின் அரண்மனை.

ப்ரவேசம் :—விக்ராந்தன், ஸரோஜனி, ஸர்தார்கள்.

விச்ராந்தன் :—ஸரோஜினீ! இந்த பெரிய விஷயத்தில் நீ தலையிட்டுக் கொள்ளாதே. சந்திர சேகரனை என்னிடம் ஒப்புவித்து விடு.

ஸரோஜினி :—மஹாராஜா! க்ஷமிக்க வேண்டும். சந்திர சேகர மஹாராஜாவுக்கு என் வீட்டில் அடைக்கலம்

தந்தபின், வெளியில் போகச் சொல்வது நியாயமா? அது க்ஷத்ரிய தர்மமா?

விக்ராந்தன் :—பதிப்ரேமையை மீற உன்னாலாகாது.

ஸரோஜினி :—பதிப்ரேமை என்னை விச்வாஸ காதகியாக்கவும் வல்லதோ? என்னை ராஜத்ரோகம் இழைக்கவா சொல்கிறீர்கள்?

விக்ராந்தன் :—அம்மா! உன்னை ராஜத்ரோகம் புரியவும் சொல்வேனோ? ஆயினும் உன் கணவனுடைய ஆணையை மறுக்க முடியாமல் நீ ராஜத்ரோகம் புரியும்படி வந்தே தீரும். அந்த ஸந்தர்ப்பம் ஏற்படுமுன் சந்திரசேகரனை என்னிடம் ஒப்புவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஸரோஜினி :—நான்கே மொழிகள் கூறி என் நாதனை நல் வழிக்குத் திருப்புவேன் நான்.

விக்ராந்தன் :—அம்மா, அது வீண் எண்ணம். துர்ஜயன் சித்தம் உன் நன்மொழிகளைக் கேட்டு திரும்பும் வழியில்லை. நான் வருவதற்குள் எங்கு அவன் வந்து சந்திரசேகரனை எடுத்துச் சென்று விடுவானோ என்று நான் இவ்வெட்டு நாட்களாய் பட்ட கவலை மட்டன்று. என்னை பிடித்திட எண்ணிறந்தவரை ஏவியிருக்கிறான். என் துணைவரையெல்லாம் த்ரோஹம் செய்து முற்று கை யிட்டிருக்கிறான். இவ்வளவு தூரம்போய் விட்டவன் மறுபடியும் நல்வழிக்குத் திரும்புவது அஸாத்யம்.

ஸரோஜினி :—ஆனால் "தர்மபாலனம்" என்னும் எங்கள் குல தர்மத்தை விடுத்து அடைக்கலம் புகுந்தவரை அனுப்பவேண்டியது தானோ?

விக்ராந்தன் :—அப்படியல்ல. என் சொற்படி செய்தால் உங்கள் குலத்தின் கீர்த்தி குறையாதிருப்பதற்கு வழியாகும்.

ஸரோஜினி :—ஸரி. என்மேல் உங்களுக்கு நம்பிக்கை யில்லை. அதுவும் என் பாக்யமே. விஜயஸேனா! போய் சந்திரசேகர மஹாராஜாவை அழைத்து வா.

(விஜயஸேனன் போகிறான்.)

மு. ஸர்தார் :—ஸர்க்கார்! கடைசியாய் தீர்மானித்தாய் விட்டதா?

ஸரோஜினி :—விக்ராந்த மஹாராஜாவின் ஆக்ஞையை நான் எவ்வாறு மீறுவது?

மு. ஸர்தார் :—எங்கள் ராஜபக்தியைக் காட்டிட ஸமயம் வந்ததென்று வெகு ஆனந்தமா யிருந்தோமே.

இ. ஸர்தார் :—ஐயோ! சந்திரசேகர மஹாராஜாவைக் காத்திட உத்ஸாகத்துடன் உறையிலிருந்து உருவிய கத்திகளை எவ்வாறு உறையிலிடுவது?

மு. ஸர்தார் :—இந்நகர வாசிகளெல்லாம் மன முடைவார்களே.

ஸரோஜினி :—உங்களுடைய பெரும் பக்திக் கிடம் கொடாமல் போவது என் துர்ப்பாக்கியமே. ஆயினும் நான் சக்தியற்றவளா யிருக்கிறேனே.

விக்ராந்தன் :—உங்களுடைய உயர்ந்த ராஜ நிஷ்டையைக் கண்டு என் மனம் பூரிக்கின்றது. உங்களைப் போன்றவரிடம் நான் சந்தேஹம் பாராட்டுவது எனக்கே வெறுப்பா யிருக்கிறது. ஆயினும் நான் என்ன செய்வேன்? இவ்விஷயத்தில் மாத்திரம் அடிக்கடி எனக்கு என் மீதே சந்தேஹம் தோற்றுகிறதே. நான் என்ன செய்வேன்? என் புத்திக்கு மாறாய்ச் செல்ல எனக்கு தைரியமில்லை. மித்ரர்களே! மன்னிக்க வேண்டும். உங்கள் மனதைப் புண்படுத்துகிறேனென்று என் மேல் கோபம் வேண்டாம்.

மு. ஸர்தார் :—அதோ பாருங்கள், ஜனங்கள் திரள் திர ளாய்க் கூடி என்ன உத்ஸாகத்துடன் மகாராஜாவின் வரவை எதிர் பார்த்திருக்கிறார்கள்! கூர்ம துர்க்கத்தில் இதுவரை நான் இவ்வளவு உத்ஸாகத்தைக் கண்டதே யில்லை.

இ. ஸர்தார் :—ஆஹா! அதென்ன குழப்பம்? யாரோ ஒருவ னுக்கு யாவரும் விலகி வழி விடுகிறார்கள்!

மு. ஸர்தார் :—அடேடே! அவன் கந்தனன்.

விக்ராந்தன் :—யார் கந்தனனா? ஏன் அவ்வளவு படபடப் புடன் வருகிறான்?

ஸரோஜினி :—அது என்ன கொடி அவன் கையில்? அவன் உடலெல்லாம் என்ன கறைகள்?

விக்ராந்தன் :—ஐயோ! இது ஏதோ அனர்த்தமா யிருக்கும் போலிருக்கிறதே. என்னமோ தெரியவில்லையே.

கந்தனன் :—(பிரவேசித்து) எங்கே? ராணி ஸரோஜினி எங்கே?

ஸரோஜினி :—இதோ, இதோ, கந்தனா, என்ன சமா சாரம்?

விக்ராந்தன் :—கந்தனா! ஏனப்பா இவ்வளவு துக்கிக் கிறாய்?

கந்தனன்:—யாரது? மஹாராஜாவா? ஐயய்யோ! மஹா ராஜா! துன்மார்க்கர் அவர்களுடைய விரோதத்தை ஸாதித்து விட்டார்களே.

விக்ராந்தன்:—என்ன ......அது?

கந்தனன் :—அந்த பயங்கர செய்தியை உம்மிடம் கூறவும் நாவெழவில்லையே.

விக்ராந்தன்:—என்ன?! பயங்கர செய்தியா?

கந்தனன்:—(தேம்பிக்கொண்டு) உயிரினும் அரிதாகியது வியோகமடைந்தால் பயங்கர செய்தி யில்லையா?

விக்ராந்தன்:—உயிரினும் அரியது வியோகமா? என் தேவாங்கனைக்கு ஓர்வித ஆபத்து மில்லையே?

கந்தனன்:—வரக்கூடாது. வரக்கூடாது. ஆயினும் வரவில்லை யென்றால் வாஸ்தவ மாகாதே. ஈசா! ஈசா!!

விக்ராந்தன்:—என்ன !? என்ன !? கந்தனா.

கந்தனன்:—மஹாராஜா! உம்முடைய தேவாங்கனை உம்மை விட்டு சென்று விட்டாள்! ஐயோ! திரும்பிவர மாட்டாள்! அதம ராக்ஷஸர் கையில் பட்டு அழிந்து விட்டாளே. (யாவரும் திகைத்து நிற்கிறார்கள்.)

விக்ராந்தன்:—ஐயய்யோ! தேவி! தேவீ! என்னை விட்டு வஸந்தன் பின் சென்றாயோ? ஹா! ஹா!!

எல்லாரும்:—உலகத்திற்கே உத்தம பூஷணம் அழிந்ததே!

விக்ராந்தன்:—ஹா! ஹா!! ஆனால் கந்தனா என் தேவியின்.... மரணத்திற்கு யார் காரணம்? மதாலஸையின் ஆணையின்மேல் சஸ்திரத்தால் என் தேவியைத் தீண்டியவன் யார்? கொடிய கோதண்டனா?

கந்தனன்:— இல்லை. இல்லை. கோதண்டன் செய்திருந்தால் வியக்கத்தக்க தில்லையே. ஆனால் உங்களால் உயிர் பெற்றவன் மதாலஸையின் மீது ஆதியில் வைத்திருந்த த்வேஷத்தை யெல்லாம் மறந்து அவள் பாதங்களையே பற்றி அவளாக்ஞையைக் கொண்டு படுகொலை இழைத்தான்.

விக்ராந்தன்:—சொல். சொல். அச் சண்டாளன் பெயரைச் சொல் இக்ஷணம்.

ஸரோஜினி.—கந்தனா! சொல்! அந்த ஸ்திரீ காதகன் மஹா பாதகனுடைய பெயரைச் சொல். யாராயிருந்தாலும் சொல் இக்ஷணம்.

கந்தனன்:—என்னவென்று உரைப்பேன் அம்மணீ? இப் பேருபகார மிழைத்தவர்...உங்கள் பதி—துர்ஜயன்.

விக்ராந்தன் :—என்ன ! துர்ஜயனு ?

கந்தனன் :—ஆம். மஹாராஜா. துர்ஜயனைக் கொண்டே இத்தொழிலை செய்வித்தனள் அந்த ராக்ஷஸி.

ஸரோஜினி—(ப்ரமித்து) என்ன! ராஜதுர்ஜயர் தேவி தேவாங்கனையைக் கொலை செய்தாரா? இல்லை. இல்லை. நீ ஏதோ தவறுதலாய் சொல்கிருய்.

கந்தனன் :—ராணீ ! நான் பொய் சொல்பவனல்ல.

ஸரோஜினி :—ஐயோ! ஈசனே! இதென்ன நான் கேட்பது ?

விக்ராந்தன் :—துர்ஜயா ! துர்ஜயா !! இதுவரையில் உனக்குச் செய்த உபகாரங்களுக்கெல்லாம் நல்ல ப்ரதி செய்தாய் !

கந்தனன் :—(பதறிக்கொண்டு) மஹாராஜா ! நீங்கள் செய்த உபகாரங்களுக்கு அந்தச் சண்டாளன் செய்த ப்ரதியைக் கேட்டால் உங்கள் உடம்பெல்லாம் சிலிர்க்கும், சாந்தமாய் ஓடிக்கொண்டிருக்கும் ரக்தம் பொங்கியெழும். "பழி" "பழி" யென்று பதறி யெழுந்து பறந்திடுவீர். விக்ராந்த மஹாராஜா! ஸரோஜினி ராணீ !! ஸர்தார் மஹா ஜனங்களே !!! இதோ பாருங்கள் இக்கொடியை. இது தேவி தேவாங்கனை யணிந்திருந்த வஸ்திரத்தின் முந்தானை. உயிர் போகும் தருணத்தில் இதைக் கிழித்து அந்த உத்தமதேவதை கொடுத்தனள். மதாலஸையின் ஏவலினுல் அந்த துர்ஜயன் இழைத்த படு ஹிம்சைகளுக்கெல்லாம் இந்த ரக்தம் படிந்த வஸ்திரமே ஸாக்ஷி. தேவதைக்கொப்பான என் தாயை எண்ணிலா யமபாதைகளுக்கு உட்படுத்திக் கடைசியில், ஐயோ! உயிருடனிருக்கும் போதே துஷ்ட ஜந்துக்களை விட்டுச் சின்னுபின்னப் படுத்திக் கொன்ருர்களே ! இந்த ப்ரம்மா வர்த்தத்தின் அதிர்ஷ்ட தேவதையை, பார்த்த அளவில்

பாவனமாக்கும் ப்ரத்யக்ஷமாதாவை, அனைவருக்கும் அமுதளித்த அன்னபூரணியை, நான் மனமார பூஜை செய்து வந்த மஹாலக்ஷ்மியை, நிகரற்ற மைந்தனை யும் நிக்ரஹித்து தன் நிஷ்களங்கபதியின் நிஷ்டையை நிலைநிறுத்திய நித்திய தேவதையை, இந்தக் குற்றமற்ற விக்ராந்த மஹாராஜாவின் குல பத்னியை, அன்னாஹாரமின்றி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருந் தார்களே; உங்களுக்கு உருகவில்லையா மனம்? பாருங் கள்! இந்தக் கொடியைப் பாருங்கள்! இதன்மேல் விளங்கும் ஒவ்வொரு கறையிலும் அந்தத் தேவியின் திவ்ய சரீரத்தின் ரக்த பிந்துக்கள் நிறைந்துள்ளன. ஐயோ! கடைசி தினம் அந்த அரக்கர்கள் என் தாயின் தாமரைக் கண்களை இரும்பிக் கம்பிகளால் குத்தி நாச மாக்கியபோது குழம்பி வடிந்த ரக்தத்தின் கறைகளைப் பாருங்கள்; இதோ என் தாய் அணிந்திருந்த கணை யாழி.

(வஸ்திரத்தையும் கணையாழியையும் விக்ராந்தனிடம் கொடுக் கிறான்.)

விக்ராந்தன் :—ஹா! இதைக் காணும்போது என் அந்தக் கரண சாந்தி என்னைவிட்டு அகல்கிறது. என் கோபம் மூண்டெழுகின்றது. என்ன அடக்கியும் என் கை என் கத்தியை நாடுகிறதே.

கந்தனன் :—நண்பர்களே! இந்த ஒவ்வொரு கறையும் ப்ரம்மாவர்த்தத்தின் கீர்த்திக்கும், சௌர்யத்திற் கும், ஆண்மைக்கும், ஒரு களங்கம். ஒவ்வொரு கறையும் ப்ரம்மாவர்த்தத்தின் வீர்யம் மழுங்கிற்று, ப்ரம்மாவர்த்தத்தின் ஸத்பம் நிர்த்தூளியாய்ப் போயிற்று, ப்ரம்மாவர்த்தத்திற்கே அழியுங்காலம் கிட்டிவிட்டது என்று உலகிற் கெல்லாம் உரக்க முறை யிடுகிறது. தேவிதேவாங்கனை கண்களை யிழந்து துடித் துக்கொண்டு கொடிய மிருகங்களுக்கு இரையாவதற்கு

ஸித்தமாய் விழுந்திருந்த போது அந்த மித்ரத்ரோகி துர்ஜயன் தன் காலால் தேவியின் ச்ரேஷ்டமான சிரத்தின் மேல் உதைத்தான். அப்பொழுது—

விக்ராந்தன் :—(பரபரப்புடன்) ஆ! ஆ!! தேவியின் சிரத்தையா உதைத்தான்?

கந்தனன் :—ஆம்.

ஸரோஜினி :—என்னை யாராவது பிடித்துக் கொள்ளுங்கள். என்னால் இதைச் சகிக்க முடியவில்லை.

விக்ராந்தன் :—பழிவாங்க பதைத்திடும் பாப எண்ணங்களே என் மண்டையில் மனமார உலாவிடுங்கள். கொதித்து மூண்டெழும் கோபாக்னியே! என் உள்ளத்தில் பிரளயத்தை ஊதி யெழுப்பிடு. சாந்தமாய் அமைந்திருக்கும் அவயவங்களே! உங்கள் உறக்கத்தை நீத்து, உக்ரத்தை உட்கொண்டு உலகினை யழித்திட உவந்தெழுந்திடுங்கள். வைரிகள் உதிரத்தை வாரியே உண்டிட வாய் திறந்தேங்கிடும் என் வாளாம் தேவே! சீறி யெழுந்திடும் சிறுத்தையைப் போலவே துஷ்ட துர்ஜயப் பஞ்சையின் நெஞ்சினை இஷ்ட பூர்த்தியாய் இரண்டாய் சேதிப்பாய்.

(வாளை ஓங்கி வரிசைகாட்டி வெளியே புறப்படுகிறான்)

(பிரவேசம்—சந்திரசேகரன்—விஜயசேனன்)

சந்திரசேகரன் :—விக்ராந்த மஹாராஜா!

விக்ராந்தன் :—யார்? சந்திரசேகரனா? (ஓடிவாரிகட்டியணைத்து) கண்ணேவா! உன்னை என்மார்புடன் அணைக்கிறேன். (ஸ்வகதம்) என் ஆசைக்கெல்லாம் ஆதாரம் ஆபத்தின்றி இருப்பதைக் கண்டு என் துயரெல்லாம் ஒழிந்தேன். தேவனே! ஸூர்யவம்ச ஜகன்மான்ய ஸிம்ஹாஸனத்தின்மேல் இந்த பாலனை அமர்த்தி கண்டு களித்திடும் ஸுதினமும் எனக்கு லபிக்கப் போகிறதா?

சந்திரசேகரன் :—யாரது? கந்தனு! நீயும் வந்தாயா? தேவியும் வஸந்தனும் ஏன் வரவில்லை?

விக்ராந்தன் :—(ஸ்வகதம்) தேவியும் வஸந்தனுமா? வேண்டாம். அதை இக் குழந்தையிடம் சொல்லி வீண் துயரம்! உண்டாக்குவானேன்? (பிரகாசமாய்) கண்ணே! உன்னை இங்கிருந்து அழைத்துப்போக கந்தனையும் அழைத்துக்கொண்டு வந்தேன்.

சந்திரசேகரன் :—ஸரி, இதோ வருவதற்கு ஸித்தமாயிருக்கிறேன். (ஸரோஜினியிடம்) அம்மணீ! நான் விக்ராந்த மஹாராஜாவுடன் போக எனக்கு விடையளிக்க வேண்டும்.

ஸரோஜினி :—விடையளிக்க வேண்டுமா? நான் விடையளிப்பதெப்படி? எங்கள் குலத்தின் ஸத்வதீரதேவதை ஸ்வர்க்கத்திலிருந்து தன்னைக் காப்பாற்றக் கதறுகிறுளே. தேவி தேவாங்கனையும் வஸந்தனும் செய்திட்ட உஜ்வலமான க்ருத்யங்கள் மூர்த்தி ஸ்வரூபமாய் என்னெதிர் நின்று கருணைவீசும் கண்ணுடன் கைகாட்டி யழைக்கின்றனவே. நான் உன்னை எப்படி இங்கிருந்து போகவிடுவேன்? துர்ஜயன் செய்த ஸத்யஹத்தியை நான் ஸம்பூர்ணம் செய்வேனே?

சந்திரசேகரன் :—மஹாராஜா! ராணி சொல்வது ஒன்றும் புலப்படவில்லையே.

விக்ராந்தன் :—பாலா! ராணியும் அவளுடைய ஸர்தார்களும் உன்னை இங்கேயே வைத்திருக்கக் கோருகிறுர்கள்.

சந்திரசேகரன் :—ஐயா, இவர்கள் மிகவும் அன்புடையவர்கள். இந்த சில தினங்களில் பார்த்தவரையில் இந்த ராணியின் ஸ்வபாவமும் தேவி தேவாங்கனை யுடையதைப் போலவே ப்ரீதி மிகுந்து உதாரமுடையதென்று அறிந்தேன்.

விக்ராந்தன் :— குழந்தாய்! நீ உரைப்பது உண்மையான வார்த்தையே. ஆயினும் சில காரணங்கள்பற்றி நாமிங் கிருப்பது உசிதமல்ல.

ஸரோஜினி:—விக்ராந்த மஹாராஜா! கடைசிமுறை உம்மை வேண்டுகிறேன். சந்திரசேகர மஹாராஜாவைக் காத்திடும் கடமையை எங்களுக்களித்திடும், எங்கள் உயிர் களைக் கொடுத்தாகிலும் காப்பாற்றுவோம்.

ஸர்தார்கள் :— நாங்களும் வேண்டுகிறோம். தயவுசெய்து கேளும்.

விக்ராந்தன் :—என் அபிப்ராயத்தை முன்பே உரைத்துவிட் டேன்.

ஸரோஜினி :— அவ்வளவே உங்கள் ஆக்ஷேப மென்றால் இதோ பாரும் அதைப் போக்குவேன். உமது பாத ஸாக்ஷியாய் இதோ ஸகல லோகத்திற்கும் தெரிவிக்கி றேன் : "துர்ஜயன் இனி எனக்கு ஜன்மவைரி. இனி அவ்வாறே நடந்துகொள்வேன்."

ஸர்தார்கள் :— இனி நாங்களும் அவ்வாறே நடந்துகொள் வோம்.

விக்ராந்தன்:—அம்மா ஸரோஜினி! யோசியாமல் பேசாதே. இவ்வார்த்தை கடைசி வரையில் நிலைத்திருக்காது.

ஸரோஜினி :—என்ன? ஸ்திரமாய் இருக்காதா? நிலைத்திருக் காதா ?

விக்ராந்தன் :—ஆம், பதிப்ரேமையும் பத்னி தர்மமும் உன் னைத் தன் வசமாக்கி எங்களையும் உன்னுடன் நரகத்திற் கிழுத்துச் செல்லும்; ஆகையால் நாங்கள் போகிறோம். நீ இதுவரையில் செய்துள்ள உபகாரமே மெச்சத் தக் கது ; இனி நாங்கள் இருப்பது ஸரியல்ல.

ஸரோஜினி : — மஹாராஜா! நில்லுங்கள். சந்திரசேகர மஹாராஜாவை அழைத்துச்செல்ல உங்களை விடமாட்

டேன். அவரை அழைத்துச் செல்வது எங்கள் குல கீர்த்தியையே அழைத்துச் செல்வதாகும். நான் குலத் துரோகம் புரிந்தால் என் மூதாதைகள் என்னை சபித் திடுவார்கள்.

விக்ராந்தன் :—ஆனல் அதற்கு என்னதான் வழி?

ஸரோஜினி :— வழியா? வழியும் அறிவேன். விக்ராந்த மஹாராஜா! இதோ நான் சொல்வதை செவிசாய்த் துக் கேளும். துர்ஜயனுடைய பத்னி யெனும் பட் டத்தை இன்றுடன் நீத்தேன். ஸத்யமும் தர்மமும் என்று அவன் கைப்பட்டு மாய்ந்தனவோ அன்றே நான் மாங்கல்யம் இழந்தேன். அவன் இழைத்த படு கொலை, தர்மத்தையும் ஸத்யத்தையும் இழைத்ததன்று. ஆனல் தன்மனம் தேருமல் தர்மமும் பாராமல் திகைத் தவன் புரிந்திட்ட தற்கொலையே யாகும். அக்ஷணம் இறந்தனவென் பக்ஷமும் பதியும். இனி எனக்கு பதி யெவருமில்லை. நான் எவருடைய பத்னியுமில்லை. இதோ என் நெற்றியில் அணிந் துள்ள குங்கும திலகத்தை அறவே அழித்தேன். மாநிலந்தன்னிலே மங்கையர் யாவருக்கும் மாபெரும்பேறென மாதவர் போற்றிடும் மங்கல ஸூத்ரமும் அறுத்திதோ எறிந்தேன்... இன் னும் உண்டோ ஸந்தேஹம் மஹாராஜா?

ஸர்தார்கள் :—மஹாராஜா! இதற்கு பின்னும் எம் மீது ஸந் தேஹம் கொண்டால் தேரும்.

விக்ராந்தன் :—ஆனல் இந்தக் கத்தியின் மீது ஸத்யம் செய் யுங்கள். (கத்தியை உருவி) ஸரோஜினி! நீ க்ஷத்ரிய நந்தினி. இக் கத்தியோ க்ஷத்திரியருடைய குலதேவ தை. இதோ இந்த தேவதா ஸாக்ஷியாய் நீயும் உன் ஸர்தார்களும் ஸத்யம் செய்யுங்கள்.

ஸரோஜினி :—இதோ இந்த குலதேவதா ஸாக்ஷியாய் நான் செய்யும் சபத மென்னவென்ருல் "சந்திரசேகர மஹா

ராஜாவின் ஸேவகார்த்தம் என் ஸர்வைச்வர்யத்தையும் அர்ப்பணம் செய்துவிட்டேன். இந்த சபதம் பங்கமடைந்தால் அந்த ஸர்வலோக ஸாக்ஷியான பரமேச்வரன் எனக்கு என்றும் நீங்காத ரௌரவ நரகத்தையளிக்கட்டும்.

(சபதம் செய்கிறாள்.)

ஸர்தார்கள் :— நாங்கள் யாவரும் எங்கள் ராணியின் சபதத்தை எங்களுடைய சபதம்போலவே காத்து ரக்ஷிப்போம்.

(சபதம் செய்கிறார்கள்.)

விக்ராந்தன் :—அம்மா ஸரோஜினி! எழுந்திரு. மித்ரரே! எழுந்திருங்கள். உங்களிடம் சந்திரசேகரனை ஒப்புவிக்க ஸித்தமாயிருக்கிறேன். பாலா! சந்திரசேகரா! உன்னை அழைத்துப்போகவே நான் வந்தேன். ஆனால் இந்த ராஜபக்த சிகாமணிகளுடன் நீ சில நாள் தங்கியிருக்க வேண்டும். கந்தனா! சந்திரசேகரனைக் காத்திட உனக்கு நான் உரைக்கவேண்டியது ஒன்றுமில்லை. ஸரோஜினி! இதோ எடுத்துக்கொள். ஸூர்ய குலம் அழியாது உறைந்திட நின்றிட்ட நுட்பமாம் நுண்ணிய நூல்! ப்ரம்மாவர்த்தத்தின் ப்ரஜா ஜனங்களின் நன்மையை விருத்தி செய்விக்கும் புனிதமான நிதி! விக்ராந்தனுடைய உயிரையே உய்வித்துவிடும் உத்தம உரு! இதோ ஒப்புவித்தேன் உன்னிடம். அம்மா! அதை ரக்ஷிப்பாய். நீ தேவதா ஸாக்ஷியாய் செய்துள்ள சபதத்தை ரக்ஷிப்பாய்.

ஸர்தார்கள் :— மஹாராஜா! கவலை வேண்டாம். எங்கள் உயிர்கள் ஸாக்ஷி.

விக்ராந்தன் :—ஸரோஜினி! ஸர்தார்களே! இதோ இந்தத்வஜத்தை உங்களிடம் ஒப்பிவித்து போகிறேன். இக்கோட்டையின் சிகரம்மேல் அது பறக்கட்டும். ஸரோஜினி! ஈசன் கிருபையால் ஒருகாலும் உன் புத்தி சல

னப்படாது. அப்படி ஒரு வேளை பட்டால் இக் கொடியை ஒருமுறை நன்ருய்ப் பார்ப்பாயாகில் எந்த தர்ம ஸங்கடத்தினின்றும் உன்னை அது விடுவிக்கும்.

(கொடியைக் கொடுக்கிருன்.)

நான் வருகிறேன். செய்ய வேண்டியவற்றை யெல்லாம் முடித்துக்கொண்டு சீக்கிரம் வருகிறேன். அதுவரையில் இவனை ரக்ஷிக்கும் பெரும் பாரத்தை உங்கள் யாவர் பேரிலும், பரமேச்வரன் பேரிலும் போட்டுப் போகிறேன். ஈசன் உங்களுக்கு உதவு வாராக.

(போகிருன்.)

எல்லோரும் :—ததாஸ்து.

[கந்தனன் திடீரென்று களைத்து விழுந்து மூர்ச்சை யடைகிருன். சந்திரசேகரனும் ஸரோஜினியும் அவனை ஆச்வாசப்படுத்த, மெல்ல எழுந்திருக்கிருன். வெளியில் "விக்ராந்த மஹாராஜாவுக்கு ஜேய்" என்று பெரும் ஆரவாரம் உண்டாகிறது. அதைக் கேட்டு கந்தனன் துள்ளி யெழுந்து வெளியே ஓடுகிருன்.]

(காட்சி முடிகிறது.)

அங்கம் 3. களம் 2.

இடம் :—மதாலஸையின் அரண்மனையில் நந்தவனம்.

பிரவேசம் :—மதாலஸை, துர்ஜயன்.

மதாலஸை :—துர்ஜயா! கேவலம் ஒரு சிற்றரசன் ஓர் ஸார்வபௌமினியின் மீது காதல் கொள்வது ஸரியா?

துர்ஜயன் :—ஸர்க்கார்! அது அவரவர் இஷ்டத்தைப் பொறுத்தது. ஸூர்ய சந்திரர்களுடைய ஆசைக்குப் பாத்திரமான இந்த பூமியைச் சுற்றி அநேக நக்ஷத்திரங்களும் வலம் வந்துகொண் டிருக்கின்றன. ஸமயம்

பார்த்து ஒவ்வொரு வேளைகளில் மேல் விழுந்தும் ஸ்பர்சித்து விடுகின்றன. அதனால் பரம உதார முடைய பூமாஸுந்தரி கொஞ்சமாவது வெறுப்படை கிறாளா?

மதாலஸை :—நீ என் மீது காதல் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை.

துர்ஜயன் :—ஸர்க்கார்! உங்களுக்கு என் மீது காதல் இல்லாவிட்டாலும் நான் உங்கள் மீது காதல் கொள்ளக் கூடாதா?

மதாலஸை :—அது த்ருப்தியா யிருந்தால் ஸுகமாய் செய். ஆனால் நமது அந்தஸ்துகளுக்குள் இருக்கும் வித்யாஸத்தை மறக்காதே. ஜாக்கிரதை.

துர்ஜயன் :—ஸர்க்கார்! மன்மதன் ஸந்நிதானத்தில் யாவரும் ஸமமே. ப்ரேமை உதயமானால் எல்லா வித்யாஸங்களும் எங்கோ பறந்தோடி விடும். ஆனால் எனக்கு அந்த பாக்யம் இந்த ஜென்மத்தில் கிடைக்கப் போகிறதா? ஸர்க்கார்! உங்கள் காதலின் மதுரமான சப்தம், உங்கள் காதலின் மோஹன திருஷ்டி, உங்கள் காதலின் கோமள ஸ்பர்சம் இவைகள் இந்த பாபிக்கு என்றும் கிட்டாதா?

மதாலஸை :—கிட்டுமென்று தோன்றவில்லை. அப்படி எப்பொழுதாவது உன்மேல் எனக்குக் காதல் உண்டாயிற்று என்று வைத்துக்கொள். அப்பொழுது நீ என்னை வசமாக்கி ஆளவேண்டுமென்று பார்க்கமாட்டாயா?

துர்ஜயன் :—ஸர்க்கார்! அந்த எண்ணம் எனக்கு இதுவரையில் உதித்ததில்லை. ஆனால் நான் என்றும் உங்கள் அடிமையா யிருக்கவேண்டுமென்றே கோருகிறேன். உண்மையான காதலுக் கடையாளம் அடிமையாவதேயன்றி அடிமை கொள்ளுவதல்ல.

மதாலஸை :—ஆனால் ஸரி. மறக்காதே. நீ இந்த மதாலஸையின் மணாளனானாலும் ப்ரம்மாவர்த்த மஹாராணியின் தாஸனென்பதை மறக்காதே. ஆனால் கொண்டுவா உன் காதலின் காணிக்கைகளை.

துர்ஜயன் :—ஹா! ஹா! ஹா! என் ஸந்தோஷத்தை என்ன சொல்லுவேன். என் தெய்வமே! இதோ அந்த அழகிய ஸுகந்த புஷ்பங்களை உங்கள் கூந்தலிலிடுகிறேன்.

மதாலஸை :—புஷ்பங்களே காதலுக்கேற்ற காணிக்கை. ஆனால் என் கூந்தலின்மேல் அவைகளை வைக்க உன்னை விடமாட்டேன்!

துர்ஜயன் :—ஏன்?

மதாலஸை:—என் சிரத்தைத் தீண்ட உனக்கென்ன யோக்யதை? வேண்டுமென்றால் அந்த புஷ்பங்களால் என் சரணங்களை அர்ச்சனை செய்.

துர்ஜயன் :—உங்களிஷ்டம். (அவள் பாதங்களை புஷ்பங்களால் அர்ச்சிக்கிறான்) ஸர்க்கார்! எப்பொழுதும் என்மேல் கிருபையிருக்க வேண்டும். (அவள் கைகளை பிடிக்கப் போகிறான்).

மதாலஸை :—போ! தீண்டாதே என்னை!

துர்ஜயன்:—இந்த உதார ஹஸ்தத்திற்கு ஒரு முத்தம்........?

மதாலஸை :—என் கையை முத்தமிடுவதா நீ? முத்தமிட வேண்டுமானால் என் சரணம் பட்டு பாவனமடைந்த இந்த பூமியை முத்தமிடு.

துர்ஜயன் :—நல்லது. நீங்களிடும் கட்டளையை சிரமேல் ஏற்றுக் கொள்கிறேன். என்றாவது உங்கள் கரத்தை முத்தமிடும் பாக்கியம் கிட்டுமென்று நம்பி இதோ.

(அவள் காலை வைத்திருக்கும் இடத்தில் தரையை முத்தமிடுகிறான்.)

மதாலஸை :—(சிரித்துக்கொண்டு) துர்ஜயா! உன்னுடைய நிரபேக்ஷ பக்தியைக் கண்டு ஸந்தோஷம் கொண்

டேன். வா. என் கரத்தைப் பிடித்து அந்த லதாக்ர ஹத்திற்கு என்னை அழைத்துப் போ.

(கை கொடுக்கிருள்.)

துர்ஜயன் :—ஆஹா! என்ன ஆனந்தம்?! வாருங்கள், மஹா ராணீ ஸர்க்கார்.

(மதாலஸையின் கையைப் பிடித்து அழைத்துச் செல்கிருன்.)

(கோதண்டன் மறு பக்கத்திலிருந்து பிரவேசம்.)

கோதண்டன் :—ஆஹா! பார் அதோ! இருவரும் கை கோர்த்து உல்லாஸமாய்ப் போவதை? ஆ! அவளைப் பளிங்காஸனத்தின் மீது அமர்த்துகிருன். புஷ்பங்களை அவள்மேல் குவிக்கிருன்! கூந்தலில் புஷ்பங்கள் சூட்டு கிருன்! ஐயோ! துர்மார்க்கன் அவள் கன்னங்களைத் தொடுகிருன்! ஓஹோ! அவ்வளவு தூரம் போய்விட் டாஞ? அவள் கழுத்தில் மாலை போடுகிருன்! அடி சண்டாளி! அவனைப் பார்த்து புன்முறுவலா செய் கிருய்? என்ருல் இதைப் பார்த்து ஸகிக்க முடியாது. இந்த பாதகி இதுவரையில் ஜெயமடைந்ததற்கெல்லாம் நான் காரணமா யிருக்க இப்பொழுது தன் காரியமான தும் என்னை ஏமாற்றப் பார்க்கிருளோ? மதாலஸே! மதாலஸே!! வேண்டாம்! வேண்டாம்! விஷத்துடன் விளையாடாதே. விக்ராந்தன் பகை இப்பொழுது தான் ஆரம்பம். என்னை விரோதித்துக் கொண்டால் உனக்கு விநாசம்தான். இந்த பேடி துர்ஜயஞ உனக்கு உதவப் போகிருன்? அதோ பார்! பார்!! அவள் கையை முத்தமிடுகிருன். பார்! இவனை எப்படி பிரித்து வைப்பது? ஊம்—இதோ வருகிருள். வரட்டும். வரும் போது கூட அவனைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே வர வேண்டுமா?

(மதாலஸை திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டும் சிரித்துக் கொண்டும் பிரவேசம்.)

மதாலஸை—(ஸ்வகதம்) மான் வலேயில் நன்ருய்ப் பட்டது. இப்பொழுது இந்த பானத்தில் விஷத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக ஊர வைத்து ப்ரயோகம் செய்திட, கோதண்டன் மேல்—

(திரும்பி கோதண்டனைப் பார்த்து) அடடே! கொஞ்சம் முடுக்கி லிருக்கிருர்போலும். லதாக்ரஹத்தில் நடந்ததை யெல்லாம் பார்த்திருக்க வேண்டும். நல்லது. நல்லது. (அவனிடம் சென்று) என்ன கோதண்டா! ஏன் கவலே யுற்றிருக்கிருய்?

கோதண்டன் :—(பின் சென்று) மதாலஸே! நீ என்னை சீக்கிரம் விவாகம் செய்து கொண்டால் நல்லது. இல்லாவிட்டால் மிகவும் கஷ்டத்திற் கிடமாகும். நீ மஹாராணி பதவியிலிருந்து மரியாதை வகித்திருப்பது நான் உன் முன் தலேவணங்கி, "உத்தரவு" "உத்தரவு" என்று சொல்லிக்கொண் டிருப்பது! எனக்கு இனி இந்த அவமானம் வேண்டாம்.

மதாலஸை :—கோதண்டா! கோபியாதே. இந்தக் குழப்பங்களெல்லா மில்லாவிட்டால் நம்முடைய மனேபீஷ்டமன்றே பூர்த்தியா யிருக்குமே. எல்லாம் தெரிந்தும் நீ இப்படி பேசலாமா?

கோதண்டன் :—சே! சே! உனக்கு என்மேல் காதலேயில்லே. உன் எண்ணமெல்லாம் இப்பொழுது துர்ஜயன் மேல் தான். இல்லாவிட்டால் ஏன் அவனுடனேயே அதிகமா யிருக்கவேண்டும்? என்னுடன் தனித்து இரண்டு மொழிகள் சொல்ல உனக்கு ஒழிவதில்லே. ஆனல் ஸதா அவனுடன் இருக்கிருய். அவனிடம் உனக்கு—அதிருக்கட்டும் அவன் உன் கையை முத்தமிட்டபோது எப்படி லஜ்ஜையற்று இருந்தாய்?

மதாலஸை :—கோதண்டா! கோதண்டா! என்ன சொற்கள்? நீயா இவ்வாறு மதாலஸையிடம் பேசுகிருய்?

கோதண்டன் :—போதும்! நீ வேஷம் போடுகிறாய். உன் மோகத்தினால் நான் ஸகலத்தையும் நாசமாக்கிக்கொண்டேனே யென்று வருந்துகிறேன். உன் காரியம் ஆய்விட்டது. இனி உனக்கு என்னைப்பற்றி என்ன கவலை? அழகும், பருவமும் வாய்ந்த வாலிபன் உனக்கு வாய்த்திருக்க இனி யென்னைப்போன்ற கிழட்டு, வரட்டு, முறட்டுத் துணைவன் உனக்கெதற்கு?

மதாலஸை—கோதண்டா! அந்த துர்ஜயன் மேலா எனக்குக் காதல்? அந்த வல்லமையற்றவனிடமா எனக்குக் காதல்? என் பாததூளியை தலையிலணிந்துக் கொள்கிறானே ஆண்மையற்றவன்! நம்முடைய காரியம் முடிவதற்காக நான் அவனிடம் இவ்வாறு பாசாங்கு செய்கிறேன். நீயே அப்படி செய்யவேண்டுமென்று சொன்னதை மறந்தாயோ?

கோதண்டன் :—பேஷ்! நீங்களிருவரும் லதாக்ரஹத்தில் கூடி குலாவவேண்டியது! அதை நான் பார்த்துக்கொண்டிருக்கவேண்டியது! பார்த்தாலும் ஸந்தேகம் கொள்ளலாகாது! நன்றாயிருக்கிறது. அது ஒன்றுமில்லை மதாலஸே! அவன் குலத்தைக்கண்டு அவன் மேல் ஆசைகொண்டிருக்கிறாய். அவன் எவ்வளவு அழகும், யௌவனமும் படைத்தாலும் ராஜபுத்திரனா யில்லாவிட்டால் அவனைக் கண்ணெடுத்தும் பார்த்திருக்கமாட்டாய். இல்லாவிட்டால் அவன் என்னையும்விட என்ன உயர்ந்தவன்? ஆயினும் மதாலஸே! நான் உயர்குலத்தி லுதிக்காவிட்டாலும் என் குலத்துதிப்போரை உயர் குலத்தவராக்க வல்லவன். இதை யாகிலும் நீ சற்று யோசிக்கவேண்டும்.

—

மதாலஸை :—கோதண்டா! என்னை என்னவென்று நினைத்தாய்? குணம் வாய்ந்தவரை கௌரவிக்க வேண்டிய ஸமயத்தில் குலத்தையும் கோத்திரத்தையும் இன்னும் வேறு அற்ப சமாசாரங்களையும் நினைப்பவள் நானன்று.

உன் பராக்ரமத்தினுல்தான் உன்மேல் உண்மையான காதல் கொண்டிருக்கிறேன். ஏன் வீண் ஸந்தேகம்? பிரயகரா! (அவனை இறுகத் தழுவி) இப்பொழுது ஸந்தேகம் தீர்ந்ததா?

கோதண்டன் :—கண்ணே! என்ருே தீர்ந்தது. (அவளைத் தழுவுகிருன்) நான் என்ன செய்வேன்? உன் மதுரம் பொழிந்திடும் கண்கள் என் உள்ளத்தின் மேல் பட்டவுடன் அதை மிருதுவாக்கி உருக்கிவிடுகின்றன. கண்ணே மதாலஸே! நான் சொன்னதையெல்லாம் மறந்து என்னை மன்னிப்பாய். ஆனுல், நீ எப்பொழுது என் மனைவியாவாய்?

மதாலஸை:—இப்பொழுதே நான் உன் மனைவி. ஆனுல் லோகஸாக்ஷியாய் வெகு சீக்கிரத்தில் ஆய்விடுகிறேன். ஏன், நம்பிக்கை யில்லையா? இதோ கொடுத்தேன் வாக்கு. திருப்திதானு?

(கையைக் கொடுக்கிருள். அதைக் கோதண்டன் முத்தமிடுகிருன்.)

கோதண்டன் :—திருப்திதான். நான் வருகிறேன்.

மதாலஸை :—சந்திரசேகரனுடைய செய்தி? விக்ராந்தனுடைய செய்தி?

கோதண்டன் :—ஒன்றுமில்லை. அவ் விஷயமாகவே இதோ நான் போகிறேன்.

மதாலஸை :—ஈசன் உனக்கு ஜயம் கொடுக்கட்டும். (கோதண்டன் போகிருன்.) மதி கெட்ட மஹிஷமே! என் காலால் உதைத்து உன் எலும்புகளை முறிக்கிறேன். என்னை மணம் புரியவா பார்க்கிருய்? என்ன கர்வம்! ஸூர்ய குலோத்துங்க மதாலஸா மணி யெங்கே, குப்பையில் பிறந்து குடிசையில் புரண்டிடும் நீ யெங்கே? நீச நாயே! உன் தாய் தகப்பனிருந்த இடமும் ஒருவரும் அறியாரே. கிழக் குரங்கே! என்னை மணக்

கவா வேண்டும்? என் முகத்தைத் திருப்பி என் கண்களால் உன்னை நான் ஒரு முறை காணவும் உனக்கு யோக்யதை யில்லையே. உனக்கு என் தேஹம், என் உள்ளம், என் பேரை யெல்லாம் அர்ப்பணம் செய்வேனென்று நம்புகிறாய்? பெண் சிங்கம் நாயைக் கண்டா மோஹிக்கும்? நான் கொண்ட பேரெண்ணம் நிறைவேற உன் ஸகாயம் வேண்டியிராவிட்டால் உன் போன்ற பிரேதத்தை என் பாதரக்ஷைக்கு பாதுகாவலாகவும் வைக்கமாட்டேனே. ஆயினும் உனக்கென் காதலாகிய மதுவை யடிக்கடி ஊட்ட வேண்டும். ஆனால் அது காதலாயினும் காலகூட விஷம்; கடைசியில் உன்னை யழித்தே தீரும். என் கார்யார்த்தம் சங்கிலியிட்டு வைத்திருக்கும் துர்ஜயப் பிசாசை கார்யமானதும் உன்மேல் ஏவுவேன்—இதோ இவ்வுலகாளும் இக் கரத்தைத் திண்ட எவருக்காவது யோக்யதையுண்டெனில், அது அந்த விக்ராந்த னொருவனுக்கே. என் தேஹம், என் மனம், எல்லாவற்றையும் அடக்கி யாளவல்லவன் அந்த மஹா புருஷனொருவனே. அந்த பிரதாபஸிம்ஹத்தின் எதிரில் நீங்களெல்லாம் கருங் குரங்குகள்—ஆனால் விக்ராந்தனா?—யார் விக்ராந்தன்? என் வைரி, என் பேரெண்ணத்தை வேருடனொழிக்கப் பிறந்த கடு வைரி. இரு முறை காதலுடன் நானணுகியபோது காலாலுதைத்தவன். ஏன் அவனை என் மனம் நாடுகிறது? என் எண்ணங்களுக் கெல்லாம் குறுக்காய் முளைத்திடும் இந்த சத்ருவின் மேல் ஏனோ எனக்கு அடங்காக் காதல்? ஐயோ! நான் அவனை வெறுக்கிறேனா, காதலிக்கிறேனா, தெரியவில்லையே!

பிரவேசம்—துர்ஜயன்.

துர்ஜயன்.—ஸந்தோஷ ஸமாசாரம் ஸர்க்கார்! ஸந்தோஷ ஸமாசாரம்.

மதாலஸை :—என்ன?

துர்ஜயன்:—சந்திரசேகரன் நமது கையில்—

மதாலஸை :—அகப்பட்டானு? யார் பிடித்தார்கள்? எங்கே பிடித்தார்கள்? எப்பொழுது எப்படி பிடித்தார்கள்?

துர்ஜயன் :—இன்னும் பிடிக்கவில்லே. இப்பொழுது என் துர்க்கத்தில் ராணி ஸரோஜினியின் வசம் இருக்கிருன்.

மதாலஸை :—ஆனல் புறப்படு. கூர்ம துர்க்கம் போகலாம்.

துர்ஜயன் :—ஸர்க்காருக்கு ஏன் இவ்வளவு கஷ்டம்? என்னைப் போல் ஸேவகனிருக்கும்போது, ஒரு உத்தரவு கொடுத்தால், நான் போய் அந்தச் சிறு பயலே ஒரே கட்டாகக் கட்டிக்கொண்டு வந்து உங்கள் காலின் கீழ் போடுவேனே. கோதண்டனைப் போல் தோல்வியடைந்து வருபவன் துர்ஜயன் அல்ல.

பிரவேசம்—கோதண்டன்.

கோதண்டன்:—விக்ராந்தன் நம்முடைய எல்லேயைத் தாண்டி வெகுதூரம் போய்விட்டான். நம்முடைய ஸேவகர் எவ்வளவு முயன்றும் தப்பி ஓடிவிட்டான்.

மதாலஸை :—ஆனல் மற்றொரு வைரி அகப்பட்ட செய்தி உனக்குத் தெரியாதா?

கோதண்டன்:—மற்றொரு வைரியா? யாரது?

துர்ஜயன் :—சந்திரசேகரன். அகப்பட்டுக்கொண்டான்.

கோதண்டன்:—சந்திரசேகரனைப் பிடித்தார்களா? யார் பிடித்தார்கள்?

மதாலஸை :—நமது துர்ஜயனுடைய பத்னி.

துர்ஜயன்:—ராணி ஸரோஜினி. அவள் மிகவும் புத்திசாலி. அவளிடமா விக்ராந்தனுடைய மாயம் செல்லும்?

மதாலஸை :—ஆனல் துர்ஜயா! புறப்பட்டுப் போ, உடனே. கோதண்டா! துர்ஜயனுடன் ஸைந்யங்களே யெல்லாம் அனுப்பு.

துர்ஜயன்:—ஸைந்யங்கள் ஏன்? நான் ஒருவன் போதாதா? இதோ போய் ஸித்தமாகிறேன்.

கோதண்டன் :—இவனுடன் ஸைந்யங்களை அனுப்புவதே உத்தமம்.

மதாலஸை :—ஆம். அனுப்பு. அவனை ஸரியாய் கவனிக்கச் சொல். எள்ளளவேனும் த்ரோஹம் விளைவதானால் வேருடன் களைந்துவிடச் சொல்.

கோதண்டன்:—அப்படியே.

(போகிறார்கள்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 3. களம் 3

இடம் :—கூர்ம துர்க்கத்தின் கோட்டைவாசல். மேலே த்வஜஸ்தம்பத்திலிருந்து ரத்தம் தோய்ந்த கொடி பறந்து கொண்டிருக்கிறது. காவற்காரரும் துர்ஜயனும் சச்சரவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

துர்ஜயன் :—காவலாளிகளே! மரியாதையாய்க் கதவைத் திறவுங்கள்.

முதல் காவலாளி—எங்களுக்கு உத்தரவில்லே.

துர்ஜயன் :—உத்தரவில்லையா? யார் உத்தரவு?

முதல் காவலாளி :—ராணியின் உத்தரவு.

துர்ஜயன் :—என்ன? எனக்குக்கூடவா உத்தரவு வேண்டும்?

முதல் காவலாளி :—நீங்களானு என்ன யாரானு என்ன? எல்லாம் ஒண்ணுதான்.

துர்ஜயன் :—என்ன? நான் யார் தெரியவில்லையா?

இரண்டாவது காவலாளி :—தெரியும் நல்லா தெரியும்.

துர்ஜயன் :—ஆனால் உடனே கதவைத் திறவுங்கள்.

முதல் காவலாளி :—அது மாத்ரம் நடக்காது.

துர்ஜயன் :—அடே! நான் ராஜா துர்ஜயன். இக் கோட்டையின் அதிபதி. என்னையா நிறுத்துகிறீர்கள்?

இரண்டாவது காவலாளி :—ராஜா துர்ஜெயண்ணுதாம் சும்மா நிறுத்தினோ. இன்னும் வேறே யாராணு ஒங்களெப்போல கெட்ட எண்ணத்தோடே வந்திருந்தா, தலையே துண்டா வெட்டி போட்டிருப்போம்.

துர்ஜயன் :—போதும். அவமானம்! என்னுடைய கோட்டையிலேயே எனக்கு அவமானம்! என் வேலையாட்களால் எனக்கே அவமானம்! (தன்னுடன் வந்த வீரர்களைப் பார்த்து) என்னடாயிது! பார்க்கிறீர்கள்! இந்த த்ரோஹிகளை உடனே கைது செய்யுங்கள். எடுங்கள் கத்திகளை.

(இருதிறத்தாருக்கும் சண்டை நடக்கிறது.)

(ஸரோஜினியும், ஒரு ஸர்தாரும் மதிலின்மேல் பிரவேசிக்கிறார்கள்)

ஸரோஜினி :—என்ன சண்டையிது?

துர்ஜயன் :—யாரது? ஓ நீங்களா! ராணீ ஸர்க்கார் ஸரோஜினியா? மஹாராணி, இக்கோட்டையின் அரசி ஸரோஜினியா?

ஸரோஜினி :—இந்த கேள்விகளை கேட்பதற்கு நீங்கள் யார்?

துர்ஜயன் :—நான் யாரா? நான் தெரியவில்லை?

ஸரோஜினி :—நீங்கள் யாரென்றறிவதற்கு இன்னும் உங்களிடம் என்ன இருக்கிறது?

துர்ஜயன் :—ஆஹா! அப்படியா? என்னை யாரென்றறிந்தும் வேண்டுமென்று அவமானம் செய்கிறாய்? ஸரோஜினி! இந்த நடவடிக்கை நன்றாயில்லை.

ஸரோஜினி :—தன் ஸொந்த நடவடிக்கை நன்றாயிருக்கிறதா இல்லையா யென்று அறிந்துகொள்ள முடியாதவர் மற்றவர் நடவடிக்கையைப் பற்றி ஏன் பேசவேண்டும்?

துர்ஜயன் :—இவ்வார்த்தையை சொன்னதிற்கு நீ படப் போகிருய். இருக்கட்டும். உன் ஆட்களைக் கதவைத் திறக்கச் சொல். நான் உள்ளே வரவேண்டும்.

ஸரோஜினி :—உம்மை ஒருநாளும் உள்ளே விடுவதில்லை.

துர்ஜயன் :—ஆனல் பலாத்காரமாய் நுழையவேண்டும்.

ஸரோஜினி :—அப்படி பலாத்காரமாய் நுழைய உமக்கு தைரியமுண்டா ?

துர்ஜயன் :—ஸரோஜினி! நீ மிகவும் அஹங்காரம் கொண்டு பேசுகிருய். என் பொறுமையை இன்னும் பரீக்ஷித் திடாதே. உள்ளே விடு என்னை.

ஸரோஜினி :—ஒரு நாளும் முடியாது.

துர்ஜயன் :—முடியாதா ? நான் என்ன கொள்ளைக்காரனு என்ன ?

ஸரோஜினி :—கொள்ளைக்காரனுயிருந்தாலும் பொறுத்திருப் பேனே. அதை மதித்துமிருப்பேனே. அதையெல் லாம் மீறி வெகு தூரம் போய்விட்டீரே. நீர் தகல் பாஜி, ஸ்த்ரீகாதகன், ராஜத்ரோஹி, மஹா பாதகன், பிரத்யக்ஷ ரௌரவத்திற்குப் பாத்திரன்.

துர்ஜயன் :—அவமானம் !புருஷனுக்கு அவமானம்!! தன் மனைவியினுலேயே தன் வீட்டிலேயே புருஷனுக்கு அவமானம் !

ஸரோஜினி :— போதும், நிறுத்தும். என்னை மனைவி யென்று சொல்ல இனி உமக்கதிகாரமில்லை. நான் யாருடைய பத்னியுமில்லை. எனக்கு இனி பதியுமில்லை. பாரும் என் நெற்றியை நன்ருய்.

துர்ஜயன் :— இம் மொழிகளை ஸரோஜினியா பேசுவது? ஸரோஜினீ ! ஸரோஜினீ ! நன்ரு யிருக்கிறது. வெகு நன்ருயிருக்கிறது, உன் நடவடிக்கை. இங்கே நான்

வரும்போது இவ்வாறு கௌரவிப்பாயென்று நான் நம்பவில்லை.

ஸரோஜினி :—பாவம்! இதுவரையில் என் குணம் தெரியாது உமக்கு....ஊம்?

துர்ஜயன் :—உனக்காகவே நான் மதாலஸைக்கு அடிமைப்பட்டேனே.

ஸரோஜினி :—துர்க்கதிக் கழைத்துச் செல்லும் அப்பாசத்தை விலக்கும்

துர்ஜயன் :—முடியாது.

ஸரோஜினி:—ஆனால் வந்த வழியே போம்.

துர்ஜயன்:—ஸரோஜினீ! ஸரோ! என் கண்ணல்ல! எனக்கு உன்னிடம் ஒரு சிறிய வேலையிருக்கிறது. எப்பொழுது நிம்மதியாய்ப் பேசலாம்.

ஸரோஜினி :—நீர் இங்கு வந்த காரணம் நன்றாய்த் தெரியும். அதைக் குறித்து என் மனம் திடமா யிருக்கிறது. சந்திரசேகரனுடைய காலின் நகத்தையும் உமது கண்ணில் காட்டமாட்டேன்.

துர்ஜயன் :—ஸரோஜினீ! வீண் பிடிவாதத்தால் ஆபத்துக்காளாவாய்.

ஸரோஜினி :—என்னைப்பற்றி நீர் உருகவேண்டாம்.

துர்ஜயன் :— என் ராஜபக்தைப் பற்றியாகிலும் நினைக்க வேண்டாமா?

ஸரோஜினி :—அந்த சிந்தையும் வேண்டாம். ராஜ்யலக்ஷ்மி அன்றே உம்மைக் காலாலுதைத்துத் தள்ளிவிட்டாள். அவளும் என்னைப்போலவே க்ஷத்ரிய நந்தினி. வீரமற்றவருக்கு ஒருநாளும் தாஸியாயிருக்கமாட்டாள்.

துர்ஜயன் :—போதும். நிறுத்து உன் அதிக பிரஸங்கத்தை. மஹாராணிக்கு வைரியான பின் விநாசகாலம் தான் உனக்கு.

ஸரோஜினி :—வீண் உபதேசமேன்?

துர்ஜயன் :—மதாலஸையின் கோபம் பொல்லாதது. ஸாமர்த்தியம் அகண்டமானது.

ஸரோஜினி :—அவள் கோபம் என்னை என்ன செய்யும்? அவள் ஸாமர்த்தியம் இங்கே என்ன ஸாதிக்கும்?

துர்ஜயன் :—ஸரோஜினீ! இந்த சாதுர்யமெல்லாம் உனக்கு யார் கற்பித்தார்கள்?

ஸரோஜினி :—உம்மைப் போன்ற ரணஸிம்ஹங்கள் வளையலணிந்து வனிதைகளாய் விட்டால் நாங்கள்தாமே நியாயத்தைக் காக்கவேண்டும்?

துர்ஜயன் :—ஸரி! நாங்கள் தாம் அந்த வளையல்களை உடைத்து வாளை யேந்தி விட்டோமே. இனி யென்ன?

ஸரோஜினி :—நீங்கள் வாளை ஏந்துகிறீர்களா? ஆம், எதற்கு? அநியாயங்களையும் அக்கிரமங்களையும் பூமியில் நிலை நிறுத்த ஏந்தியிருக்கிறீர்கள். ரக்த பாதத்தையும் அனுசாரத்தையும் விருத்தி செய்ய ஏந்தியிருக்கிறீர்கள். விச்வாசகாதகம், ராஜத்ரோஹம், ஸ்திரீ ஹத்தி முதலிய பிசாசுகளுக்குத் துணையாய் துஷ்கிருத்தியங்கள் புரிந்திட ஏந்தியிருக்கிறீர்கள். இம்மாதிரி வாள்கள் உறையிலிருந்து வெளி வரும் முன்னமேயே சின்னாபின்னமாய் சிதறிப்போயிருந்தால் இத்தேசம் இந்த ஸ்திதியிலா இருக்கும்? சந்திரசேகரனைக் காத்திட உமது வாளை உருவி யிருந்தால் இந்த அவமான மெல்லாம் உமக்கு ஸம்பவித்திருக்குமா?

துர்ஜயன் :—சந்திரசேகரனை நான் ஏன் காத்திடவேண்டும்?

ஸரோஜினி :— என்ன வெட்கமற்ற கேள்வி? உமதரசனில்லையா அவன்?

துர்ஜயன் :– அவன் என் அரசனில்லை. நான் மதாலஸையின் தாஸன். அவளே என் குரு, தெய்வம்.

ஸரோஜினி :—சீ! அவள் பெயரையும் இங்கே உரைக்காதீர், பத்திரம்! உம்மை இனி கண்ணால் பார்ப்பதும் தவறு. இங்கே இனி ஒரு க்ஷணமும் நிற்காதீர். போம். நின்ருல் என் கைகளால் நடக்கும் உபசாரத்திற்கு நான் உத்தரவாதமல்ல. புறப்படும் உடனே.

(போக முயல்கிருள்.)

துர்ஜயன் :—ஸரோஜினி! நில். மனமார்ந்து நான் அளிக்கும் உபதேசத்தைத் தள்ளாதே. மஹாராணி மதாலஸையின் கோரிக்கையை மறுக்காதே.

ஸரோஜினி :—இனி ஒரு வார்த்தையும் பேசேன். சந்திரசேகரனைப் பார்க்க வேண்டுமானல் வாரும் யுத்தகளத்திற்கு.

(ஸர்தாருடன் போகிருள்.)

துர்ஜயன் :—ஸரோஜினீ! ஸரோஜினீ!! போய்விட்டாள்! போய்விட்டாளே! ஐயோ! இந்த அவமானமடைந்த முகத்துடன் நான் எப்படித் திரும்புவேன்? இந்தக் கோட்டையை முற்றுகை போடலாமென்ருல் ஸைந்யங்கள் போதாதே. என்ன செய்வது? இருக்கட்டும். அடே! காவற்காரப் பதர்களே! உங்கள் எஜமானி ஏதோ அவமரியாதையாய்ப் பேசினளென்று நீங்கள் சிரிக்கப் பார்க்கிறீர்களா? புத்தி கெட்ட முண்டங்களே! மஹாராணியிடம் சொல்லி உங்களை என்ன பாடுபடுத்துகிறேன் பாருங்கள்.

(போகிருன்.)

(காட்சி முடிகிறது.)

இடம் :—மதாலஸையின் அரண்மனை.

பிரவேசம் :—மதாலஸை, கோதண்டன், மந்திரிகள், ஸேவகர் முதலியோர்.

கோதண்டன் :—விக்ராந்தன் எவ்வளவு முயன்றும் ஸரோஜினி அவனுக்குச் சற்றும் இடம் கொடாமல் சந்திரசேகரனைத் தன் வசமே நிறுத்திக்கொண்டு விட்டாளென்று செய்தி வந்திருக்கிறது.

மதாலஸை :—மிகவும் ஸந்தோஷம். துர்ஜயனுடன் ஸரோஜினி இங்கு வந்தால் அவளுக்கு அர்த்தாஸனம் கொடுத்து உபசரித்திடுவேன்.

கோதண்டன் :—துர்ஜயனுக்கு ?

மதாலஸை :—கலிங்க தேசத்து மகுடத்தைத் தருவேன்.

(ஸேவகன் பிரவேசம்.)

ஸேவகன் :—ஸர்க்கார்! துர்ஜயராஜன் வாயிலில் வந்திருக்கிறார்.

மதாலஸை :—அப்படியா ! இந்த ஆனந்தகரமான செய்தியைக் கொண்டு வந்ததற்காக இதோ இந்த வளையலைப் பெற்றுக்கொள். போ. அவரைக் கொஞ்சநேரம் வெளியிலேயே காத்திருக்கச் சொல். அவரை எதிர்கொண்டழைக்கத் தக்க மரியாதைகளை ஏற்பாடு செய்யத் தாமதமாவதைப் பற்றி நாம் வருத்தப்பட்டதாக அவருடன் சொல்.

(ஸேவகன் போகிறான்.)

கோதண்டா! வா. நாமெல்லோரும் போய் துர்ஜயனை எதிர்கொண்டழைப்போம். ஸேவகர்களே! ஸகல மரியாதைகளையும் ஸித்தப்படுத்துங்கள். விஜய துந்துபிகள் முழங்கட்டும். சதுரங்க ஸைன்யங்கள் அணி

வகுத்து நிற்கட்டும். அரண்மனை முழுதும் மணக் கோலமாய் விளங்கட்டும். தாமதியாதீர்கள். போங்கள். ஆஹா! சந்திரசேகரனுடைய சிரத்தை எப்பொழுது ஆகாச பரியந்தம் செண்டாடி எறிவது என்று ஆவல் மீறுகிறதே....ஸேவகா! என்னுடைய பட்டாபிஷேக மகுடத்தைக் கொண்டுவா. என் மணிஹாரத்தை எடுத்துவா. ஸகல வஸ்திராலங்காரத்தையும் எடுத்துவா. துர்ஜயன் சிரத்தில் என் கைகளால் சூட்ட கலிங்கதேசத்து மகுடத்தைக் கொண்டுவா. எங்கே என் வாள்? கொடு இப்படி. (சேடிகள் மதாலஸையை அலங்கரிக்கிறார்கள்) நீங்கள் மங்களஹாரத்தியுடன் கோபுர வாயிலுக்குச் செல்லுங்கள். கட்டியக் காரரெல்லாம் கட்டியங் கூறட்டும். துர்ஜயன் பிரவேசித்தவுடன் அவன்மேல் பூமாரி பொழியுங்கள். (கத்தியை உருவிக் கையிற் பிடித்துக் கொண்டு) ஹாஹா! என்னுடைய சத்ரு இன்று என் கையில் சிக்கிக் கொள்வானென்னும் எண்ணத்தால் என் உடம்பெல்லாம் பூரிக்கின்றதே! என் கவலை யெல்லாம் இன்றுடன் பறந்ததே. விக்ராந்தனுடைய பலமெல்லாம் இப்பொழுது எங்கே போயிற்று? இன்றே என் விக்ரம சரித்திரம் தொடங்கும் நன்னாள். இனி இப்புவியில் விளங்கும் ராஜர்களும், அதிராஜர்களும், மஹாராஜர்களும், என் புகழைப்பாடி என் கீர்த்தியைப் பரவச் செய்யும் ஸேவகர்களே! இந்த ப்ரித்வியில் விளங்கும் ஸகல ரதர்களும், அதிரதர்களும், மஹாரதர்களும், மதாலஸையின் மணி பாதங்களைத் துதித்திடும் பதர்களே. ஸர்வ தேசங்களுக்கும், ஸர்வ ராஷ்ட்ரங்களுக்கும், ராஜ்யங்களுக்கும், இல்லை—இந்த ப்ரத்யக்ஷ பலாட்டிய ச்ருஷ்டி ஸாம்ராஜ்யத்திற்கே இனி நான் காலாலிட்டதைத் தலையால் செய்திடவேண்டிய காலம் வந்துவிட்டதல்லவா?

(உள்ளே வாத்ய கோஷமும் ஜய கோஷமும்.)

நடவுங்கள். கோபுரவாயிலுக்குள் போங்கள். கட்டியம் கூறத் தொடங்குங்கள்.

(எல்லோருடனும் போகிறாள்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 3. களம் 5.

இடம் :—மதாலஸையின் அரண்மனையின் கோபுர வாசல்.

[வெளியில் துர்ஜயன் வீரருடன் நிற்கிறான். உள்ளிருந்து மதாலஸை, கோதண்டன் முதலியவர் பரிவாரங்களுடன் வருகிறார்கள்.]

மதாலஸை :—வா, வா, துர்ஜயா! வா, நீ செய்துள்ள உபகாரத்திற்கு உன்னை மனப் பூர்வமாய் ஸ்வீகரிக்கிறேன். இதோ, என் கழுத்தி லணிந்திருக்கும் விலையற்ற ரத்ன ஹாரத்தை உன் கழுத்தில் போடுகிறேன். கலிங்க தேசத்து ராஜ மகுடத்தால் உன் சிரத்தை அலங்கரிக்கிறேன், வா.

(தன் கழுத்திலிருந்து ஹாரத்தை எடுத்து அவன் கழுத்தில் போடுகிறாள். மகுடத்தை அவன் சிரத்தில் சூட்டப் பார்க்கையில் துர்ஜயன் தயங்கிப் பின் செல்கிறான்.)

ஏன் ஒதுங்கிப் போகிறாய்? கலிங்க தேசத்து மகுடம் போதாதென்று தோன்றுகிறதா?

துர்ஜயன் :—இல்லை, ஸர்க்கார்! நீங்கள் ப்ரஸன்ன முகத்துடன் அளித்திடும் இந்த ராஜ்ய மகுடத்தைக் குறை வென்று நான் சொல்லுவேனோ? ஆனால்........மஹாராணி........இந்த சிறந்த.......சம்மானத்திற்கு நான் பாத்திரனில்லை........

மதாலஸை:—இல்லை, அப்படி சொல்லாதே. துர்ஜயா! நீ என் பரம வைரியைப் பிடித்து வந்திருக்கிறாய். என்

பெரிய கோரிக்கையை நிறைவேற்றினுய். அப்படி யிருக்க நீயா அபாத்திரன்.......வா, அருகில்.

(மகுடத்துடன் அணுகுகிருள்.)

துர்ஜயன் :—(அவளைத் தடுத்து) ஐயோ! அம்மணி. வேண்டாம். இன்னும் ஒரு க்ஷணநேரத்தில் என்னைத் திரஸ்கரித்து விடப்போகிறீர்கள். காலினுல் என்னை மிதித்து அவமதிப்பீர்கள்.

மதாலஸை:—என்ன? உன்னை அவமதிப்பதா! திரஸ்கரிப்பதா! மிதிப்பதா! இல்லை. இல்லை. துர்ஜயா! என் கட்டளையை நிறைவேற்றினவரையா அவ்வாறு செய்வேன்? நான் நன்றி கெட்டவளா?

துர்ஜயன் :—ஆனுல்.......ஸர்க்கார்......நான்.......உங்கள்.... ஸந்நிதானத்தில்......அபராதி..... மன்னிக்க வேண்டும்.

(அவள் காலில் முழந்தாளிடுகிருன்.)

மதாலஸை:—உன்னுடைய ஸமஸ்த அபராதத்தையும் க்ஷமித்தேன். எழுந்திரு. இந்த மகுடத்தை அணிந்து சீக்கிரத்தில் என் வைரியை என் எதிரில் அழைத்து வா. இதோ வா.

(அவன் தலையில் சூட்டப் போகிருள்.)

துர்ஜயன் :—ஸர்க்கார்! நான் சந்திரசேகரனைப் பிடித்து வரவில்லை.

மதாலஸை:—என்ன துர்ஜயா! என்ன விளையாட்டு? என் ஆவலை பரிக்ஷை செய்ய இப்படியா விளையாட வேண்டும்? அழைத்துவா சந்திரசேகரனை.

துர்ஜயன்:—ஐயோ! ஸர்க்கார்! நான் விளையாடுவேனு? வாஸ்தவமாகவே நான் பிடித்து வரவில்லை.

மதாலஸை:—(பின் வாங்கி) என்ன! என்ன! பிடித்து வரவில்லையா?

துர்ஜயன் :—இல்லை, ஸர்க்கார்!

மதாலஸை:—ஏன்?

துர்ஜயன்:—அவன் அகப்படவில்லை....பிடித்து வரவில்லை.

மதாலஸை:—ஆஹா! என்ன விரஸம்!! என்ன பங்கம்!!! என் மனோராஜ்ய மெல்லாம் பாழாயினவே. துர்ஜயா! சீ! சீ!! நீயும் உன் சௌரியமும்! என்மேல் நீ கொண்ட ப்ரேமை எங்கே போயிற்று? என் கிருபையை ஸம்பாதித்து விளங்கவேண்டுமென்று நீ கொண்ட ஆசை எங்கே போயிற்று? என்னை ஏமாற்றினாய். எனக்கு த்ரோஹ மிழைத்தாய்.

துர்ஜயன்:—ஸர்க்கார்! நான் என்ன செய்வேன்? துர்தெய்வங்கள் என்னைப் பிடித்துக்கொண்டு போயின. என் துஷ்ட கிரஹங்கள் ஓங்கி விளங்கின. எனக்கு சொல்லவும் அவமானமா யிருக்கிறது. ஆயினும் வெட்கம் விட்டுச் சொல்கிறேன். ஸர்க்கார்! அந்தப் பொய் நிறைந்த மோசக்காரி, பதித்ரோஹி, என் மனைவி, விக்ராந்தனுடன் சேர்ந்துவிட்டாள்.

மதாலஸை:—என்ன? ஸரோஜினி விக்ராந்தனுடனா சேர்ந்துவிட்டாள்?

துர்ஜயன் :—ஆம், ஸர்க்கார்! தன் பதியின் கீர்த்தியை பாழாக்கிவிட்டாள். தான் பிறந்த குலத்தையும் நாசமாக்கிவிட்டாள். உங்களுடைய அதிகாரத்தையே மீறிவிட்டாள். சந்திரசேகரனுக்காக உங்களிடம் பகை பாராட்டி என் பிரஜைகளையும் கெடுத்துக் கலகக்கொடியை நாட்டி விட்டாள்.

மதாலஸை:—எனக்கு விரோதமாய், கலகக் கொடியா? அவளுக்கென்ன பித்தம் தலைக்கேறி விட்டதா? என் காலின் கீழ் காத்திருக்கும் ஒருவனுடைய மனைவி எனக்கு விரோதமாகக் கலகம் செய்வதா? அவளுக்கென்ன.......அதிருக்கட்டும். ஆனால் நீ என் அவளை

கையும் பிடியுமாய் என்முன் இழுத்து வரவில்லை? அல்லது அவள் சிரத்தை அங்கேயே ஏன் வெட்டி எறியவில்லை. என் பிரதிநிதியாய் உனக்கு ஸமஸ்த அதிகாரமும் கொடுத்திருந்தேனே.

துர்ஜயன்:—ஐயோ! வாஸ்தவம்தான். ஆனால் அப்படி செய்ய என்னால் முடியவில்லையே.

மதாலஸை:—என்ன, முடியவில்லையா? என்னுடைய போர் வீரர் உன்னுடன் இருக்கும்போதும் முடியாமலா போயிற்று? இந்த ப்ரம்மாவர்த்த சக்கரவர்த்தினியின் சார்பாக நீ சென்றும் முடியவில்லையா?

துர்ஜயன்:—ஸரோஜினி செய்திருந்த பலமான ஏற்பாடுகளை பார்த்திருந்தால் உங்களுக்குத் தெரியும். முற்றுகை போடவும் முடியவில்லை. அவளைப் பார்த்து நான் பிரமித்துவிட்டேன். என் கண்கள் கூட அவளைப் பார்த்துக் கூசிவிட்டன.

மதாலஸை:—சீ! இந்தப் பெண்மையான மொழிகளைப் பேசாதே! நீ ஏன் அங்கேயே இறக்கவில்லை? ஆண்மையற்ற அற்பமே! ஸ்திரீயைக் கண்டு பயந்து ஓடி வந்தானும்! வெட்கமில்லையே! மானங் குலைந்த முகத்துடன் உன்னை யார் என் முன் வரச் சொன்னது?

துர்ஜயன்:—ஸர்க்கார்! உங்களுடைய சரணங்களைத் தவிர இந்த தாஸனுக்கு——

மதாலஸை:—சீ! மூடு வாயை. கோதண்டா! இவனை இக்ஷணம் கொண்டுபோய் எரிவாயிலே தள்ளிக் கொல்லுங்கள். இந்த கலிங்க தேசத்து மருடத்தை இவன் கண்ணிலும் படவிடாமல் கொண்டு வையுங்கள். இவன் அணிந்திருக்கும் ராணுவ உடுப்பைக் களைந்துவிட்டு, அமங்கலிகள் அணியும் சீலையைக் கொடுங்கள். எதிர்கொண்டழைக்க வந்தவரையெல்லாம் இவன் மேல் எச்சிலுமிழச் சொல்லுங்கள். இவனை முகத்

தைத் திருப்பிக் கழுதைமேல் ஏற்றி ஊரைச் சுற்றிக் கொண்டுபோய் நாய் நரிகளுக்கிடுங்கள்.

துர்ஜயன் :—ஸர்க்கார்! என் தப்பிதங்களை க்ஷமித்து——

(அழுகிருன்.)

மதாலஸை :—(பல்லைக் கடித்துக்கொண்டு) க்ஷமிப்பதா? உன்னையா?

துர்ஜயன் :—ஸர்க்கார்! உங்கள் தாஸன். மன்னியுங்கள்.

(அவள் காலைப் பற்றுகிருன்.)

மதாலஸை :—சீ! போ! நன்றி கெட்ட நாயே. உன் போன்ற ஆண்மையற்றவர்க்கு மதாலஸையின் சரணம் ஒரு நாளும் கிட்டாது.

(அவன் தலையை உதைத்துத் தள்ளிவிட்டுப் போகிருள்.)

துர்ஜயன் :—ஐய்யய்யோ! இதற்கு என்ன செய்வது? அங்கே அடைந்த அவமானம் போதாதென்று இங்கே எல்லோருடைய முன்னிலையிலும் ஒரு ஸ்த்ரீயின் காலால் என் தலைமேல் உதைபட..........ஹா! இரு!! இரு!!! ஐயோ! அன்று தேவாங்கனையை என் காலால் தலைமேல் உதைத்தபோது அவள் சபிக்க ஆரம்பித்து நிறுத்தி விட்டாளே. ஆயினும் அப்படியே ஆய்விட்டதே!! எனக்கேன் இந்த அவமானமெல்லாம்? நானும் விக்ராந்தன், ஸரோஜினியுடன் சேர்ந்து விடவா? தேவாங்கனு! நான் செய்தது தவறு.......... ஆஹா! (கீழே பார்த்து) இது யாருடைய பதக்கம்? மதாலஸை தன் கழுத்தி லணிவதல்லவா? ஆஹா! இதன் பின்புறம் அவளுடைய படமா? ஆம்! ஆம்!! என்ன ஸௌந்தர்யம்! ஏன் இன்னும் பிரதி தினமும் இவள் காலால் உதைபடக் கூடாது? இவள் முகத்தைப் பார்த்தவுடன் மற்ற யாவும் மறந்துபோய் விடுகின்றனவே! இவள் உதைத்தபோது கூட ஒரு விதத்தில் நன்ருய்த்தானிருந்தது. இவளே எனக்குக் கதி. (பதக்

கத்தைக் கீழே வைத்துக் கைகளைக் கூப்பிக்கொண்டு) மதாலஸே! மதாலஸே!! இதோ உன்னை மறுபடியும் ஸாஷ்டாங்கமாய்ப் பணிந்தேன். என்னை மாத்திரம் கடைக்கண்ணாலே பார்.

(பதக்கத்தை எடுத்துக்கொண்டு போகிறான்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 4. களம் 1.

இடம்:—ம்ருநாளினியின் வீட்டுப்புறத்தில் ஒரு நந்தவனம்.

[நந்தவனத்தின் நடுவில் ஒரு ஸமாதி தோன்றுகிறது. அதற்கு நேராக எதிரிலே கைகள் கூப்பிய வண்ணம் ஓர் பெண் ப்ரதிமை நிறுத்தப்பட் டிருக்கிறது. ப்ரதிமையின் பக்கத்தில் விக்ராந்தன் மாறு வேஷத்தில் நிற்கிறான்.]

விக்ராந்தன் :—(ஸ்வகதம்) இரவும் முக்காற் பாகம் கழிந்து அருணோதயமும் ஸமீபித்து விட்டது. ஆனால் என் என் கால்கள் இந்த இடத்தை விட்டுப் பெயரமாட்டே னென்கின்றன? இந்த ப்ரதிமையின் காலின் கீழ் என்னைக் கட்டிவிட்டாற் போலல்லவா யிருக்கிறது— ஹா! தேவாங்கனா! நீ இந்த உயிரற்ற பிம்பமா யிருந் தும் என் ஆவியையே வலித்துக் கொண்டனையே. நீ ப்ரத்யக்ஷமாய் ஸ்வர்க்கத்திலிருந்து உன் ஜீவித ஸ்வ ரூபத்தில் வந்தென்னெதிர் நின்றால் நான் உடல் உயிர் ஆவி அநந்தமுடன் உன்னிடமே ஆகர்ஷணமாய் விடு வேனோ என்னமோ—சீ! வீண் ஆசை. இனி இந்தப் பாபிக்கு அந்த திவ்ய மங்கள ரூபத்தின் காட்சியும் கிட்டப் போகிறதா? இந்த அந்தக்கரணத்திற்கு ஸ்திரீ ப்ரேமா ஸுகம் ஒரு போதும் இல்லை—தேவாங்கனா! உன் பிம்பத்தருகில் இருக்கும் ஒவ்வொரு க்ஷணமும் என் சோகம் மீறி மீறி அதிகரிக்கின்றதே. இதுவரை

கண்ணீர் என்பதையே அறியாத என்னிரு கண்களி னின்றும் கொஞ்சமேனும் வெறுப்பின்றி கண்ணீர் ஆருய்ப் பெருகுகின்றதே. என்னை விடு. இனி என்னுல் தாங்க முடியாது. என்னுருயிரே! உன்னை ஸ்மரித்து, உன்னைக் காதலித்ததற்காக பிரதிதினமும் சில வேளை கண்ணீர் விடுவதினுல் எனக்கொன்றும் ஹீனமில்லை. என் கண்ணீரன்றி வேறென்ன இருக்கின்றதென்னி டம் உனக்களித்திட? நீ செய்த பேருபகாரத்திற்காக நான் செய்வது ஒரு ப்ரதியாகுமா? தேவாங்களு! தேவாங்களு!—(மேலே பேச முடியாமல் துக்கத்தால் அடைபட்டு நிற்கிருன்.)

(ம்ருநாளினி ஹாரம், புஷ்பங்கள், பூஜை ஸாமான்கள் முதலி யனவுடன் பாடிக்கொண்டே வருகிருள்.)

ம்ருநாளினி :—(ஸ்வகதம்) ப்ரேமையின் மகிமையை என்ன வென்றுரைப்பது!

(மறுபடியும் பாடுகிருள்.)

விக்ராந்தன் :—இந்த அருணோதயத்தில் ப்ரேமையின் மஹி மையை கோகில த்வனியுடன் பாடிக்கொண்டு வரும் மாது யாரோ? ஸர்வ ஸ்ருஷ்டியிலு மடங்கிய ப்ரேமா ரஸத்தைத் திரட்டி ப்ரஸன்ன ரூபமாய் கண்களித் திட பிரமன் சிருஷ்டித்த நவீன ஸரஸ்வதியோ இவள்? அல்லது ப்ரதிமை ரூபமாய் காட்சி யளித்து, நான் தந்த ப்ரேமா பூஜனையை ஏற்று, பிறகு ப்ரத் யக்ஷ தரிசனம் தந்தென்னைப் புனிதனுக்கிட என் தேவாங்கனையே இவ்வுருவாய் வருகிருளா?

ம்ருநாளினி :—(விக்ராந்தனைப் பார்த்துத் திடுக்கிட்டு) யார்? யாரங்கே நிற்கிறது?

விக்ராந்தன் :—(முன் வந்து) பயம் வேண்டாம். நான் ஒரு நிருபத்ரவ ப்ராணி.

ம்ருநாளினி :—நிருபத்ரவ ப்ராணியா?

விக்ராந்தன் :—ஆம். இல்லாமலென்ன? நீங்கள் பாடிய ஸர்வ ஸமர்த்த ப்ரேமையின் வலையில் சிக்கியபின் பிறரைப் பிடிக்கும் வல்லமையும் ஒருவனிடம் நிற்குமா?

ம்ருநாளினி :—ஆனால் உங்கள் போன்ற நிருபத்ரவ ப்ராணி இந்த நந்தவனத்தில் வரக் காரணமென்ன?

விக்ராந்தன் :—ப்ரேமையால் கட்டுண்டவன் தன் செய்கைகளுக்குக் காரண முறைப்படுத்தப்படி?

ம்ருநாளினி :—இதனுள் தடையின்றி பிரவேசித்தது எப்படி?

விக்ராந்தன் :—ஒரு தடையும் ஸம்பவித்திடவில்லை. ஸர்வ ப்ரஹ்மாண்டத்திலும் அட்டியின்றி ஸஞ்சரிக்கக் கூடிய ப்ரேமையுடன் பிணைக்கப்பட்டவனை எவர் எவ்வாறு தடுக்க முடியும்?

ம்ருநாளினி :—உங்களுக்கு ப்ரேமப்பித்து போலும்.

விக்ராந்தன் :—ஆம். அது யாரைத்தான் பித்தராக்காமல் விட்டது? ப்ரேமையிற் பட்ட பிரானும் பித்துடன் பிதற்றிட கேவலம் நசித்திடும் நான் நானதற்குட்பட்டு நள்ளிருளில் இந்த நந்தவனம் நாடியது அதிசயிக்கத் தக்கதோ?

ம்ருநாளினி :—என்ன? இரவெல்லாம் இங்கா நடமாடினீர்?

விக்ராந்தன் :—ஆம்.

ம்ருநாளினி :—ஒருவேளை வழி தப்பினீரோ?

விக்ராந்தன் :—இல்லை. இல்லை. ஸூர்யனும் புகாத சுத்த இருளையும் விளக்கும் ப்ரேமை தான் குடிகொண்டிருக்கும் இஷ்டவஸ்து உறைவிடத்திற்கு என்னை வலித்து வந்தது விந்தையல்ல.

ம்ருநாளினி :—ஆனால் நீர் தேடிய இடம் இதுதானா?

விக்ராந்தன் :—ஆம். இதே தான். இங்கே என் பிரேம நிதி அடைக்கலம் கொண்டிருக்கிறது. அதை நாடி வந்தவனே நானும்.

ம்ருநாளினி :—என்ன ? உங்கள் ப்ரேம நிதி என் உத்யா வனத்தில் இருப்பானேன் ?

விக்ராந்தன் :—இந்த உத்யாவனத்தில் மாத்திரமல்ல. நீங்கள் நிற்கும் ஸ்தலத்திலேயே இருக்கிறது.

ம்ருநாளினி :—என்ன ?

விக்ராந்தன் :—ஆம். இதே ஸ்தலத்தில். நான் தேடிவந்த என் பிராணனினும் லோகோத்தரமான வஸ்து இங்கு தான் கிடைத்தது.

ம்ருநாளினி :—நீருரைப்பதொன்றும் விளங்கவில்லையே.

விக்ராந்தன் :—ஆனால் இதோ பாரும். அந்த புனித வஸ்து வின் பிம்பம் புன்னகையுடன் விளங்குகிறது.

(ப்ரதிமையைக் காட்டுகிறான்.)

ம்ருநாளினி :—என்ன ! என்ன ! ! இதுவா உங்கள் ப்ரேமை குடிகொண்ட பொருளின் பிம்பம் ?

விக்ராந்தன் :—ஆம். என் ஹ்ருதயத்திலே உறைந்திடும் உருவின் பிம்பம். எப்போரிலும் ஜயிக்கப்படாத வீர னும் என்னைத் தன் வசப்படுத்திய தேவதையின் மனோ ஹர பிம்பம்.

ம்ருநாளினி :—என்ன இது ?

விக்ராந்தன் :—அம்மா ! நான் சொல்வதொன்றும் தவ றில்லை. கல்லினால் செய்துள்ள இப் பேசவொண்ணாத பிம்பம் நிற்கும் பீடத்தின் மேலிருந்து என் ப்ரியை, என் சித்தத்தை யாட்கொண்ட சுபதேவதை, தன் கண்களில் கருணை பெருகக் குளிர்ந்து பார்க்கிறாள்.

ம்ருநாளினி :—ப்ரேமையின் பித்து தலைக்கேறி உம்மையும் மறந்து பேசுகிறீர்! இந்த பிம்பம் உங்கள் ப்ரியை யுடையதென் றெப்படிச் சொல்லுகிறீர் ?

விக்ராந்தன் :—ஏனில்லை ? இந்த ஸுந்தர ப்ரதிமையில் என் ப்ரியையின் ஸௌந்தர்ய முழுமையும் விளங்குவது தெரியவில்லையா ?

ம்ருநாளினி :—ப்ரியையா ?....நானா ?....(தலையை யசைத்து சற்று யோசித்து) நீங்கள் என்னை இதற்கு முன் எங் காவது கண்டதுண்டா ?

விக்ராந்தன் :—இல்லை.

ம்ருநாளினி:—ஆனால் என்னுடைய பிம்பத்தை ஏன் உங்கள் ப்ரியை யுடையதென் றுரைக்கிறீர் ?

விக்ராந்தன் :—ஆனால்....இந்த....பிம்பம்....உங்களுடையதா?

ம்ருநாளினி :—ஆம்.

விக்ராந்தன்:—ஐயோ! நான் பெரும் தவறிழைத்தேனே, அம்மணீ! என்னை க்ஷமித்தருள வேண்டும். நான் அறியாமலுங்கள் மனதிற்கிழைத்த ஆயாஸத்திற்கு என்னை மன்னிக்கவேண்டும். நான் மனப்பூர்வமாய் நம்பியிருந்த ப்ரேமை இவ்வாறென்னை மோசம் செய் திடுமென்று நான் நினைக்கவில்லை. ஆயினும் அம்மா! ரூபத்திலும் குணத்திலும் என் தேவாங்கனைக்கே ஸம மாய்த் தோன்றும் நீங்கள் யார் ?

ம்ருநாளினி:—என்ன ! தேவாங்கனையா ? ஆனால் நீங்கள் மஹாராஜா..........

விக்ராந்தன் :—ஆம், நான்தான் அத் துர்ப்பாக்கியசாலி விக் ராந்தன்—நீங்கள் யாரம்மா ?

ம்ருநாளினி:—மஹாராஜா! என்னை அடையாளம் தெரிய வில்லையா ?

விக்ராந்தன்:—நான் உங்களைப் பார்த்திருக்கிறேனா? தெரியவில்லையே.

இரு........இரு......நீங்கள்........நீ........நீ.......ஸ்ரீகாந்தருடைய பெண்....... ம்ருநாளினி....அல்லவா?

ம்ருநாளினி:—(ப்ரஸன்ன முகத்துடன்) ஆம் நானே அவள்.

விக்ராந்தன்:—ம்ருநாளினீ! நானுனக்குப் பெருந்தவறிழைத்துவிட்டேன். என் பத்னிக்கும் புத்ரனுக்கும் ஸத்கதியளித்த ச்ரேஷ்டமானவளுடைய பிம்பத்தை மாறுதலாக மனதிலெண்ணி மஹாபாதக மிழைத்து விட்டேன். ம்ருநாளினீ! இப் பெருங் குற்றத்தை மன்னிக்க வேண்டும். தேவாங்கனையை தஹனம் செய்த புண்ய ஸ்தலத்தைக் காணவேண்டுமெனும் ஆவலில் புத்திகெட்டு இத்தவறிழைத்தேன்.

ம்ருநாளினி.—இதில் என்ன ப்ரமாதம்?

விக்ராந்தன்:—ம்ருநாளினீ! இம் மொழிகளையே என் அபராத க்ஷமாபணமாய்க் கொண்டேன். ஆயினும் ம்ருநாளினீ! என் அருமைத் தேவாங்கனையின் தஹன ஸ்தலம் எங்கே? பார்க்கப் பேராவலா யிருக்கிறேன்.

ம்ருநாளினி:—மஹாராஜா! இதோ பாரும். தேவியினுடைய தஹன ஸ்தலம்.

(ஸமாதியைக் காட்டுகிருள்.)

விக்ராந்தன்:—எங்கே? எங்கே?

ம்ருநாளினி:—மஹாராஜா! அந்த ஸ்தலத்தின்மேல் தான் இம்மண்டபம் கட்டியிருக்கிறது. தேவியின் பவித்ரமான அஸ்தி இந்த மண்டபத்தின் கீழ் ஸுக ஸமாதி கொண்டிருக்கிறது.

விக்ராந்தன்:—என்ன! என்ன சொல்கிருய் ம்ருநாளினி? இந்த மனோஹர மந்திரம் என் தேவாங்கனை யுடையதா? இந்த ஸ்வர்ணமயமான கலசத்தின் கீழ் பூமா

தேவியின் ரத்னமயமான கர்ப்பத்தில் என்தேவாங்கனை இருக்கிறாளா? இதை யார் கட்டுவித்தார்கள்? என் பிரிய ஸகிக்கு இவ்வளவு கௌரவம் செய்தவர் யார்? என்னைத் தன் அடிமையாக்கிக் கொண்டவர் யார்? சொல். ம்ருநாளினீ! சொல். அப்புண்யாத்மாவை நான் பார்த்து என் உள்ளத்தினின்றும் வெள்ளமாய்ப் பெருகும் க்ருதக்ஞதையை வெளியிட வேண்டும். சொல் யார் அந்த மஹாத்மா? ஏன் மௌனமாயிருக்கிறாய்? ஏன் இவ்வளவு வெட்கம்?—ஆஹா! ஆம்! ஆம்!! இது உன் ஔதார்யமா? ஆம் ஸந்தேஹமில்லை. ம்ருநாளினி! சொல். இது உன்னுடைய உத்தம க்ருத்யம் தானே? ஆஹா! உன் பெருமையை எவ்வாறு புகழ்வேன்? அம்மா! நீ மானுஷ ஸ்திரீயல்ல. ஸத்குணவதியான ஸ்வர்க்கலோக தேவதை. நான் என்ன கைம்மாறு செய்வேன் உனக்கு?

ம்ருநாளினி :—மஹாராஜா! நான் என்ன செய்து விட்டேன்? என் கடமையைச் செய்தேனே யன்றி வேறென்ன?

விக்ராந்தன் :—அம்மா! நீ இவ்வாறுரைப்பதால் உன் பெருந்தன்மை ஓங்கி விளங்குகிறது. ஆனால் உன்னுடைய ஸ்வர்ணமயமான அரண்மனையில் ஸுக நித்திரையில் இருக்கவேண்டிய இந்த வேளையில் நீ இங்கு வந்ததேக் காரணம்?

ம்ருநாளினி:—மஹாராஜா! தேவி தேவாங்கனையுடைய சர்ம கைங்கர்யங்கள் பூர்த்தி யடைந்தபின் நான் இந்த நந்த வனத்திலே இருந்து வருகிறேன். தேவியின் ஸமாதிக்கு த்ரிகாலமும் பூஜை செலுத்தி வருகிறேன்.

விக்ராந்தன் :—என்ன? அவள் ஸமாதிக்கு த்ரிகால பூஜை நடத்திடும் வ்ரதம் பூண்டனையா?

ம்ருநாளினி :—ஆம்!

விக்ராந்தன் :—ம்ருநாளினீ! இந்த அருணோதய காலத்தில் பஞ்சு மெத்தை மீது ஸுகமாய் சயனித்திருக்கத்தக்க நீ கேவலம் கட்டாந் தரையில் கிடந்தி யிருக்கும் ஓர் அனாதை ஸ்திரீயை பூஜிக்க வேண்டி இங்கு வந்தனை யா? ம்ருநாளினீ! உன் செய்கைகளால் என் மனதை ஒரு நிலையிருக்க வொட்டாமல் செய்துவிட்டாயே. தேவாங்கனையை இழந்ததற்கு துக்கப்படுவதா? அவ ளுக்கு நீ செய்யும் இந்த அமோகமான கௌரவத் திற்கு ஆநந்தப்படுவதா? உனக்கு நான் பட்டிருக் கும் கடனை என்றுதான் தீர்ப்பேனோ?

ம்ருநாளினி :—மஹாராஜா! நான் இவ்வளவு அநுக்ரஹத் திற்கு பாத்திரமல்லவே.

விக்ராந்தன்:—நீ சொல்வதைச் சொல்லிக்கொள். என் மன தில் இருக்கும் கிருதக்ஞதையின் தன்மை தெய்வத் திற்கே தெரியும். உத்தம தேவதையின் ஸந்நிதியில் உத் பவிக்கும் உயர் கருத்துகளே இப்பொழுது உன்னெ திர் நிற்கும்போது என் உள்ளத்திலுண்டாகின்றன.

ம்ருநாளினி:—மஹாராஜா! இவை யெல்லாம் என் ஸாந் நித்ய ப்ரபாவமே யில்லை. ஆனால் இம்மண்டபத்தின் கீழ் மண்ணிடை உறைந்துள்ள மங்கையின் மணிப்ரபா வமே!

விக்ராந்தன் :—ம்ருநாளினி! என் தேவி தேவாங்கனையிடம் நீ இவ்வளவு உத்க்ருஷ்டமான பக்தி வைத்திருப்ப தைக் கண்டு என் மனம் பொங்குகிறது. (ஸமாதியைப் பார்த்து) ஏ! தேவீ! தேவாங்கனே!! இதோ இந்த கண்களுக்கு உன் உருவம் தெரியாவிடினும் என்னுள் ளத்தினுள்ளிருக்கும் அந்தர்த் த்ருஷ்டிக்கு உன் திவ்ய ரூபம் திகழ்ந்து தோன்றுகிறது. உன்னுடைய ப்ரேமா பூஜையை இவ் வேளையில் வேறெந்த விதத்திலும் செய்ய வல்லேன் அல்லேன். இதோ ஏற்றுக்கொள்.

(பாடுகிறான்.)

ம்ருநாளினி:—தேவியின் பூஜைக்காகத் தொடுத்த ஹாரம் இதோ......

(கையில் கொடுக்கப்போகிருள்.)

விக்ராந்தன்:—என் ஹ்ருதய கமலத்தையும் விடவா இந்த ஹாரத்தின் புஷ்பங்கள் சிறந்தவை?—ஆனுல் இரு. (ஹாரத்தை வாங்கிக்கொண்டு) இந்த ஹாரத்தை நீ தேவிக்கு ஸமர்ப்பிக்கச் செய்தாயல்லவா? இந்த ஹாரத்திலுள்ள ஒவ்வொரு புஷ்பத்தின் ஒவ்வொரு தளமும் என் ஹ்ருதயத்தைக் காட்டிலும் பன்முறை சிறந்தது. வாஸ்தவம்.

(ஹாரத்தை ஸமாதிமேல் ஸமர்ப்பித்து வணங்கி ஸ்மரிக்கிருன்.)

ம்ருநாளினி :—(ஸ்வகதம்) ஸ்த்ரீ ப்ரேமையின் மஹிமையே மஹிமை.

விக்ராந்தன் :—ம்ருநாளினி! நான் செல்வமும் ஸாம்ராஜ்யமும் படைத்தவனன்று. எல்லா மிழந்து நாடோடியாயலைந்திடும் என்னிடம் உனக்களித்திட என்ன இருக்கக் கூடும்? போரில் சுத்த வீரனுய் தர்ம யுத்தம் செய்து அபஜயமடையாது நான் பெற்ற கீர்த்தியும், இந்தக் கணையாழியுமே இப்பொழுதென்னுடையவை; என் கீர்த்தியில் பெரும்பான்மையைக் கரைத்துக் கண்ணீர் உருவுடன், தேவாங்கனையுடையதென்று நினைத்து உன் பிம்பத்தின் பாத கமலத்திற்கு அர்ப்பணம் செய்வித்தேன். மிகுந்துள்ள சிறுபான்மையை அந்த புனிதையினுடைய ஸமாதிக்கு அதே ரூபத்தில் அர்ப்பணம் செய்துவிட்டேன். இதோ இந்தக் கணையாழி விக்ரமாதித்ய மஹாராஜா எனக்களித்தது. மும்முறை இந்தப் ப்ரம்மாவர்த்த ஸாம்ராஜ்யத்தை எனக்கவரளித்ததை நான் மறுத்தேன். அதைக் கண்டு மெச்சி, எனக்கிதைப் பரிசாயளித்தார். நான் சில

நாள் அணிந்து பிறகு என் தேவியின் விரலிலிட்டேன். அவள் ஸத்கதி யடையும் வரையில் அணிந்திருந்தாள். ம்ருநாளினீ! நீ எல்லா விதத்திலும் அவளை யொத்தி திருக்கிறாய். அதற்கறிகுறியாய், இதை யணிந்து அவளையும் என்னையும் கௌரவித்திடு. மறுக்காதே! இதை யணிந்தவளின் அருள் உனக்கென்றும் இருக்கும்.

(கொடுக்கிறான்.)

ம்ருநாளினி:—இவ்வளவு கௌரவத்திற்கு நான் பாத்திரமல்லேன். ஆயினும் மஹாராஜாவின் ஆசீர்வாதமென்று ஏற்றுக் கொள்ளுகிறேன்.

(வணக்கமாய் வாங்கிக் கொள்கிறாள்.)

விக்ராந்தன் :—ம்ருநாளினீ! நான் வருகிறேன். என் மித்ரர் என்னை எதிர் பார்த்திருப்பார்கள்.

ம்ருநாளினி :—மஹாராஜாவின் சரணங்களில்—

(நமஸ்கரிக்கப் போகிறாள்.)

விக்ராந்தன் :—(அவளைத் தடுத்து) வேண்டாம். ம்ருநாளினீ! நீ மஹா உத்தமி. உன்னை நினைக்கும் போதெல்லாம் என் மனம் நன்றி யறிவுடன் பொங்கும். நீ தேவிக்கு இந்த மந்திரத்தைக் கட்டி எவ்வளவு உபாஸனை இயற்றுகிறாயோ அதற்கு ஸமானமாய் என் ஹ்ருதயமாகிய மந்திரத்தில் உனக்கு நான் பூஜை செலுத்தி வருவேன். (நான் வருகிறேன்.)

(ம்ருநாளினி நின்றபடி வணங்குகிறாள். விக்ராந்தன் அவளை ஆசீர்வதித்து ஸமாதியையும், அவளையும், மாறி மாறி, திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் போகிறான். ம்ருநாளினி அவன் போன திக்கையே பார்த்த வண்ணம் நிற்கிறாள்.)

ம்ருநாளினி:—(ஸ்வகதம்) ஆஹா! நான் இதுவரையில் பரமானந்தக் கடலில் மூழ்கி யிருந்தேனே! என் மனமும்,

என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவருடைய மன மும் ஒருமித்திருந்தனவே இந் நேரம்!

(பிரதிமையருகில் போய் அதைப் பார்த்து சற்று திடுக்கிடு கிறாள்.)

இதென்ன இது! இந்த பிம்பத்தின் மேல் ஜலத்துளி கள் எங்கிருந்து வந்தன?... அறிந்தேன் அறிந்தேன். தேவாங்கனையின் பிம்பமென்று நம்பி தன் கண்ணீரி னால் நனைத்திட்ட மஹாராஜா விக்ராந்தருடைய கண் ணீரிது...ஏ பிம்பமே! நீயே தன்யை! அவருடைய கண்ணீரினால் உன் சரணங்களும், அங்கமும் நனைந்திட நீ என்ன தவம் செய்தாய், சொல்? என்ன? வெயிலி லும், மழையிலும், காற்றிலும் ஒரே நிஷ்டையாய் நின்றுகொண்டு கைகள் கூப்பித் தேவியைப் ப்ரார்த் திப்பதின் பலனா? ஆனால் நானும் அப்படியே எனக் கும் அந்த வரப்பிரஸாதம் அளிக்கும் வரையில் என் சிரத்தை பணிகிறேன்.

(ஸமாதியில் தலை வணங்க, விக்ராந்தன் போட்டுச் சென்ற ஹாரம் அவள் கழுத்தில் விழுகிறது.)

ஆஹா! யார் இந்த ஹாரத்தை என் கழுத்தில் அணி வித்தது? தேவி என் ப்ரார்த்தனையைக் கேட்டுத் தான் வைத்திருந்த தன் பதியின் ஹ்ருதயத்தை எனக் களித்து விட்டாள். ஆனால் இதை நான் எவ்வாறு காப்பாற்றுவேன்? இது வாடி விடுமே. அவருடைய ஹ்ருதயமும் இதைப்போல் வாடாதல்லவா? ஐயோ! அவர் போகும்போது அந்த ஸமாதியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு போனாரே. அவர் கண் ணீர் தாரை தாரையாய்ப் பெருகிற்றே! பாவம்! ஜக தீசா! தன் ஆயுள் முழுமையும் அந்த உதார சீலன் துக்கித்தே இருக்க வேண்டுமா?....தேவி தேவாங் கனை தன்மேல் கொண்டிருந்த பக்தியும் காதலும் ஒரு குறைவுமின்றி மற்றொருவளுடைய உள்ளத்தில் குடிகொண் டிருக்கின்றதென்று அவர் அறிந்தால்

அவர் மனம் கொஞ்சமாவது தேருதா? ஏன் தேருது? ப்ரேமையினுல் ஆருத ரணமும் உலகிலுண்டோ? ஆனுல் யார் எனக்கு ஸகியா யிருந்து அவரிடம்போய் என் காதலைத் தெரிவிப்பார்கள்?—ஏன் கலங்க வேண்டும்? காதலென்பது தானே பேசக்கூடிய சக்தி வாய்ந்திருக்கும்போது, பிறர் ஏன் போயுரைக்க வேண்டும்? கன்னிகைகளுக்குக் கனிந்துதவும் ப்ரீதி தேவதையே! என்மேல் தயை கூர்ந்திடுவாய்.

(பல வீரர்களுடன் கோதண்டன் பிரவேசம்.)

கோதண்டன்:—இவள்தான் ம்ருநாளினி போலும். எதற்கும் இவளையே கேட்போம்—அம்மா! நீ யார்?

ம்ருநாளினி:—நீங்கள் யார்?

கோதண்டன்:—நான் மதாலஸா மஹாராணியின் ஸேனுதிபதி கோதண்டன்.

ம்ருநாளினி:—ஓஹோ! நீங்கள்தானு அந்த கோதண்ட ப்ரபு? வஸந்த குமாரனை வாள் போரில் வென்று வதைத்த வீராதி வீரரா? தனித்திருந்த தேவி தேவாங்கனையைத் தளைகள் பூட்டிக் கைதியாய் நடத்திச்சென்ற ரண துரந்தரரா? ஸ்திரீகளின் அந்தப்புரங்களிலும், நந்தவனங்களிலும், உமது வீரருடன் உலாவுவது உமது முறைமை போலும்.....யார் அனுமதியைக் கொண்டு என் நந்தவனத்தில் நுழைந்தீர்கள்?

கோதண்டன்:—மஹாராணியின் ஆளுகைக்குட்பட்ட எந்த இடத்திலும் எவருடைய அனுமதியு மின்றி நுழைய எனக் கதிகாரமுண்டு... ஆனுல் ம்ருநாளினி நீதானு?....

ம்ருநாளினி:—ஆம். நானே தான். விக்ராந்த மஹாராஜாவின் விஜயத்தைக் கோரும் ம்ருநாளினி....தேவி தேவாங்கனுவை அந்தியகாலத்து அருகிருந் துபசரித்த ம்ருநாளினி.

கோதண்டன் :—மஹாராணி உன்னை அழைத்து வரச் சொன்னாள்.

ம்ருநாளினி :—யார் மஹாராணி?....மதாலஸையா?

கோதண்டன் :—மரியாதை மீறிப் பேசாதே....வருகிறாயா? இல்லையா?

ம்ருநாளினி :—நானாக ஒருநாளு மில்லை....நீங்கள் பெரிய ஸேனாதிபதி; போர்வீரர், தளகர்த்தர், தைரியசாலி.... வழக்கம்போல் ஸேனைகளுடன் வந்திருக்கிறீர்கள்.... நானும் துணையின்றித் தனித்திருக்கிறேன்...ஸ்திரீகளைக் கைதியாக்குவதில் கைதேர்ந்த உமக்கு, கஷ்டமென்ன?

கோதண்டன் :—அப்படியே....நீ என் கைதி....நட.

ம்ருநாளினி :—ஸந்தோஷமாய்....ஜய விக்ராந்த மஹாராஜா! ஜய! தேவாங்கனா!

(போகிறாள்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 4. களம் 2.

இடம் :—மதாலஸையின் அரண்மனை.

[மதாலஸை வீற்றிருக்க, கோதண்டன், துர்ஜயன், ஸர்தார்கள், ஸேவகர்கள் முதலியவர் சூழ்ந்து நிற்கிறார்கள். ம்ருநாளினியை காவலர் சூழ ஒரு புறம் நிறுத்தப்பட்டிருக்கிறது.]

மதாலஸை :—ம்ருநாளினீ! என் கிருபையை இம்மாதிரி திரஸ்காரம் செய்யாதே.

ம்ருநாளினி :—உன் கிருபையினால் எனக்கு ஆகவேண்டிய தொன்றுமில்லை.

மதாலஸை :—என் ஸ்நேகம் உனக்கிருந்தால் இகலோக ஸாம்ராஜ்ய முழுவதும் கிடைக்கக் கூடும்.

ம்ருநாளினி :—வேண்டவே வேண்டாம். ரௌரவ நகர வாஸியா யிருந்திட எனக்கு அபிப்ராயமில்லை.

மதாலஸை:—ஆனுல் தேவாங்கனை யடைந்த கதியை அடைவாய்.

ம்ருநாளினி :—ஐயோ! அவள் அடைந்த கதியை அடைந்திடும் பாக்யமும் எனக்குக் கிட்டுமா?

மதாலஸை :—பயமே வேண்டாம்! கிடைக்கும். கோதண்டா! நமது ஸேவகர் போன செய்தி என்ன?

கோதண்டன் :—ஸர்க்கார்! விக்ராந்தன் பக்கம் சேரக்கூடியவர்களென்று ஸந்தேஹிக்கக் கூடிய எண்ணூற்றைம்பது செல்வவந்தர்களைக் கைது செய்து வந்திருக்கிருர்கள்.

துர்ஜயன் :—அதுவுமன்றி அவர்களுடைய பெண்டு பிள்ளையர்களையும் கூடப் பிடித்து வந்திருக்கிருர்கள்.

மதாலஸை :—என்ன சொல்கிருர்கள்?

கோதண்டன் :—ஒருவராவது வாயைத் திறக்கவில்லை.

துர்ஜயன் :—புத்தி கெட்ட மடையர்கள்.

மதாலஸை :—ஆனுல் எல்லோரையும் எதிர் மைதானத்தில் நிறுத்தி கற்களாலடித்துக் கொன்று விடுங்கள்—இரு, இரு. ம்ருநாளினீ! என் ஆக்ஞையைக் கேட்டனையா? நீயாவது வாயைத் திறந்து விக்ராந்த னெங்கிருக்கிருனென்று மாத்திரம் சொல்லிவிடு. அவர்கள் யாவரையும் விடுவித்து விடுகிறேன்.

ம்ருநாளினி :—ஜகதீசனே! இதுவும் உன் பரீக்ஷையா?—ராஜகார்யமே எனக்குப் பிரதானம்; உன் மனம் போல் செய். என்னையும் அவர்களுடன் அழித்துவிடு.

மதாலஸை:—துர்ஜயா! கட்டளையை நிறைவேற்றச் சொல்.

(துர்ஜயன் போகிருன்.)

ம்ருநாளினீ! அந்த சந்திரசேகரனுக்காக இவ்வளவு துன்பங்களையும் அனுபவிக்க உடன்படுகிறீர்களே. அந்தச் சிறிய பயல் உங்களுக்கு என்ன அவ்வளவு ஹிதம் செய்திருக்கிறான்?

ம்ருநாளினி:—அதையெல்லாம் கவனிக்க வேண்டியதில்லை. அவன் எங்கள் அரசன்.

மதாலஸை:—என்ன! சந்திரசேகரனா உங்கள் அரசன்? ஆனால் நான் யார்?

ம்ருநாளினி:—நீயா? அமானுஷ விகாரங்களமைந்த அலங்கோலக் குப்பை. அமங்கலமான பாபரஸங்களையெல்லாம் ஒன்று திரட்டி வார்த்த அவலக்ஷண ப்ரதிமை. அதிபாதாள பரியந்தம் அனைவரையும் அழைத்தழிக்கும் அனுசாரக் கருவி. கொலையுண்ட ப்ரேதங்களிலிருந்து புழுவைப்போல் கிளம்பி, ராஜ்ய லக்ஷ்மியின் அலங்காரமான மந்திரத்தில் சோரத்தனமாய் புகுந்து, அவளுடைய மகுடத்தை அபகரித்து அணிந்துள்ள அகாத வ்யபசார நீலி. சீ! நீயா ராணி!!

மதாலஸை:—(கோபத்தால் துடித்து) ம்ருநாளினீ! வேண்டாம். எந்த ஸ்திரீயின் முன்னிலையில் நிற்கிறாய் என்று யோசி.

ம்ருநாளினி:—சீ! "ஸ்திரீ" என்னும் சுத்தமான மொழியையும் நீ உரைத்தல் தவறு. நீ ஸ்திரீயா? நீ பேய்! ஸூர்யகுல ஸிம்ஹாஸனத்தை எப்படி பலாத்காரமாய் பற்றினாயோ அம்மாதிரி "ஸ்திரீ" என்னும் பெயரையும் பற்றப் பார்க்கிறாயா? உள்ளத்தில் எள்ளளவும் ஈரமில்லாது, தயை யென்பதையே தள்ளிவிட்டு, மனிதரின் மாம்ஸத்தை மனதாரப் புசித்திடும் உன்னையா "ஸ்திரீ" என்று உரைப்பது?

(வெளிப் புறத்தில் பெருத்த கூக்குரல் உண்டாகிறது. அநேக குரல்கள், "ம்ருநாளினீ! நாங்கள் போகிறோம்.

நீ உன் நிஷ்டையிலிருந்து வழுவாதே. ஈசன் உன்னைக் காப்பார்'' என்று உரத்துக் கேட்கின்றன; ம்ருநாளினி மெய்சிலிர்க்க, மதாலஸை நகைக்கிறாள்.)

கோதண்டன் :—(பிரவேசித்து) மஹாராணீ! அத்தனை விஷ ஜந்துக்களையும் கற்களா லடித்துக் கொன்று விட்டார்கள்.

மதாலஸை :—ஸந்தோஷம். இதோ இந்த ஸர்ப்பிணிக்கும் ஏதாவது வழி ஏற்படுத்தவேண்டும்.

ம்ருநாளினி:—மனமார ஏற்பாடு செய். நான் ஒருத்தி சென்றால் என்னிலும் கடு விஷமமைந்து பத்து ஸர்ப்பிணிகள் முன்வருவார்கள். ஒரு தேசத்தில் பொது ஜனங்கள் யாவரும் முழுமனதுடன் கோரித் தொடங்கிடும் பெருங்காரியம், ஒருவரைக் கொல்வதால் ஒய்ந்து விடாது, ஆயிரம் பெயரை அழிப்பதால் அற்று விடாது, கணக்கற்றவரைக் காராக்ரஹத்தில் அடைப்பதால் கலக்கமடைந்து கெட்டுவிடாது; ஆனால் அம்மாதிரி இடும் தடைகளால் அக்காரியம் காந்தியுடனும், வல்லமை யுடனும் நாளுக்கு நாள் அதிகமாய் விளங்கிக் கடைசியில் ஜயமுடன் நடைபெறும்.

மதாலஸை :—ஆஹா! இந்த ப்ரம்மாவர்த்தத்தில் இப்பொழுது பெண்டுகளும் வீரம் பேசிடும் ஆண்மக்களாய் விட்டார்களா? துர்ஜயா! இதோ நிற்கும் இந்த விஷப் பூச்சியை எதிரிலிருக்கும் பிரதேசத்தில் உயிருடன் அக்னிக் கிரையாக்குங்கள். கொண்டு போங்கள். என் உப்பரிகையின் மேலிருந்து கண்ணார இவள் புகை மார்க்கமாய் ஸ்வர்க்கம் போவதைப் பார்க்கிறேன். கோதண்டா! இவளுடைய ஸொத்துகள் யாவையும் ஜப்தி செய்யுங்கள். இவளுடைய மாளிகைகளை யெல்லாம் தரை மட்டம் செய்து விடுங்கள். இவளுடைய பந்துக்கள், உற்றார், உறவினர் யாவரையும்

கைது செய்யுங்கள். இம்மாதிரி த்ரோஹிகளை நிர்மூலமாக்கி வேருடனழிக்க வேண்டும்.

(போகிறாள்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 4. களம் 3.

இடம் :—மதாலஸையின் அரண்மனையின் எதிரில் ஒரு பிரதேசம்.

[அதைச் சுற்றிலும் உப்பரிகைகள் கட்டப்பட்டிருக்கின்றன. பிரதேசத்தின் நடுவில் ஓர் சிதை நிர்ணயிக்கப்பட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அநேக ஜனங்கள் திரள் திரளாய்க் கூடி யிருக்கின்றனர். ஸேவகரும் காவலாளிகளும் அங்குமிங்கும் போய்க் கொண்டிருக்கிறார்கள். உப்பரிகைமேல் மதாலஸை, துர்ஜயன், கோதண்டன் முதலியவர் பிரவேசம்.]

மதாலஸை:—எங்கே அவள்? அழைத்து வரவில்லையா?

கோதண்டன் :—இதோ வந்துவிடுவாள், ஸர்க்கார்!

முதல் நகரவாஸி :—அம்மணி! ஓர் மனு.

(ஜனங்களுக்குள் குழப்பம் உண்டாகிறது.)

மதாலஸை :—என்ன அலங்கோல மிது?

கோதண்டன் :— ம்ருநாளினியை மன்னித்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்ள சில நகரவாசிகள் தங்களிடம் வந்திருக்கிறார்கள்.

மதாலஸை :—மன்னிப்பதா? என்ன வார்த்தை!

முதல் நகரவாஸி:—அம்மணி! உங்கள் பாதத்தைப் பணிந்து நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்..........."

மதாலஸை :—போதும், நிறுத்துங்கள்! யார் வேண்டினுலும் கேளேன்.

(ம்ருநாளினியை ஸேவகர் அழைத்து வருகின்றனர்.)

இரண்டாம் நகரவாஸி:—மஹாராணீ! இவளுடைய இளம் வயதையாவது தாம் கவனிக்கலாகாதா?

மதாலஸை :—இதென்ன தொந்தரவு! கோதண்டா! இவர்களை வெளியே தள்ளச் சொல்.

மூன்ரும் நகரவாஸி:—அம்மணி! தங்களடிமை.

(தரையில் விழுகிருன்.)

மற்ற யாவரும்:—அம்மணீ! தயை புரியவேண்டும். தயை புரிய வேண்டும்.

மதாலஸை :—சீ! பஞ்சைகளே! போங்கள் வெளியில்! ஸேவர்களே, இவர்களை வெளியே பிடித்துத் தள்ளுங்கள். அடீ! புத்தி கெட்டவளே! இப்பொழுதாவது விக்ராந்தனிருக்குமிடத்தை உரைத்திடு.

ம்ருநாளினி:—(வாயைக் கெட்டியாய் மூடிக்கொள்கிருள்.)

மதாலஸை :—வேண்டாம், வீணுய் மடியாதே. அதோ அந்தச் சிதை யாருக்காக எரிகின்றது தெரியுமா?

ம்ருநாளினி :—எனக்காக!

மதாலஸை :—ஆஹா! அப்படியா? ஆனுல் தள்ளுங்கள் அவளை அதில்

(சேவகர் ம்ருநாளினியைச் சிதையில் தள்ளப் போகின்றனர்)

(வெகு அவசரமாய் முதல் கோஸாயி பிரவேசிக்கிருன்.)

முதல் கோஸாயி :—வேண்டாம். வேண்டாம். நிறுத்துங்கள். சிறுமியை விடுங்கள்.

மதாலஸை :—யாரிது? தள்ளுங்கள் வெளியே!

இரண்டாவது கோஸாயி :—(பிரவேசித்து) அம்மணி! ராணிகளுக்குத் தயை இருக்கவேண்டும்; பாபம், விட்டு விடுங்கள்.

மதாலஸை :—இதென்ன பாதை? தள்ளுங்கள் இந்தக் கோஸாயிப் பேய்களை வெளியே!

(ஸேவகர் தள்ளப்போகிறார்கள்.)

மூன்றும் கோஸாயி :—(பிரவேசித்து) அம்மணி! உலகில் ஒருவரும் ஸ்திரமில்லை. யார் யாரைக் கொல்வது? ஹிம்ஸை பொல்லாது. நிறுத்துங்கள்.

நான்காவது கோஸாயி :—(பரபரப்புடன் பிரவேசித்து) ராணீ! ஜாக்கிரதை. ஹத்து மீறுதீர்கள்! அனைத்தும் அழிந்துவிடும்.

மதாலஸை :—கோதண்டா! இதென்ன? காவலர் ஏன் இப்படி அஜாக்கிரதையுடனிருக்கின்றனர்? இதென்ன அலங்கோலம்? கேட்பவரில்லையா?

(ஸேவகர் கோஸாயிகளை வெளியே தள்ளுகிறார்கள்.)

மதாலஸை :—அடி பைத்தியமே! நீ இவ்வளவு நிஷ்டை கொண்டு என்ன பயன்? எவனுக்காக இதை மேற்கொண்டாயோ அவன் இதற்குப் பாத்திரனல்ல.

ம்ருநாளினி :—அந்த மஹாத்மாவுக்காக எந்த த்யாகமும் நான் செய்திடுவேன்.

ஜனங்கள் :—பேஷ்! பேஷ்!! ஸரியான பதில்!

மதாலஸை :—யாரது "பேஷ்" "பேஷ்" என்பது? கத்துபவர்களைச் சிறையிலிடுவேன்.—ம்ருநாளினீ! உன்னைச் சுற்றி நிற்பவர் யமதூதர். நீயாகப் போகுமிடம் யமலோகம்! இன்னும் கெட்டுவிடவில்லை. பர்வ காலத்தில் வீணில் மடியாதே.

ம்ருநாளினி :—விச்வாஸ காதகியாய் உன் திருஷ்டியில் உலாவுவதினும் நான் மடிவதே மேல்.

ஜனங்கள் :—பேஷ்! பேஷ்!!

(ஆரவாரிக்கிறார்கள்.)

மதாலஸை :—ஆஹா ! உனக்கு த்ரோஹ மிழைத்தவரை என் முன்னிலையில் ஆமோதிப்பது எனக்கே இழைத்த பெரிய த்ரோஹமாகும். இனி யாராவது இப்படி செய்தால் அப்படியே அவர்களை அக்னியில் தள்ளி விடச் செய்வேன்—ம்ருநாளினீ ! எங்கே உன்னுடைய விக்ராந்தன் ? கூப்பிடு அவனை. வந்து உன்னை ரக்ஷிக்கிருனு பார்.

ஒரு குரல் :—இவ்வுலகில் விக்ராந்தன் உயிருடனிருக்கும் வரையில், இந்த உத்தமியை ரக்ஷித்தே தீருவான்.

மதாலஸை :—(உரத்து நகைத்து) கைப்புண்ணுக்குக் கண்ணுடியா? விக்ராந்தன் இவ்வுலகில் மாத்திரமன்று, இந்த ஸந்நிதானத்தில், இங்கேயே இருந்தாலும் என் கையில் சிக்கி யிருக்கும் இவளையா விடுவித்திட வல்லவன் ?—ம்ருநாளினீ ! மரிக்க ஸித்தமாயிரு.

ம்ருநாளினி :—என்றும் ஸித்தமா யிருக்கிறேன். அருமையான பிரஜைகளே! நான் வருகிறேன் ; உங்கள் ப்ரீதிக்காக நான் மிகவும் கிருதக்ஞதை யுடையவளா யிருக்கிறேன் ! ராஜ கார்யத்திற்காக மரிப்பது என் பெரும் பாக்யம். மஹாராஜா விக்ராந்தரையும், சந்திரசேகர சக்கிரவர்த்தியையும் என்றும் மறவாதீர்கள். பாலகன் வஸந்தனுடைய ஆத்ம யக்ஞதையும், தேவி தேவாங்கனையுடைய திவ்ய ராஜபக்தியையும், ராணி ஸரோஜினியின் ஸத்யாபிமானத்தையும்......"

மதாலஸை :—சீ ! நிறுத்து. மூடுங்கள் அவள் வாயை. பேசாவிடாதீர்கள்.

ம்ருநாளினி :—பந்துக்களே! ஜகதீசன் உங்கள் யாவரையும்..........."

மதாலஸை :—மூடுங்கள் அவள் வாயை !

ஜனங்கள் :—பேசட்டும். பேசட்டும். (ஆரவாரம்) ஜேய் ! ம்ருநாளினி ! ஜேய் !

(ஸேவகர் ம்ருநாளினியைச் சிதைமீது தள்ளுகிறூர்கள்.)

ம்ருநாளினி :—“ விக்ராந்த மஹாராஜா ! ”

ஜனங்கள் :—விக்ராந்த மஹாராஜா ! விக்ராந்த மஹா ராஜா ! !

மதாலஸை :—விக்ராந்தன் ! ! விக்ராந்தா ! வா. வா. சீக்கிரம் வந்து இக்காட்சியைப் பார்த்துக் களித்திடு. வா!

ம்ருநாளினி :—“ விக்ராந்த மஹாராஜா......”

ஜனங்கள் :—விக்ராந்த மஹாராஜா! விக்ராந்த மஹாராஜா!

(திடீரென்று பல கோஸாயிகள் சூழ, விக்ராந்தன் தன்னுடைய கோஸாயிக் கோலத்தைக் கிழித்தெறிந்து பாய்ந்து ஓடி வந்து சிதைமீதேறி ம்ருநாளினியைக் கரங்களில் தாங்கினவனாய்க் கீழே குதிக்கிறான்.)

விக்ராந்தன் :—பார் ! மதாலஸே ! பார் என்னை ? தன்னைக் கூவி யழைத்தவரைக் காத்திட ஓடிவந்த விக்ராந்தனைப் பார். இதோ, உன் கூட்டத்தாரின் மத்தியிலிருந்து, நீ அக்னிக்கிரையாயளித்த என் அன்புக்குப் பாத்திரமானவளை மீட்டுப் போகிறேன்; சௌர்யம் இருப்பவர் தடுக்கலாம்.

(போகப் புறப்படுகிறான்.)

மதாலஸை :—பிடியுங்கள் ! பிடியுங்கள் ! ! போகவிடாதீர்கள்.

துர்ஜயன் : கோதண்டன் :—அடியுங்கள் ! கலஹம் ! கலஹம் ! ! போர்வீரரைக் கூப்பிடுங்கள் !

விக்ராந்தன்:—ஜனங்களே ! எங்களுக்கு வழிவிடுங்கள். ரக்தத்தைச் சிந்தி ரணம்புரிய நான் வரவில்லை. ஆனால் என்னை யாரேனும் ஆக்ஷேபித்தால் பிறகு நான் உத்தரவாதமல்ல.

(ஜனங்கள் வழிவிடுகிறார்கள். “விக்ராந்த மஹாராஜாவுக்கு ஜேய் !” என்று பெருங்கோஷம் உண்டாகிறது. விக்

ராந்தன் ம்ருநாளினியுடன், தன் திறத்தார் சூழப் போகிருன்.)

மதாலஸை:—போங்கள்! பின்ஞல் ஓடுங்கள்! பிடியுங்கள்! என் கத்தி எங்கே? கொண்டுவா என் குதிரையை........

(தன்னேயும் மறந்து உப்பரிகைமேலிருந்து குதிக்கப் பார்க்கிருள். துர்ஜயனும் கோதண்டனும் பிடித்துக்கொள்கிருர்கள்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 5. களம் 1.

இடம்:—மதாலஸையின் அரண்மனேயிலே ஒரு சித்ர மண்டபம்.

(மதாலஸை, கோதண்டன், துர்ஜயன், ஸர்தார்கள் முதலியோர் பிரவேசம். மதுபானம், நாட்டியம், சங்கீதம் முதலியன நடந்துகொண்டிருக்கின்றன.]

மதாலஸை:—ஆஹா! என்ன செய்வது? இந்த விநோதங்களின் மீது என் மனம் செல்லவில்லேயே.

கோதண்டன்:—ஸர்க்கார்! ஏன் தாமிப்படி ஏங்கி யிருக்க வேண்டும்?

மதாலஸை:—விக்ராந்தனேப் பற்றி ஒன்றும் சமாசாரம் வராதது மிகவும் ஸந்தேஹத்திற் கிடமாயிருக்கிறது. எந்த வேளேயில் திடீரென்று தாக்குவானே சொல்ல முடியாது. சில நாளாய் அவன் விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் பயமும் உண்டாயிருக்கின்றது.

துர்ஜயன்:—பயம் உண்டாவதற்குக் காரண மொன்றுமில்லேயே.

கோதண்டன்:—நமது வேவுகாரர்கள் இரவும் பகலும் கண் கொட்டாமல் அவனேப் பிடிப்பதிலேயே கருத்தாயிருக்கின்ருர்கள். கவலேயே வேண்டாம்.

மதாலஸை:—சரி. ஆனால் நாட்டியம் நடக்கட்டும்.

(நாட்டியம் நடக்கிறது.)

மதாலஸை:—கோதண்டா! சண்டவர்மனிட மிருந்து ஏதா வது சமாசாரம் வந்ததோ?

கோதண்டன்:—கூர்ம துர்க்கத்தைச் சுற்றி நன்றாய் முற்று கையிட்டிருக்கிறது. ஸரோஜினி சீக்கிரத்திலேயே சரணமடைவாள்.

மதாலஸை:—துர்ஜயா! ம்ருநாளினியைப் பற்றி ஏதாவது செய்தி யுண்டோ?

துர்ஜயன்:—ஒன்றும் இல்லை; அவள் மணி நகரத்திலிருப்ப தாகத் தெரிகிறது.

மதாலஸை:—அங்கே என்ன செய்கிறாள்?

துர்ஜயன்:—செய்வதென்ன? "விக்ராந்தா" "விக்ராந்தா" என்று ஜபம் செய்துகொண்டிருப்பாள். வேறென்ன செய்வது? என்ன செய்யத் தெரியும் அவளுக்கு?

மதாலஸை:—காதலின் வலையில் சிக்கியபின் ஆணாயினும் பெண்ணாயினும் அம்மாதிரியேதான் நடப்பார்கள். சரி, நடக்கட்டும்.

(நாட்டியம் மறுபடியும் தொடங்குகிறது.)

(திடீரென்று ஒரு ஸேவகன் அலறிக்கொண்டு வருகிறான்.)

ஸேவகன்:—மஹாராணீ ஸர்க்கார்! கலஹம்! கலஹம்!! எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்!! விக்ராந்தன் பெரும் ஸைந்யத்துடன் வருகிறான்.

எல்லோரும்:—(பயந்து) விக்ராந்தனா! விக்ராந்தனா!!

மதாலஸை:—எங்கே! எங்கே!! எங்கே அவன்?

ஸேவகன்:—மணி நகரத்திலிருந்து வரும் மார்க்கத்திலி ருந்து வருகிறான். அவன் வரும் ஸமாசாரம் சுற்றி லும் பரவி ராஜ்ய முழுவதும் அலங்கோலப்படுகிறது.

ஒவ்வொரு நகரத்திலும் அவனை உபசரித்து சந்திர சேகரனுடைய ஆட்சியை ஜனங்கள் அங்கீகரிக்கிறார்கள். இரண்டு நாட்களில் அவனுடைய ஸைந்யம் ஐந்து மடங்கு அதிகரித்திருக்கின்றது.

மதாலஸை :—ஆஹா! அதற்குள் அவனுடைய ஸேனை அவ்வளவு அதிகரித்து விட்டதா?

ஸேவகன்:—அதிலென்ன ஆச்சரியம்? அவன் வரும் வழியில் ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் அவனுடைய பெயரைக் கேட்டவுடன் நம்முடைய ஸேனைகளெல்லாம் அவன் பக்கம் திரள் திரளாய்ப் போய் சேர்ந்து விடுகிறார்கள்.

மதாலஸை :—கோதண்டா! நமது ஸேனைகளை விக்ராந்தனை எதிர்க்க அனுப்பி, எங்கெந்த நகரங்களில் அவனை உபசரித்தார்களோ அவைகளில் யாவரையும் சுட்டுப் பொசுக்கி அழித்துவிடச் சொல். பெண்கள், சிசுக்கள், விருத்தர்கள், பாலர்கள், மிருகங்கள், ஒருவரையும் விடாமல் கொன்று விடும்படி சொல்.

(மற்றொரு ஸேவகன் பிரவேசம்.)

ஸேவகன் :—மஹாராணீ! விக்ராந்தன் குந்தலபுரியினருகில் வந்து விட்டான்.

மதாலஸை :—என்ன! நேற்றைய தினம் மணிபுரியிலிருந்தவன் இன்று குந்தலபுரிக்கா வந்தான்? ஒரு தினத்தில் முப்பது கோசமா?

முதல் ஸேவகன் :—ஸர்க்கார்! விக்ராந்தன் மனதைவிட வேகமாய் வரக் கூடியவன்.

இரண்டாம் ஸேவகன் :—தன் சௌரியத்தின் பலத்தைக் காட்டிலும் தன் வேகத்தினாலேயே அவன் ஜெயமடைவது.

மதாலஸை :—அவனுடைய வேகத்திற்கு என்னுடையது குறைந்து விடவில்லை: அவன் மின்னலின் வேகத்

தைப் படைத்திருக்கலாம். ஆனால் நானே ஸாக்ஷாத் மின்னலேயன்றோ! வாருங்கள். நான் புறப்படு கிறேன். என்னை விக்ராந்தன் எப்படி எதிர்த்து நிற் கிறானோ, பார்ப்போம். கோதண்டா! மஹாராணி தானே யுத்தத்திற்குப் புறப்பட்டு விட்டாளென்று பறையறைந்திடு. ஸகலரும் என்னுடன் யுத்தத்திற்குப் புறப்பட வேண்டுமென்று எச்சரிக்கை செய். போங் கள் யாவரும்....விக்ராந்தா! உன்னிடம் ஜனங்கள் கொண்ட ப்ரீதியின் பலத்தால் மயக்கம் தலைக்கேறி என்னிடத்திலேயே பல பரீக்ஷை செய்ய வந்தாயா? ஆனால் காத்துக்கொள் உன் தலையை. மதாலஸை உன்னை நாசம் செய்யாமல் விடமாட்டாள்.

(போகிறாள்.)

(காட்சி முடிகிறது.)

———

அங்கம் 5. களம் 2.

இடம்:—விக்ராந்தனுடைய ராணுவங்கள் தங்கியிருக்கு மிடத்தில் விக்ராந்தனுடைய விடுதி.

விக்ராந்தன்:—(ஸ்வகதம்) ம்ருநாளினி என்மேல் கொண் டிருக்கும் காதல் அதிகரித்து வருகிறது. க்ஷணப்பொழு தும் என்னை மறப்பதில்லை; விட்டு விலகுவதுமில்லை. இந்த உத்தமியின் உன்னதமான காதல் மற்றொரு பாக்கியசாலிக்குக் கிடைத்திருந்தால் அவன் எவ்வளவு தன்யனாவான்? ஆனால் என்னுடைய அந்தரங்கத்தில் மாத்திரம் அக்காதலினால் கொஞ்சமேனும் உத்ஸாகம் உண்டாகவில்லையே. நான் அவள்மேல் கொண்டிருக் கும் ப்ரீதி வெள்ளம் வேறு தன்மையுடையதாக வல் லவோ யிருக்கின்றது. அவளைப் பத்னி பாவனையில் நினைக்கவும் என் மனம் உட்படவில்லையே! இதென்ன

புதுமை! எப்படி இதனின்றும் நான் மீள்வது? இல்லை! இல்லை!! இனி நான் இவளுடன் வெகு ஜாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண்டும். நான் இவள் மீது வைத்துள்ள ப்ரீதியையும் காட்டாது கடோரமாய் நடந்தால் தான் தப்பலாம். இல்லாவிடில் மிஞ்சி விடும்!—ஐயோ! இப்படி எத்தனை முறை நிச்சயித்திருக்கிறேன்! ஆனால் ம்ருநாளினியின் நிஷ்களங்க முகத்தை நோக்கிய க்ஷணத்தில் என் நிச்சயமெல்லாம் கரைந்து மறைந்து விடுகிறதே!—அதோ! வந்து விட்டாள்.

(ம்ருநாளினி பிரவேசிக்கிறாள்.)

ம்ருநாளினி:—மஹாராஜா! எனக்காக வெகு நாழிகை காத்திருந்ீரா?

விக்ராந்தன்:—இல்லை. அப்படி யொன்றுமில்லை.

ம்ருநாளினி:—நானும் வெகு அவசரமாகவே வந்தேன். ஆயினும் நேரமாய் விட்டது. மன்னிக்க வேண்டும், மஹாராஜா!

விக்ராந்தன்:—நீ இன்று என்னுடன் யுத்தகளத்திற்கு வராமலிருக்க லாகாதா?

ம்ருநாளினி:—நான் வருவதில் என்ன தவறு?

விக்ராந்தன்:—நேற்று யுத்தத்திலே பட்ட காயங்கள் உனக்கு இன்னும் ஆறவில்லையே.

ம்ருநாளினி:—மஹாராஜாவின் காயங்கள் மட்டும் ஆறிவிட்டனவோ?

விக்ராந்தன்:—ம்ருநாளினீ! நான் ரணதேவதையின் ஊழியன். எனக்கு இதுதான் தினம் விளையும் ஸுக விலாஸம்.

ம்ருநாளினி:—ஆனால் நானும் உங்களைப் போல் ரண தேவதைக்கு ஊழியம் செய்ய ஆரம்பித்துவிட்டேனே.

விக்ராந்தன் :—ஆயினும், நீ இன்று என்னுடன் வருவது உசிதமல்ல.

ம்ருநளினி :—உங்களுடைய மெல்லிய சித்தத்திற்கு நான் கஷ்டப்படுவது ஸம்மதமில்லே. ஆனல் மஹாராஜா! உங்களைவிட்டுப் பிரிந்திருப்பதினும் உங்களுடனேயே இருந்து, வரும் ஆபத்துக்கெல்லாம் உள்ளாவதிலேயே எனக்குக் கஷ்டம் குறைவு—இல்லை, ஆனந்த மதிகம். எந்த காயங்களை நானடைந்தபோது கருணை பொழியும் கண்களால் என்னைக் குளிர்ந்து பார்த்தீர்களோ, அந்த காயங்களோ என்னை உம்முடன் வரவொட்டாமல் நிறுத்தக்கூடியவை?

விக்ராந்தன் :—ம்ருநாளினீ! நீ இன்று இங்கு தங்கியிருப்பதே நலமென நினைக்கிறேன்.

ம்ருநளினி:—மஹாராஜாவின் உத்தரவை மீறுபவளல்ல நான். ஆனல் யுத்த களத்தில் உம்முடனிருந்தால் எனக்கு இன்னும் அதிக ஸந்தோஷம். ஊம்....ஊம்... மஹாராஜா...உங்களுக்கு உண்மையை உரைக்கட்டுமா? உம்மை விட்டு இருக்கும் நேரமெல்லாம் உலகிலேயே வெறுப்புத் தோன்றுகிறது. உம்முடனிருந்தால் என் கண்களில் படுவனவெல்லாம் மனோஹரமாயிருக்கின்றன.

விக்ராந்தன்:—(ஸ்வகதம்)ஆரம்பித்து விட்டாள்! என் காதில் தன் ப்ரேமா ரஸத்தைப் பொழியத் தொடங்கிவிட்டாள். ஐயோ! இந்த மதுரமான மொழிகளைக் கேட்டவுடன் என் மனம் ஏனோ வருத்தமடைகிறது? அமிர்தம் நிறைந்த தடாகத்தில் விழுந்து முழுகி மரிப்பது போலல்லவா யிருக்கிறது?....இதனின்றும் விடுவித்துக் கொள்ளவேண்டும். இன்று இங்குதான் இவளிருக்க வேண்டும். ம்ருநாளினீ! உன்னிடம் கண்டிப்பாய்ப் பேசுவதும் நடப்பதும் எனக்கு மிகவும் கஷ்டத்தைத் தருகின்றன. ஆயினும் வேறு வழியில்லே. நியாய

மாய் உனக்கு உத்தரவிட எனக்கொரு அதிகாரமு மில்லை. ஆனால் நான் சொல்வதைக் கேட்பதானால், நீ என்னுடன் ரணபூமிக்கு வரலாகாதென்று சொல் வேன்.

ம்ருநாளினி :—மஹாராஜா! தங்களுடைய ஆக்ஞையை சிர சினால் வகித்தேன்....என் சரீரம் யுத்த பூமிக்கு வரலாகா தென்று உத்தரவே தவிர என் மனம் அங்கு வரலாகா தென்று ஆக்ஞாபிக்க வில்லையே. ஆகையால் மூன்று நாட்களாய் காயமடைந்த என் காயத்தால் உமக்கு சிச்ருஷை செய்து வந்தவள், இன்று மனத்தால் ரண ரங்கத்தில் உங்களுடனிருந்து உபசரித்திடுவேன். என் சரீரம் அசக்தி யடைந்திருந்தாலும் என் மனம் உங்களுடன் யுத்த பூமிக்குவர திடம் வாய்ந்துள்ளது. —(அவனை உற்று நோக்கி) அதைத் தாம் அறிந்திருக் கிறீர் என்பதைப் பார்த்து எனக்கு இன்னும் பரமா னந்தம்.

விக்ராந்தன் :—ம்ருநாளினீ! உன்னுடைய மனோதிடத்தை நன்கறிவேன். ஆயினும் இன்று நீ உன் மனதைக் கூட என்னுடன் யுத்தகளத்திற்குச் செலுத்தக் கூடா தென்று கேட்டுக் கொள்வேன். ஆனால் அவ்வாறு செய்வது....

ம்ருநாளினி —அஸாத்தியம். நீங்களாகட்டும், நானாகட்டும், ஒப்பினாலும் ஒப்பாவிடினும், அது உங்களுடன் யுத்த களத்திற்கு வந்தே தீரும். மஹாராஜா! யுத்த களத் திற்கு மாத்திர மன்று. நீங்கள் எந்த திக்கில் சென்றா லும் அது உங்களுடைய நிழலைப்போல் உங்களுட னேயே சஞ்சரிக்கும்.

விக்ராந்தன் :—நீ யுரைக்கும் மொழிகள் சந்திர கிரணங் களைப்போல் குளிர்ந்திருப்பினும் என்னை என்னமோ புண் படுத்துகின்றன.

ம்ருநாளினி :—புண்படுத்துகின்றனவா ? மஹாராஜா! ஏன் ?

விக்ராந்தன் :—ஏனு ம்ருநாளினீ ? நான் என்னவென்று சொல்வேன் ? ஒருவன் அமிர்தம் அருந்தி மடிந்தான் அல்லது புஷ்பத்தைத் தொட்டுப் புண்பட்டான் என்ருல் என்ன காரணம் கூறமுடியும் ?

ம்ருநாளினி :—மஹாராஜா ! உங்களுக்கு க்லேசம் உண்டாக்கிட நானுரைத்ததில் என்ன இருந்தது ?

விக்ராந்தன் :—அம்மா ! ம்ருநாளினீ ! உன் வார்த்தையில் என்ன இருந்ததா ? நான் என்னவென்றுரைப்பேன் ? நீ உரைத்தது முழுதிலும் என்ன பரவி யிருந்ததோ அது இராமலிருந்தால் நன்ருயிருக்கும்.

ம்ருநாளினி :—மஹாராஜா ! என் வாக்கில் அன்பைத் தவிர வேறென்ன இருந்திருக்கக் கூடும் ?

விக்ராந்தன் :—ஆம் ! ஆம் ! ! அந்த அன்பு ! அந்த அமிர்தம் உன் வாக்கிலிருந்திடலாகாது. உன் உதார ஹ்ருதயத்திலும் அது வேரூன்றி இருத்தலாகாது—ஆனுல் அது எப்படி முடியும் ? அன்பெனும் அழகிய வஸ்து உறைவதற்கு உன் ஹ்ருதயத்தையும்விட உத்தமமான ஸ்தலம் எது ?

ம்ருநாளினி :—என்ன ! என்ன ! ! மஹாராஜா ! என் அன்பினுல் உங்களுக்கு வெறுப்புண்டாகிறதா ?

விக்ராந்தன் : — அன்பினுல் வெறுப்பா ! — ஊம்.......ஆம். அப்படித்தானென்று வைத்துக்கொள் இப்பொழுது. பிறகு பேசிக்கொள்ளலாம்.......யாருக்காவது அன்பினுல் அறுவறுப்புத் தோன்றுமா ?...ஆம். ஆம். பிறகு பேசிக் கொள்ளலாம் — ம்ருநாளினீ ! நான் வருகிறேன். ஸேனைகள் காத்திருக்கும். அதோ ! தாரை யழைக்கிறது ! யமதூதர் தம் வேலையைத் தொடங்க ஆவலா யிருக்கிருர்கள்.—நான் போகிறேன்.— (போய் மறுபடியும் வந்து) நான் உன்னை யழைத்துப் போக

வில்லை யென்று ஆயாஸம் வேண்டம்.—உன்னிடம் நான் உரைக்க வேண்டியவை அநேக மிருக்கின்றன. ஆனால் இப்பொழுதில்லை.—நான் வரவா? என்னைப் பார்.—நான் வருகிறேன்.

ம்ருநாளினி:—மஹாராஜா! உமது ப்ரதாபமுடைய வாளாயுதம் இன்று பூர்ண யசஸ்ஸுடன் விளங்கட்டும்.

(விக்ராந்தன் வேகமாய்ப் போகிறான்.)

வீரம் வாய்ந்தவருடைய சிரங்களை விகஸித புஷ்பங்களால் அலங்கரித்திடும் விஜயலக்ஷ்மியே! என் காதலருக்கு உன் அனுக்ரஹத்தைப் பூரணமாய் அளித்திடு. ஊம்....அவர் என் காதலர்தாமா?—ஆம். ஆம். ஸத்யம். அவர் என் காதலர்தாம்—அவர்தாம் என் காதலர்.—ஏனில்லை? ஐயோ! என் வார்த்தைகள் தம்மைப் புண் படுத்துவதாக ஏனுரைத்தார்? என் அந்தரங்கத்தில் அவர்மேல் நான் கொண்ட ப்ரேமை பரவாதிருத்தல் நலமென்று ஏன் உரைத்தார்?....பிரியம் வாய்ந்தவருடைய பிரியச் சொற்கள் புண் படுத்துகின்றன வென்றால் என்ன அர்த்தம்?....இன்று வரையில் அவரவ்வாறு உரைத்ததில்லையே....அவர் கண்களினின்றும், அவருடைய ஒவ்வொரு செய்கையினின்றும், என் மேல் அன்பு கொண்டிருக்கிறா ரென்று நன்றாய்த் தெரிந்ததே—ஸரி. இப்பொழுதேன் இவ் விசாரம்? யுத்தம் தொடங்கி நாலா பக்கங்களிலும் கோலாஹலமாயிருக்கும். கூடாரத்தினுட் செல்வதினும் இச் சிறு மேட்டிலிருந்து யுத்தத்தைப் பார்ப்போம்....

(போகிறாள்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 5. களம் 3.

இடம் :—ம்ருநாளினியின் கூடாரம்.

பிரவேசம் : விக்ராந்தன், ம்ருநாளினி.

விக்ராந்தன் :—ம்ருநாளினீ ! இன்று என்மனம் மிகவும் கலக்கமாயிருக்கிறது.

ம்ருநாளினி :—ஏனப்படி, மஹாராஜா ?

விக்ராந்தன் : நீ இன்று செய்த பேருபகாரத்திற்கு நான் என்ன ப்ரதி செய்வது ?

ம்ருநாளினி :—மஹாராஜா ! உபகார மென்ன ? செய்ய வேண்டிய கடமையைச் செய்தால் உபகாரமோ ?

விக்ராந்தன் :—ஆனாலும் உன் செயலுக்கு ஏதாவது ப்ரதி செய்யவே வேண்டும்.

ம்ருநாளினி :—ப்ரதிஜ்ஞை அநுஸரித்தா உமது ஸேவையைப் புரிந்து வருகிறேன் ?

விக்ராந்தன் :—அதை நான் என்றும் மறுக்கவில்லை. ஆயினும் உனக்கு ஏதாவது ப்ரதி யளிக்காவிட்டால் என் மனம் திருப்தி யடையாது.

ம்ருநாளினி :—ஏன் ?

விக்ராந்தன் :—நீ எதற்காக எனக்குழைக்க வேண்டும்?

ம்ருநாளினி :—அது என் கடமை. அப்படிக் கடமை புரிய வரையும் கௌரவிக்க வேண்டுமென்றிருந்தால், நான் கேட்பது : "என்றும் என்மேல் உமது கிருபை யிருக்க வேண்டும்" என்பதே.

விக்ராந்தன் :—உன் மீது எனது கிருபை உறையாத நாளு முண்டோ ? ஆயினும் என்னைப்போன்ற ஏழை அஸமர்த்தனின் கிருபை உனக்கெதற்கு ?

ம்ருநாளினி :—மஹாராஜா ! நீங்களா ஏழை ? நீங்களா அஸமர்த்தர் ? விக்ராந்த மஹாராஜா அஸமர்த்த ரென்றால்

இப் பேருலகில் யாரை ஸமர்த்த ரென்றுரைப்பது? கோடீச்வரரும் கோரும்படியான கோமள நிதிகளெல்லாம் உம்மிடம் குடி கொண்டிருக்க உம்மையா ஏழையென்பது? பிரஸன்ன முகத்துடன் விளங்கிடும் வேளையில் தம் ஸேவிதர் கோரியதை ஸ்மரித்த வளவில் ஸமஸ்தமா யளித்திடும் நிக்ரஹானுக்ரஹ ஸமர்த்தரையா அஸமர்த்த ரென்றுரைப்பது?

விக்ராந்தன்:—ம்ருநாளினீ! மற்றவர் விஷயத்தில் நான் என்ன ஸமர்த்தனு யிருந்தபோதிலும் உன் விஷயத்தில் மாத்திரம் அஸமர்த்தனு யிருக்கிறேனே. உனக்களித்திடக்கூடிய உத்தமப் பொருள் ஒன்று மென்னிட மில்லையே. என் போன்ற வீரனுக்கு உடையது போர்க் களத்தில் சம்பாதித்த யசஸ்ஸும், அதனுல் நான் அடைந்த கீர்த்தியும் தான். நான் சம்பாதித்த யசஸ் என்னுடையது மாத்திரமன்று. என்னுடனிருந்து உதவினவர்களுக்கும் உரிமை யுண்டாதலால் அதை நான் அவர்களுக்கே அர்ப்பணம் செய்துவிட்டேன். நானடைந்த ஸத்கீர்த்தி யாவையும் முன்பே உனக்கு அர்ப்பணம் செய்து விட்டேன். என்னிடம் வேறென்றுமில்லை. என்னுயிருள்ளளவும் உனக்குக் கடன் பட்டவனுகவே இருந்திடுவேன். இதோ இன்று முதல் உன் பாத தூளியை என் சிரஸின்மேல் வகித்து, "நான் ம்ருநாளினியுடைய அடிமை" யென்று உலகெல்லாம் அறியும்படி சொல்லிக் கொண்டு வந்தாலும் என் கடன் தீராது. ஆகையால் ம்ருநாளினீ! இது வரையில் என் பெற்றோர், என் தெய்வம், என் அரசன், என் குரு, தவிர மற்றெவர்க்கும் வணங்கிடாத இந்த சிரம், இதோ இன்று முதல் ஸதா உன்னிரு சரண கமலங்களுக்கு வணங்கினவாறே இருக்கும். ஸ்வீகரித்துக்கொள்.

(கீழே விழுந்து நமஸ்கரிக்கப் போகிறுன்.)

ம்ருநாளினி :—(பின்னால் ஓடி) மஹாராஜா! வேண்டாம். நில்லும். என் பாதங்களுக்கு அவ்வளவு யோக்யதையில்லை.

விக்ராந்தன் :—இல்லை, ம்ருநாளினீ! உன் மஹிமையை நீயறியாய்.

(விழுந்து பாதங்களில் நமஸ்கரித்து அவள் பாததூளியைத் தலையிலும் நெற்றியிலும் அணிகிறான்.)

ஈசனே! இதனால் என் ஜென்மம் பாவன மடையட்டும். ம்ருநாளினீ! நான் வருகிறேன். நீ களைத்திருக்கிறாய். சுகமாய் சயனித்துக் கொள்.

ம்ருநாளினி :—பரமேச்வரா! இந்த உதார சீலனை என்றும் உபேக்ஷித்திடாதே. இவருடைய பெருந்தன்மையும், உதாரமும் நாளுக்கு நாள் என்னை இவரிடமே வலித்துச் செல்கின்றனவே. இவரைப் பார்த்திடும் போதெல்லாம் என் பிறவியைப் புனிதமாக்கிட அவதரித்த ப்ரத்யக்ஷ தெய்வத்தைக் காண்பது போலவே இருக்கிறதே. நான் இவரிடம் கொண்ட பிரியம் எல்லா வரம்பையும் கடந்து தெய்வ பாவனையாயல்லவோ இப்பொழுது மாறி விட்டது; இன்று காலை இவர் மொழிகளினின்று நானடைந்த கலக்கம் இப்பொழுது இவர் கூறிச் சென்ற மொழிகளாலல்லவோ மாறி விட்டது. காலையிலிருந்து கலக்கங்கொண்டு கனிந்து வாடிய என் சித்தமே! இனித் துயர் நீங்கி ஸுகமாக இரு.

(போகிறாள்.)

(காட்சி முடிகிறது.)

———

அங்கம் 5. களம் 4.

இடம் :—விக்ராந்தனுடைய கூடாரம்.

[விக்ராந்தன் ஆழ்ந்து யோசித்த வண்ணம் அங்குமிங்கு மலைந்தவண்ண மிருக்கிறான்.]

விக்ராந்தன் :—(ஸ்வகதம்). இதென்ன பெரும் ஸங்கடம்! குற்றமற்ற ஒரு குமாரியின் ஹ்ருதயத்தில் அறியாமலே வளர்ந்து வரும்படி விட்டுவிட்ட அத்யந்த ப்ரேமையை எவ்வாறு திடீரென்று வேருடன் களைந்தெறிவது? ஆயினும் கூடியவரையில் கொடூரமின்றி செய்தே தீரவேண்டும். ஈசா! எனக்கேனோ இந்தக் கஷ்டம் வைத்தாய்?......அதோ வந்துவிட்டாள், குற்றமற்ற குழந்தை! மனமே! ஸ்திரமாய் இரு. அலையாதே! கோரமான யுத்தத்திலும் குலையாத என் மனம் இப்பொழுதேன் குலைகிறது? ஐயோ! இதையும் விட இன்னும் இருபது மதாலைகளுடன் மகத்தாய் போராடுவது எளிது.

ம்ருநாளினி :—(பிரவேசித்து) மஹாராஜா! எப்பொழுது வந்தீர்கள்?

விக்ராந்தன் :—இப்பொழுதுதான்.

ம்ருநாளினி :—உடம்பொன்று மில்லையே?

விக்ராந்தன் :—உடம்பினில் உறைந்திடும் உள்ளத்தை உரையாவிடில் உடம்பொன்று மில்லைதான்.

ம்ருநாளினி :—மஹாராஜா! உள்ளத்திற்கென்ன கலக்கம்?

விக்ராந்தன் :—அதை உரைக்கவே உன்னை யழைத்தேன்.

ம்ருநாளினி :—ஆக்ஞையென்ன, மஹாராஜா?

விக்ராந்தன் :—ம்ருநாளினீ! இனி ஸேவ்ய ஸேவக பாவம் நமக்குள் இல்லை.

ம்ருநாளினி :—ஏன்?

விக்ராந்தன் :—சென்ற யுத்தத்தினின்றும் அது மாறிவிட்டது. அதுவரையுங் கூட அவ்வித உறவை நான் கோரிடவில்லை. ஆயினும் நீயே உன் மனதிற்கொண்டு பாவித்து வருகிருய். அதுவும் அன்றுடன் அகன்று விட்டது. இதோ பார்! உட்காரிப்படி. நான் சொல்வதைப் பதருமல் கேள். உனக்கன்றளித்த காணிக்கையால் நான் திருப்தி யடையவில்லை. ஆகையால் இன்னுமொரு காணிக்கை உனக்களித்திடவே உன்னை இங்கு வரவழைத்தேன்......காணிக்கை யென்பதினுல் இனிமையானதென் றெண்ணி விடாதே. அது அமிர்தத்தினும் இனிப்பும், சந்திரனினும் குளிர்ச்சியும், ஸ்வர்க்கத்தினும் பெரிதா யிருந்தபோதிலும் கொடுக்கும்போது அது கொடுப்பவர்க்கும், அடைபவர்க்கும் எல்லையிலாத் தாபத்தைத் தரக்கூடியது.

ம்ருநாளினி :—ஆயின் ஏன் கொடுக்க வேண்டும்?

விக்ராந்தன் :—கொடுத்தே தீரவேண்டும்.

ம்ருநாளினி :—ஆனுல் கொள்ளவேண்டியதே. என்ன அது மஹாராஜா?

விக்ராந்தன் :—ம்ருநாளினீ! என்னிடமோர் பெரிய அந்தக்கரண மிருக்கிறது. அதை உனக்குத் தரப்போகிறேன்.

ம்ருநாளினி :—ஆஹா! உமது பெரிய அந்தக்கரணத்தையா? தேவா! என்ன ஆனந்த வேளையிது!

விக்ராந்தன் :—இரு. ம்ருநாளினீ! சற்று பொறு. நான் என் அந்தக்கரணத்தை உனக்கு கொடுப்பதாய் சொல்லவில்லை. அதைக் கொடுத்திட அது எனக்கு ஸொந்தமில்லை. அது வேருெருவருடையது. அப்படி என்னுடையதா யிருந்தாலும் உனக்களித்திடும்படி அதற்கவ்வளவு யோக்கியதை யில்லை. நான் கொடுக்கப் போவது உனக்கேற்றது. ம்ருநாளினீ! நான் உனக்

களிக்க நினைத்திருக்கும் அந்தக்கரணம் உதார குணமமைந்த ஒருத்தியுடைய விசாலமான திவ்ய அந்தக்கரணம்.

ம்ருநாளினி :—மஹாராஜா! அதை நான் முன்பே அடைந்திருக்கிறேனே. தேவி தேவாங்கனையின் ஆத்மாவே என்னை யடைந்திருப்பதாக நான் கொண்டிருக்க அவள் அந்தக்கரணமு மென்னிடமில்லையா?

விக்ராந்தன் :—அது உன்னிட மிருந்தாலும் நானல்லவோ அதற்குரியவன்?

ம்ருநாளினி :—அப்படியே, ஒப்புக் கொள்கிறேன்.

விக்ராந்தன் :—ம்ருநாளினீ! நானுரைத்தது என் தேவாங்கனையின் அந்தக்கரண மன்று. அதைப் பிறருக்களித்தால் அவளுக்கு த்ரோஹ மிழைத்ததாகும். இது ஒரு ரஹஸ்யம். ஆயின் உனக்குரைக்க ஒரு தடையுமில்லை. இந்தப் பாதகன் விக்ராந்தன் தன்னுடைய அந்தக்கரணத்தில் லவலேசமும் கொடுக்காமல் தேவதா ஸமானமான ஒரு ஸ்திரீயின் திவ்ய அந்தக்கரணத்தை அபகரித்திருக்கிறான்.

ம்ருநாளினி :—மஹாராஜா! இதென்ன இது. தாமும் அவ்வாறு செய்வீரோ?

விக்ராந்தன் :—வாஸ்தவம். என்மீது தவறில்லை. என்றும் நானதைக் கொள்ளை கொள்ளக் கோரவில்லை; ஆயினும் அவ்வாறு நடந்து விட்டது. அதற்கு ப்ராயச்சித்தமாக அந்தத் தூய அந்தக்கரணத்தை உனக்கு அர்ப்பணம் செய்யப் போகிறேன்.

ம்ருநாளினி :—ஆனால் அதை எனக்களித்தால் விச்வாஸ காதக மாகாதா?

விக்ராந்தன் :—அபகரித்த தோஷத்தை அறவே ஆற்றிடும் ப்ராயச்சித்த மாகும்.

ம்ருநாளினி :—தேவியின் அந்தக்கரணத்தை யளித்தால் அது விச்வாஸகாதக மாகுமென்று கூறினீர்களே ?

விக்ராந்தன் :—ஆம். அது ஒருவருடையதை அந்யருக் களிப்பதாகும். ஆனால் இது அவருடைய வஸ்துவை அவருக்கே யளித்தலாகும்.

ம்ருநாளின :—என்ன ? என்ன ? எப்படி ?

விக்ராந்தன் :—ம்ருநாளினீ ! இதுவே அர்த்தம். விக்ராந்த னுடைய ஸம்மதியும், கோரிக்கையு மில்லாமல் அவ னுக்கு ம்ருநாளினி யளித்திட்ட அந்தக்கரணத்தை அவன் ப்ரேமபூர்ணமாய் அவளுக்கே மீண்டு மளிக் கிறான். அவள் விக்ராந்தனுடைய இந்த ப்ரேம காணிக் கையை மனப் பூர்வமா யங்கீகரிக்க வேண்டியது.

ம்ருநாளினி :—ஆஹா ! ஈசா ! கடைசியில் நானடையும் பல னிதுதானா ?

விக்ராந்தன் :—அம்மா ! நானென்ன சொல்வேன் ? உன் பிரகாசமான காதலை ஒளியுடன் விளங்கச் செய்யக் கூடிய வஸ்து என்னிட மில்லையே. ப்ரதியளிக்க சக்தி யற்றவர் பிறருடைய வஸ்துக்களை வாங்கிட என்ன ஸ்வதந்த்ரம் ?

ம்ருநாளினி :—மஹாராஜா ! ப்ரேமையும் ப்ரதி தேடுமோ ?

விக்ராந்தன்:—வாஸ்தவம். நிஜமான காதல் நிரபேக்ஷ முடை யதுதான். ஆயினும் அதற்கு அதேவித காதலை ப்ரதி யளிப்பதே முறைமை.

ம்ருநாளினி :—உங்களுக்கு என்மேல் கொஞ்சமேனும் பிரிய மில்லையா ?

விக்ராந்தன் :—அம்மா ! உன் மேலா எனக்குப் பிரியமில்லை? உன்மே லெனக்கிருக்கும் பிரியம் என்னை ஆயிரம் துண்டுகளாய் வெட்டினாலும் அவைகளை யெல்லாம் ஒருங்கு சேர்த்து புநர்ஜீவிதனாய் உன் பாதமிடை

யென்னைச் சேர்த்திடுமே! ஆனால் நீ எவ்விதமான பிரியத்தை என்னிடமிருந்து அடையப் பார்க்கிறாயோ, அவ்விதமில்லையே.

ம்ருநாளினி :—ஆனால் எனக்கிதுவரையில் வீணாசைபா காட்டினீர்?

விக்ராந்தன் :—ஈசன் ஸாக்ஷி. உன்னை நான் மோசம் செய்பவனல்ல. ஆனால் பல தடவைகள் அவ்வாசையைப் போக்கவேண்டுமென்றும் முயன்றிருக்கிறேன்.

ம்ருநாளினி :—மஹாராஜா! என் காதலால் உங்கள் கீர்த்திக்குக் குறைவு வருமென்று தோன்றுகிறதோ? வாஸ்தவம்!

விக்ராந்தன் :—ம்ருநாளினீ! நானொருகாலும் அப்படி நினைத்திடுபவனல்லேன். உன் காதலின் பெருமையை ஏன் இகழ்கிறாய். அது இவ்வுலகில் மிகவும் துர்லப வஸ்து! அதை யடைபவன் இவ்வுலகிலெல்லாம் சிறந்த பாக்ய சாலியே. ஆனால் அதற்குப் பாத்திரன் நானல்ல. என் உள்ளத்தில் ஸ்திரீ ப்ரேமை யுறைந்திட இடமில்லை. என் தேவாங்கனையுடன் அந்த தெய்வீக விகாரம் விரைந்து சென்றது. நான் இனி ஸந்யாஸம் பெற்று ஈச்வர ஞானம் ஸம்பாதித்திடத் தீர்மானித்திருக்கிறேன். இவ்வுலக மாயையை நான் மறுபடியும் தேடலாகாதென்றே ஈசன் எனக்கிருந்த இரண்டு பந்தனங்களையும் சேதித்துவிட்டனர் போலும். அப்படியிருக்கப் புனர் விவாக பந்தன மொன்றை நான் தேடிக்கொள்வேனோ?

ம்ருநாளினி :—ஆனால் ஸ்திரீகள் புருஷரை அவர்களுடைய உன்னதமான கோரிக்கைகளினின்றும் தப்பச் செய்திடும் பேய்களென்பது உங்கள் அபிப்பிராயமா?

விக்ராந்தன் :—நான் அப்படி நினைப்பவனல்ல. ஆயினும் நான் ஸந்யாஸ தீக்ஷை மேற்கொண்டு எக்காரியத்தைச்

செய்ய உத்தேசித்திருக்கிறேனே அதற்கு மாத்திரம் இடையூறுகிறார்கள் அவர்கள்.

ம்ருநாளினி:—மஹாராஜா! என்னை மன்னிக்க வேண்டும். தூர்லபமான வஸ்துவின்மேல் ஆசை வைத்துவிட்டோமென்று அறிந்தும் நானதற்கு மேலும் மேலும் இடம் கொடுத்தது என் தவறாகும். ஆனால் வெகு நாட்கள் வரையில் அதை நிராசை யென்றே வைத்திருந்தேன். ஆறு மாதங்களாய் உங்களை ஸந்தித்து உங்களுடைய ஸந்தர்சன மடைந்தமையால் என் காதல் அதிகரித்தது. அது பிரதி தினமும் ஓங்கி, காவலை மீறி, வெள்ளமாய்ப் பெருகி என் ஸர்வ ஜீவன வியாபியாய் குடி கொண்டுவிட்டது.....நீங்கள் ஏன் என்னை அவ்வளவு விச்வாஸமாய் பாராட்டினீர்கள்? அதனாலல்லவோ...... ஸரி, இருக்கட்டும். அது என் விதி. உங்கள்மேல் குற்றமில்லை.

விக்ராந்தன்:— ம்ருநாளினி! என் உள்ளத்தில் பெருகும் துக்கப் பிரவாஹத்தின் ப்ரமாணத்தை நீ எவ்வாறு அறிவாய்? நான் மேற்கொண்ட காரியம் நற்கீர்த்தியுடன் நடைபெற வேண்டுமென்று நாளும் நிலவும் நலமுடன் கோரியவளும், தான் ஸ்திரீ யென்றும் பாராமல் தரித்திரனென்னுடன் யுத்தகளத்தில் தளகர்த்தரும் கண்டு திகைத்தோடும் தூர்தர பிரஸங்கங்களை, தைர்யத்துடன் தாக்கினவளும், கணக்கிலா ஸமயங்களில் போரிடும் வேளையில் பாவியேன் மீதெரி பாணங்களையும் தன் பாவன சரீரத்தில் தாங்கி என்னைப் பாதுகாத்தவளும், ஸர்வ மங்கள ஸாத்விக தேவதையுமான லக்ஷ்மீகர வனிதையின் உள்ளத்திற்கு ஆயாஸம் கொடுத்திடவும் ஆயதே யென்று என் மனதில் பொங்கித் ததும்பும் வியாகுலத்தின் வெள்ளத்தை நீ எவ்வாறறிவாய்? இருக்கட்டும்! வரண்டுபோன என் மனதில் சற்றேனும் ஸ்திரீ ப்ரேமை தங்கிடா திருக்க, உன்னை ஏமாற்றங்

காட்டி பத்னியைப்போல் பாவித்திட நான் வல்லேன்.

ம்ருநாளினி :—ஆனால், மஹாராஜா! என்னை அங்கீகரித்த பின் என் ஸஹவாஸத்தினால் அந்த ப்ரேமை உமது மனதில் உதிக்காதா ?

விக்ராந்தன் :—அது ஒரு நாளுமில்லை. கவிகளும் போற்றிடும் பதிபத்னி பாவமான ப்ரேமை எனக்கிப்பொழுது வெறுப்பாகவே தோன்றுகிறது. என் தேவாங்கனையை நினைக்கும்போது கூட இப்பொழுது ஸகோதரியைப் போல் தோற்றுகிறது—ஈசன் மேலாணை கேள்........

ம்ருநாளினி :— வேண்டாம். வேண்டாம். மஹாராஜா! நீங்கள் உரைக்கப் போவதைக் கேட்க எனக்குப் பொறுக்காது. நான் போகிறேன். என் தலை சுற்றுகிறது.

விக்ராந்தன் :—போ! போ!! போ!!! உதாரப் பெண்ணே! உன் போலவே எனக்கும் தலை சுற்றுகிறது. ஒரு க்ஷணமாவது என் கண்ணெதிர்ப்படாது மறைந்திரு. உன் கண்களிலிருந்து பெருகும் புண்ய நதி என்னையே புரட்டிக்கொண்டு போய்விடும் போலிருக்கிறது. ம்ருநாளினி! போ! சிறிது நேரம் நிஜமாகவே என்னை விட்டுப் போ! இந்த செய்ந் நன்றி கொன்ற சண்டாளனுடைய ஸஹவாஸம் உனக்கு வேண்டாம். போ! இந்தக் கொலைகாரன் உன் உடலிலிருக்கும் நுட்பமான உயிரையும் கொன்றுவிடுவான். தயையற்ற துஷ்டனருகில் தனித்திராதே. போ! லக்ஷ லக்ஷமாய் உயிர்களை மாய்த்து லவலேசமும் இரங்கிடாத கல் நெஞ்சம் பக்ஷம் பொழிந்திடும் உன் லக்ஷண முகத்தைக் கண்டா கனியப்போகிறது? போ. நான் கொலைப்பாதகன், அமுதளித்தவரை யழித்திடும் அரவம்! அம்மா! அணுகாதே. போ!......வேண்டாம்! வேண்டாம்!! அந்த

நிஷ்கபட நீலோத்பலக் கண்களால் அப்படி யென்னைப் பாராதே....ஈசா! என்னை ஏன் இப்படி வாட்டுகிறாய்!

ம்ருநாளினி :—(ஓடிவந்து அவனைக் கட்டிக்கொண்டு) மஹாராஜா! மஹாராஜா!! தயை புரியுங்கள்! என்னைத் தள்ளாதீர்கள்.

விக்ராந்தன் :—வேண்டாம், ம்ருநாளினி! விடு (விடுவித்துக் கொண்டு). இதுவரையில் நான் உன் தந்தையைப்போ லிருந்தேன். உன் ஸகோதரனைப்போல் நடந்து வந்தேன். ஆனால் இன்று உனக்கிருக்கும் ஸங்கடத்தைத் தீர்க்க சக்தியற்றிருக்கிறேன். உன் கண்களிலிருந்து பெருகும் கண்ணீரை நிறுத்தத் திறமில்லை. வெடித்து விடும்போ லிருக்கும் உன் ஹ்ருதயத்தைத் தேற்ற எனக்கு வழி தெரியவில்லை. அம்மா! என்னருமை புத்ரீ!! போ. என்னைவிட்டு சற்றே.

ம்ருநாளினி:—மஹாராஜா! நானெங்கே போவது?

விக்ராந்தன் :—உன் மனம் போனவிடம் செல்; என் கண் முன் இராதே! போ—இல்லை, இரு. துயரத்தால் துடித்திடும் நீ யெங்கு போவாய்? உன் துக்கத்தை யாரிடம் சொல்லிக்கொள்வாய்? உனக்கு பிரிய மொழி களால் யார் தேறுதல் சொல்வார்கள்? வேண்டாம்! வேண்டாம்! வா! வந்து விடு என் குழந்தை ம்ருநாளினி! இதுவரையில் இந்த விக்ராந்தன், உன் ஆயுளந்தம் வரை ஆப்தன், உன் அருமை அண்ணன், உன் பிரியம் வாய்ந்த பிதா, உனக்கு ஸங்கடம் வந்த எவ்வேளை யிலும் உதவியிருக்கிறான். அவனா உன்னை இந்த ஸ்திதி யில் விட்டுவிடுவான்? அவன் அந்தக் கரணத்தில் ஸ்திரீப்ரேமை தங்கிடாமற் போனாலும், ஈரமற்றுப் போகவில்லை. இதுவரையில் அவனுடைய உதாரஹஸ்தம் உதவி வேண்டுவோரை உபேக்ஷித்ததில்லையே. அது இன்று அவனாலேயே துன்பமுற்றுத் தவித்திடும் உனக்கு உதவாமற் பின் வாங்கும்? வா! வா! என்

புண்ய புத்திரியே! உன்னை என் ஆசைதீர அணைக்கிறேன். உன் கண்ணீரைத் துடைக்கிறேன். காதலன் முறையில் கடுவிஷமாயினும் இந்த விக்ராந்தன் தந்தை முறையில் உன்னைத் தழுவிடுவான். வா அருகில்.

(ம்ருநாளினியை ஆலிங்கனம் செய்துகொள்ளப் போகிறான்.)

ம்ருநாளினி :—(பின் வாங்கி) இல்லை! வேண்டாம்!! நாதனைப் நான் கருதி நாள் தோறும் தொழுதிட்ட மூர்த்தியை நூதன முறையினில் தீண்டிட என் கைகள் ஸம்மதியா. என்னருகில் வரவேண்டாம். பிதுர் பாவம் நிரம்பிய உமது கைகளால் என்னைத் தொடவேண்டாம். நானெங்காவது சென்று என் ஆயுளைத் தொலைக்கிறேன். என் துக்கத்தை யென்னிடமே சொல்லிக் கொண்டு எனக்கு நானே தேறுதல் சொல்லிக் கொள்கிறேன். நான் போகிறேன். எனக்கு உங்களுடைய சப்தம், உங்களுடைய ஸ்பர்சம், உங்களுடைய ஸக வாஸம் இவ்வேளையில் அருவருப்பாயிருக்கிறது.

விக்ராந்தன் :—வாஸ்தவம் தான்! கடுவிஷத்தைக் கக்கிடும் கால ஸர்ப்பத்தின் ஸஹவாசத்தை யார் கோருவார்கள்? ஜ்வாலை விட்டு பற்றி யெறியும் ப்ரளயாக்னியை யார் போய் ப்ரீதியுடன் ஸ்பர்சிப்பார்கள்? பிராணஹரண பயங்கர பாசத்தைப் பாணியிற் தாங்கிடும் பாப ரூப ம்ருத்யுவை யார் போய் பரிந்தணைத்திடுவார்கள்? போ! ம்ருநாளினி! இனி என்னையும்விட உன் மனமே உனக்கு உற்றதுணை. இதுவரையில் உனக்கு பரம ஆப்தனான விக்ராந்தன் இப்பொழுது உன் கண்களில் கடுவைரியாய் தோன்றிடலாம். ஆயினும் உன் க்ஷமா திருஷ்டியை முழுதும் அவனிடமிருந்து அகற்றி விடாதே. உனக்கிழைத்த துன்பங்களுக்காக அவனை மனமாரச் சபித்திடு. ஆனால் அந்தப் பாபி உன்னைக் கபட வேஷம் போட்டு ஏமாற்றி மோசம் செய்திடவில்லை யென்பதை மாத்திரம் மறவாதே. நீ இனி என்ன

வெறுத்தாலும், என்ன உதாசீனம் செய்தாலும் இந்த விக்ராந்தன் மாத்திரம் உன்னை யென்றும் தன் ஜன்மத்தையே ஈடேற்ற ஜனித்திட்ட ஜாஜ்வல்ய தேவதை யென்று ஸதா பூஜித்திடுவான். நீ எங்கு சென்ற போதிலும் உன்னுடைய வைராக்ய ஸம்பன்ன பவித்ர மூர்த்தி அவனுடைய ஹ்ருதயத்தில் ஸதா உறைந்திடும்.—போ! அம்மா! போ! உன் கஷ்டத்தைப் பார்க்கவும் ஸஹிக்க வில்லை.

ம்ருநாளினி :—மஹாராஜா! என்னுடைய உன்னதமான ப்ரேமையின் உயிரைழியும் காலமும் வந்துவிட்டதா? —தேவனே! நான் ஏன் இன்னும் உயிருடனிருக்கிறேன்?

(தேம்பித் தேம்பி அழுதுகொண்டே போகிறாள்.)

விக்ராந்தன் :— (ஸ்வகதம்) போய்விட்டாள்! ஔதார்ய ஸௌந்தர்ய தேவதை! இந்த விக்ராந்தனுடைய நீச ஜன்மத்தையே சபித்துச் சென்றுவிட்டாள்......ஐயோ! அந்தக் குற்றமற்ற குழந்தையின் குவலய ஸுகமெல்லாம் குன்றியே விட்டதே. அவள் முகவிலாஸமெல்லாம் எங்கோ போயிற்றே. எல்லாம் துறந்தனளே ஏதுமறியா மாது........விக்ராந்தா! விக்ராந்தா!! எப்படி நீ இம்மாதிரி அதம சண்டாளனானாய்? உன் உதாரமனத்தையும் எவ்வாறு துறந்தாய்? உன் தயை எங்கு போயிற்று? உன் ஹ்ருதயம் எவ்வாறு கல்லாய் விட்டது? உலகெங்கும் உலாவிடும் உக்ர தேவதைகளே! இந்தச் சண்டாளனை உடனே கண்டித்துக் கிழித்துக் கொன்றுவிடுங்கள். ஏ! விச்வாசகாதகா! கொலை புரி பாதகா! நீ மூட்டியிருக்கும் பெருந் தீயில் நீயே விழுந்து நீறுகி விடு.

(மூர்ச்சித்து விழுகிறான்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 5. களம் 5.

இடம்:—யுத்தகளத்தில் ம்ருநாளினிபின் விடுதியைச்சார்ந்த ஒரு கூடாரம்.

[விக்ராந்தனுடைய தளகர்த்தர் மதாலஸையை யழைத்து வந்து ஆஸனமளித்து உட்கார வைத்துப் போகிருர்கள்.]

மதாலஸை:—(தளகர்த்தர் போனதும் ஸ்வகதம்) இன்று தான் என் கடைசி ப்ரயத்தனம். இன்று விக்ராந்தன் என்னை அணைக்கவாவது வேண்டும்; அல்லது என்னால் அழியவாவது வேண்டும். (மார்பிலிருந்து கட்டாரியை எடுத்து) ஏ கட்டாரியே! ஸமயத்தில் என்னை மோசம் செய்யாதே. அனேகமாய் உன்னை உபயோகிக்க வேண்டியிராது. என் போன்ற லோகோத்தர ஸௌந்தர்யம் வாய்ந்த வனிதையின் கண்களுடைய கூர்மை உன்னினும் ஆயிரமடங்கு அதிகம். என் ஸௌந்தர்யமும், சாதுர்யமும் ஸாதிக்க முடியாமல், உன் உதவியைத் தேடவேண்டி யிராது... இருமுறை இந்த ப்ரேமரங்கத்தில் விக்ராந்தன் என்னைத் தோற்கடித்திருக்கிருன். இன்று கடைசிமுறை பார்த்து விடுகிறேன். ஆ! அதோ வருகிருன்.

(கட்டாரியை மறைத்துக் கொள்கிருள்.)

(விக்ராந்தன் பிரவேசம்.)

விக்ராந்தன்:—மதாலஸே! உனக்கென்னிடம் என்ன காரியம்?

மதாலஸை:—விக்ராந்தா! நானனுப்பிய பிரதிநிதிக்குப் பேட்டியும் கொடுக்கலாகாதா?

விக்ராந்தன்:—உன்னையே பார்த்திட வெகுதூரம் தயங்கியே, பிறகு வந்தேன்.

மதாலஸை:—ஆனல் நாமிருவரும் என்றும் விரோதிகள் தானு?

விக்ராந்தன் :—ஆம். அதுவே என் எண்ணம்.

மதாலஸை :—காரணம்?

விக்ராந்தன் :—நமக்குள் விரோதமின்றி வேறென்ன இருக்கக்கூடும்?

மதாலஸை :—ஏன்?

விக்ராந்தன் :—ஏன? ஸ்நேகங் கொண்டிட நீ செய்ததுதானென்ன? உன் பாதகங்களைக் கேட்டுப் பார்.

மதாலஸை :—என் ஸர்வ பாதகங்களையும் நான் நீத்திடுவதாயிருந்தால்?

விக்ராந்தன் :—கொலையையும், கொடூரத்தையும், கோலமெனக் கருதுபவள், எப்படி அவைகளை நீத்திடுவது? உன்னை நான் நன்ரு யறிவேன். என்னை ஏமாற்ற முடியாது.

மதாலஸை :—இல்லை, இல்லை. வாஸ்தவமாகவே பாபங்களுக்குப் பிராயசித்தம் செய்துகொள்ள எனக்கு ஆவலாயிருக்கிறது.

விக்ராந்தன் :—நீ ரக்தமயமாய் ஏற்படுத்தியுள்ள ராஜ்ய பாரம் மண்ணுடன் மண்ணாய்ப் போனலன்றி உன் பாபங்களுக்குப் பிராயசித்தம் வேறில்லை.

மதாலஸை :—விக்ராந்தா! இதோ இந்த திவ்ய மகுடத்தை சிரமீதணிந்து என்னையும் உன் ஸஹதர்மசாரிணியாயேற்று நீயேன் ஏக சக்ராதிபதியாய் விளங்கிடலாகாது?

விக்ராந்தன் :—உன் போன்ற பேயை ஸஹதர்மசாரிணியாய் ஏற்றுக் கொள்வதா? வெகு அழகு?

மதாலஸை :—உன் போன்ற உஜ்வலமான வீரனுடன் உறைந்திட என் மனம் ஏங்குகிறதே.

விக்ராந்தன் :—என் வீரம் உனக்கென்றும் துணையாகாது.

மதாலஸை :—விக்ராந்தா ! உன்மேல் தன் உயிரை யெல்லாம் காட்டிய ஓர் அபலைக்குக் கூட அது உற்ற துணையாகாதா ?

விக்ராந்தன் :—ஆகவுமில்லை....நீ அவ்வாறு அபலையுமில்லை... அரணையின் வயிற்றில் அமுதமா நிற்கும் ?

மதாலஸை :—விக்ராந்தா! என்னை நீ ஸரியா யறிந்துகொள்ளவில்லை....இதோ பார்! காதல் நிறைந்த இந்த தேகத்தில் காந்தியும் அழகும் கரையின்றி இருக்கின்றன.

விக்ராந்தன் :—ஈசனுனக்கு இணையிலா யெழிலைக் கொடுத்திருப்பது வாஸ்தவம். துஷ்ட விகாரங்கள் நிறைந்துள்ள ரௌரவக்குழியை இந்த லோகோத்தர ஸௌந்தர்யம் வாய்ந்த மூடியினல் ஏன் மூடினரோ ஈசன் தெரியவில்லை....பூபாரம் போக்கிடவோ என்னமோ?.... ....சரி, அதிருக்கட்டும். உன் அழகைப் பற்றிப் பேச இங்கு நான் வரவில்லை.

மதாலஸை :—ஏன் ? அதைப்பற்றித் தான் கொஞ்சம் பேசுவோமே.

விக்ராந்தன் :—ஸரி. வேறு வேலை யில்லாவிடில் விடை பெற்றுக் கொள்.

(போக யத்தனிக்கிறுன்.)

மதாலஸை :—(தடுத்து) இல்லை, விக்ராந்தா! நில். இளமையுடன் விளங்கிடும் இந்திரபோக ஸ்த்ரீயை இகழ்ந்து ஏகிடாதே. என்னருகில் வா. என் வளமை கொண்ட வக்ஷஸ்தலத்தில் உன் சிரத்தை சாய்த்து சிந்தனை விடுத்திடுவாய். உலகினை வென்ற உன் கைகளால் நலமுடன் என் கண்டத்தைக் கட்டி என் கனிவாய் அதரத்தைப் பருகிடுவா. என்னுடன் சிருங்கார லீலைகளை..........”

(அருகில் போகிறுள்.)

விக்ராந்தன் :—சி! எட்டி நில்! முன்னெரு நாள் கடு விஷங் கக்கிடும் கால ஸர்ப்பம் சுற்றி யிருந்த மரக்கிளை மீது

அறியாது தலை சாய்த்து இரவெல்லாம் கழித்திருக்கிறேன். மறுபடியும் அந்த அநுபவம் ஸம்பவித்தாலும் அதையே நாடுவேனே யொழிய, உன் விஷம் நிறைந்த மார்பில் என் தலை சாய்த்தாவது, உன் விஷம் பொழி அதரத்தைப் பருகிடவாவது உன் விஷமயமான சரீரத்தைத் தீண்டவாவது கனவிலும் கருதேன்.

மதாலஸை:—(பின்புறமிருந்து திடீரென்று அவன் கழுத்தை யணைத்துக் கொண்டு) இந்த பாசங்களினின்றும் நீ எவ்வாறு தப்புகிறுயோ பார்ப்போம்.

(விக்ராந்தன் கன்னத்தை முத்தமிடுகிறுள்.)

விக்ராந்தன்:—(திமிரிக்கொண்டு) ஆஹா! அப்படியா சமாசாரம்?

மதாலஸை:—விக்ராந்தா! வேண்டாம்! என்னைத் தள்ளாதே. நான் எளிதில் கிடைப்பவளல்ல.

(மறுபடியும் அருகில் போகிறுள்.)

விக்ராந்தன்:—(பின் செல்லுகிறுன்)

மதாலஸை:—விக்ராந்தா! விக்ராந்தா!! ஐயோ! நில்! நில்!!

(காம விகாரம் நிரம்பிய முகத்துடன் அருகில் போகிறுள்.)

விக்ராந்தன்:—போதும்! போ வெளியே! மரியாதை மீறிவிட்டது. போகிறுயா, பிடித்துத் தள்ளச் சொல்லவா?

மதாலஸை:—நல்லது, விக்ராந்தா! நீ என்னை ஜயித்துவிட்டதாக நினைக்காதே!

விக்ராந்தன்:—சீ! அற்பப் பெண்ணே! உன்னிடம் ஒரு வேளை யுத்த முனையில் தோற்றுலும் தோற்றுவிடுவேன். இவ்விதமான யத்னங்களுக்கு மாத்திரம் ஒரு நாளும் உட்படேன். கெட்டியாய் நம்பு.

மதாலஸை:—உன்னை உயிருடன் விட்டாலன்றோ?

(கட்டாரியை எடுத்து விக்ராந்தனை குத்தப்போகும் ஸமயத்தில் மருநாளினி திடீரென்று தோன்றி அவள் கையைப் பிடித்துக்கொள்கிறுள்.)

விக்ராந்தன் :— (மதாலஸையின் கையைப் பிடித்துக் கொண்டு) மதாலஸே! அத்து மிஞ்சிவிட்டது. ஆயினும் போ! உன்னை உயிருடன் விட்டு விடுகிறேன். உன்னை உயிருடன் விடுவது நான் மேற்கொண்ட பெரும் ராஜ்ய காரியங்களுக் கெல்லாம் விக்னமே. ஆனால் உன்னை இப்பொழுது சிறையில் வைத்தால் உலகம் என்னை இகழும். நேராக வெல்ல முடியாமல் கபடமாய் உன்னை கைதி யாக்கினே னென்பார்கள். அதனால் என் காரியத்திற்கே பெரும் ஹானி வரும். போ! உன்னை மன்னித்தேன். ஸூர்ய குலத்தி லுதித்து, விக்ரமாதித்ய மஹாராஜாவினுடன் பிறந்து, என் பிரிய மித்திரன் சசாங்க ராஜனை மணந்த உன்னை இந்த ஸந்தர்ப்பத்திலும் வேறு விதமாய் நடத்திட எனக்கிஷ்டமில்லை. பிழைத்து ஓடிப்போ! இந்த விக்ராந்தனை வெல்வதென்னும் பேரெண்ணத்தை இனி விட்டு விடு. போ வெளியே!

(மணி யடிக்கிறான்.)

ஸேவகா! அழைத்துப் போய் வெளியே விட்டுவிடு இவளை!

(ஸேவகனுடன் மதாலஸை கோபம் கொதித்தெழப் போகிறாள்.)

ம்ருநாளினி! இந்த பேருபகாரத்திற்காக உனக்கு என்னால் கைம்மாறளிக்க முடியாது.

ம்ருநாளினி:—புத்திரி செய்யும் கடமைக் கெல்லாம் பிதா கைம்மாறளித்திடுவது நியாயமா?

விக்ராந்தன்:—என்ன? என்ன? நான் கேட்பதென்ன? ம்ருநாளினீ! இன்னொரு முறை சொல்.

ம்ருநாளினி:—மஹாராஜா! தமது இச்சைப்படி, தமது ஆக்ஞைப்படி, இந்த ம்ருநாளினி இது முதல் தமது மகளாய் விட்டாள்.

விக்ராந்தன் :—என் மகள் ம்ருநாளினி! என் கண்மணி மகள் ம்ருநாளினி!! என் செவி செய்த புண்ணியம்

தானு இது! என்ன மங்கள சப்தம்! ம்ருநாளினீ! புத்ரீ!! வா! வா! என்னருகில் வா!! இப்பொழு தாவது என்னை, உன் தந்தையை, உன்னைப் பெருத இந்தப் பிதாவைக் கட்டி யணைத்திடு.

ம்ருநாளினி:—என் தந்தையே! என் தந்தையே!! ஆம் இன்று முதல் நீங்கள் என் தந்தையே.......அண்ணு! இந்த புத்தியில்லாத புத்ரியை அங்கீகரித்து காத்திடு மினி.

(இருவரும் கட்டியணைத்துக் கொள்ளுகிருர்கள். விக்ராந்தன் ம்ருநாளினியை உச்சிமோந்து ஆநந்த பாஷ்பம் விடுகிருன்.)

விக்ராந்தன்:—என்னருந் தவப் புதல்வி! ஈசன் உன்னை ரக்ஷிப்பாராக.

(காட்சி முடிகிறது.)

அங்கம் 6. களம் 1.

இடம்:—கூர்மதுர்க்கத்தில் ஸரோஜினியின் அரண் மனையில் ஓர் படுக்கையறை.

(ஓர் கட்டிலின் மேல் சந்திரசேகரன் அயர்ந்து நித்திரை செய்கிருன். கதவண்டை ஓர் போர்வீரன் காவலிருக் கிருன். அந்த அறையின் ஓர் மூலையிலிருந்து மாறு வேஷம் பூண்ட துர்ஜயன் ரஹஸ்யமாய் வெளி வரு கிருன்.)

துர்ஜயன்:—வெகுநாளாய் ரஹஸ்ய சுரங்கத்தில் ஒளிந்திருந் தது என்ன கஷ்டமாயிருந்தது! சந்திரசேகரனையும், ஸரோஜினியையும் கொன்றுவிட்டு வருவதாக மதா லஸைக்கு உறுதியாய்ச் சொல்லிவிட்டேன். இந்த முறை காரியத்தை முடிக்காமற் போனல் தவருமல் என்னைக் கொன்றுவிடுவாள். நல்லவேளை சந்திரசேக

ரன் வகையாய் அகப்பட்டுக் கொண்டான் இப்பொழுது. ஸரோஜினியை இன்னொருவேளை பார்த்துக் கொள்வோம். இனி தாமதிக்கலாகாது.

(தன் இடுப்பிலிருந்து கட்டாரியை உருவி சந்திரசேகரனிடம் சென்று ஓங்குகிறான். இதற்குள் போர் வீரன் உரத்துக் கத்திக்கொண்டு ஓடி வருகிறான். துர்ஜயன் சந்திரசேகரனை மார்பில் குத்திவிட்டு ஓடப்பார்க்கிறான். போர் வீரனும் துர்ஜயனும் சண்டையிடுகிறார்கள். போர்வீரன் அடிக்கடி கூக்குரலிடுகிறான். துர்ஜயன் அவனையும் கொன்று ஓடப்பார்க்கும் ஸமயத்தில் மற்ற வீரர்கள் வந்து பிடித்துக்கொள்ளுகிறார்கள்.)

துர்ஜயன் :—பிடித்துக் கொள்ளுங்கள்! நன்றாய்ப் பிடித்துக் கொள்ளுங்கள்! என் காரியம் முடிந்துவிட்டது. மதாலஸை மஹாராணியின் வைரி இறந்தான். அவள ஸிம்மாஸனம் ஸ்திரமாய்விட்டது.

(பரபரப்புடன் ஸரோஜினி பிரவேசிக்கிறாள்.)

ஸரோஜினி :—சந்திரசேகர மஹாராஜா கொலையுண்டாரா?

துர்ஜயன் :—ஆம். இப்பொழுதுதான், இந்தக் கையினால் அந்த சிறந்த கார்யத்தை முடித்தேன்.

(ஸரோஜினி கட்டிலினருகில் போய் பார்த்து பயந்து ஓராஸனத்தில் சாய்கிறாள். திடீரென்று விஜயஸேனன் அநேக ஸர்தார்களுடன் பிரவேசிக்கிறான்.)

விஜயஸேனன் :—யுத்த மண்டலியாரே! கேட்டீர்களா இவன் உரைத்ததை! அம்மா, மஹாராணீ! துயரப்பட வேண்டாம். உங்கள் ஸத்கீர்த்திக்கு ஒரு குறைவுமில்லை.

துர்ஜயன் :—ஏன் வீணாய்ப் பேசுகிறாய்? அதோ அந்த கட்டிலின்மேல் கிடப்பதைப் பார்த்துவிட்டு உன் ராணியின் கீர்த்தியை மெச்சிக்கொள்.

விஜயஸேனன் :—பரமேச்வரன் பரிவுடன் பாதுகாத்திடும் பாலகனுக்கு, பாதகா! நீ என்ன ஹானி விளைவிக்க முடியும்?

துர்ஜயன் :—பரமேச்வரன் கைலாசத்தில் இப்பொழுது தூங்கிக் கொண்டிருப்பார். அந்தக் கட்டிலின்மேல் பார்த்துவிட்டு பிறகு உங்கள் பரமேச்வரனுக்கு பரிசளியுங்கள்.

விஜயஸேனன்:—ஆனால் பரமேச்வரனுடைய பரமானந்த லீலையைப் பார்.

(விஜயஸேனன் ஓர் விசையை முடுக்க ஒருபுறம் சுவர் முழுவதும் ஒதுங்குகிறது. சுவருக்கப்புறம் சந்திரசேகரன் மஞ்சத்தின்மேல் ஸுகமாய் நித்திரை புரிகிறான். தலைமாட்டில் கந்தனன் கண்கொட்டாது உருவிய கத்தியுடன் காத்திருக்கிறான். நான்கு பக்கங்களிலும் நான்கு போர் வீரர் உருவிய கத்திகளுடன் காவல் புரிகின்றனர்.)

ஸரோஜினி:—ஆஹா! என்ன? சந்திரசேகரன் உயிருடனிருக்கின்றானா?

விஜயஸேனன்:—ஆம், அம்மணி! அவருடைய உயிருக்கு ஒரு தீங்கும் ஸம்பவிக்கவில்லை.

ஸரோஜினி:—அப்படியா?

(சந்திரசேகரனருகில் ஓடுகிறாள். அவன் விழித்துக்கொள்கிறான். யாவரும் வெளியே வருகிறார்கள்.)

துர்ஜயன் :—என்னயிது? சந்திரசேகரன் இறக்கவில்லையா? ஆனால் நான் கொன்றது யாரை?

விஜயஸேனன்:—சந்திரசேகரனை.

துர்ஜயன் :—என்ன? இரண்டாவது சந்திரசேகரன் யார்?

விஜயஸேனன்:—ஒன்று சந்திரசேகர மஹாராஜா. இரண்டாவது அப்பெயர் பூண்ட மெழுகு பொம்மை.

துர்ஜயன்:—மெழுகு பொம்மையா?

விஜயஸேனன்:—ஆம். மெழுகு பொம்மை. நான் ஸகலமும் அறிந்தே இந்த ஏற்பாடுகளை மஹாராணிக்கும் தெரியாமல் செய்து வைத்தேன்.

(கட்டிலிலிருந்து பொம்மையை யெடுத்துக் காண்பிக்கிறான்.)

[ஸரோஜினி, சந்திரசேகரன், கந்தனன் முதலிய வர்கள் முன் வருகிறார்கள்.]

கந்தனன் :— (கோபத்துடன்) அடே அதம சண்டாள த்ரோஹீ! நீ யாரடா?

துர்ஜயன்:—நான் சொல்லமாட்டேன்.

கந்தனன் :— சொல்லமாட்டாயா?

(பளீரென்று அடிக்கிறான்.)

விஜயஸேனன்:—இருங்கள்!

(துர்ஜயனுடைய முகமூடியைப் பிடுங்கி எறிகிறான்.)

எல்லோரும்:—ஹா! ராஜா துர்ஜயன்!!

ஸரோஜினி :—ஐயோ! நான் காண்பதென்ன? ஈசா! இது வும் உன் பரீக்ஷையா?

(மூர்ச்சை யடைகிறாள். விஜயஸேனன் முதலியவர்கள் ஆச் வாஸப்படுத்த மூர்ச்சை தெளிந்து உட்காருகிறாள்.)

விஜயஸேனன் :—மஹாராணீ! இவ் விஷயத்தில் கொஞ்ச மும் காலஹரணம் செய்யாமல் யுத்த மண்டலியாரு டன் ஆலோசித்து இந்தக் கைதிக்குத் தக்க தண்டனை விதிக்க வேண்டி யிருக்கிறது. யுத்த மண்டலியாரும் இதோ வந்திருக்கின்றனர்.

ஸரோஜினி:—ஸர்தார் மஹா ஜனங்களே! இதோ நிற் கும்........கைதி....செய்துள்ள காரியங்கள் உங்களுக்குத் தெரியும். அவைகளுக்காக தகுந்த தண்டனை விதித் திட வேண்டியது என் கடமையா யிருக்கிறது. இந்தக் குற்றங்களுக்கு சாஸ்திரங்களில் என்ன தண்டனை விதித்திருக்கிறது?

முதல் ஸர்தார்:—மஹாராணீ! இந்த குற்றங்களுக்கு ஏற்ற தண்டனை ஒன்றே விதித்திருக்கிறது. அது "தேஹாந்த சாஸனம்."

இரண்டாவது ஸர்தார்:—இம்மாதிரி யுத்த ஸந்தர்ப்பத்தில் அதுவன்றி வேறொரு தண்டனை விதிப்பதும் ஸரியன்று!

மூன்றாவது ஸர்தார்:—அபராதத்தின் பயங்கர ஸ்வரூபத்தையும், அபராதியின் அந்தஸ்தையும் பூர்வீக சரித்திரத்தையும் அநுஸரித்து அந்த தண்டனையே விதித்திட வேண்டுமென்பது எங்கள் வணக்கமான பிரார்த்தனை.

ஸரோஜினி:—சாஸ்திரங்கள் விதித்திடும் சாஸனத்தை மாற்றிட ஸாமான்யக் காரணங்கள் செல்லா. இவ் விஷயத்தில் சாஸ்திரங்களின் விதியை மாற்றிட என்ன காரணங்கள் இருக்கின்றன?

துர்ஜயன்:—ஏனில்லை? சாஸ்திரங்களை யநுஸரித்தால் ராணிக்கு பதிஹத்தி சேருமே?

ஸரோஜினி:—இந்த விஷயத்தில் ஒரு ஸ்திரீ தன் புருஷனை ஹதம் செய்வதன்று. ஆனால் நியாய பரிபாலனம் செய்ய வேண்டிய ஓர் இராணி, பயங்கரமான குற்றத்தை செய்த ஓர் கைதிக்கு சிக்ஷை விதித்திடுவது. இதை கைதி நன்றாயறியட்டும்.

துர்ஜயன்:—அதென்னமோ, ஸரோஜினீ! என்னை நீ எப்படியும் உயிர்தப்ப வைக்க வேண்டியது.

ஸரோஜினி:—கைதி இன்னும் ஏதாவது சொல்லிக்கொள்வதானால் சொல்லலாம்.

துர்ஜயன்:—ஸரோஜினி! எனக்காக இல்லாவிடினும் உன் வயிற்றிலிருக்கும் என் சிசுவிற்காவது என்னை மன்னிக்க வேண்டும்.

ஸரோஜினி:—அந்த சிசுவே இப்பொழுது என்னெதிர் நின்று வேண்டிய போதிலும் நான் நியாயத்தை செய்தே தீரவேண்டும்.

துர்ஜயன்:—ஆனால் தன் பிதாவைக் கொன்ற பாபியென்று உன்னை தன் ஆயுள் முழுமையும் அந்த சிசு சபித்திடும்.

ஸரோஜினி:—போதும்! என் வயிற்றில் உதிக்கும் புத்திரன் தன் தந்தை இழைத்த அக்ருத்யங்களைக் கேட்ட பின் இட்ட தண்டனை ஹிதமானதென்று ஒப்புக்கொள்ளும் ஞானவானுயிருப்பான். அப்படியொருவேளை உமது குணங்கள் அவனிடம் குடிகொண்டு என்னை நிந்தித்தால் அவன் மொழிகளுக்கும் இதோ உமது மொழிகளுக்கு அளித்திடும் கௌரவத்தையே யளிப்பேன்.

துர்ஜயன் :—ஸரோஜினீ! உன்னுடைய ஹ்ருதயம் மிகவும் மிருதுவாயிற்றே. ஏன் இப்பொழுது கல்லாய் விட்டது? உன் க்ரூரம் ஸ்திரீ ஜாதியின் பேருக்கே களங்கம் கொண்டு வருமே!

ஸரோஜினி :—ஸரி! ஏன் வீண் வார்த்தைகள்? உம்முடைய வாக்கிற்கு ம்ருத்யுவை வென்றிடும் மஹத்வம் கிடையாது—மஹா ஜனங்களே....இந்த கைதிக்கு சாஸ்திரங்களை யனுஸரித்து...."தேஹாந்த சாஸனம்" என்னும் தண்டனையையே விதித்தோம்...கொண்டு போய் தூக்கிலிட்டு முடித்து விடுங்கள்.

துர்ஜயன்:—(நிமிரிக்கொண்டு) ஸரோஜினீ! ஸரோஜினீ!! எனக்கு பிராணதானம் கொடு. (அவள் காலைப் பிடிக்கிருன்.) என் இளம் வயதில் கொல்லாதே!

ஸரோஜினி :—உயிரை இழக்கும் போதாவது உத்தமனுயிருமே!

(உதறிக்கொண்டு போகிருள்.)

துர்ஜயன் :—ஐயோ! ஐயோ! ஸரோஜினீ!! ஸரோஜினீ!! ஐயோ! போய்விட்டாளே!

விஜயஸேனன் :—போதுமய்யா! நிறுத்தும்! அடே வீரர்களே! பிடித்துப் போங்கள் இவனை தண்டனைக்கு.

(வீரர்கள் வந்து பிடித்துக்கொள்ளுகிருர்கள்.)

துர்ஜயன்:—வேண்டாம்! வேண்டாம்! உங்களுக்காவது தயவில்லையா? என் அன்னத்தைத் தின்று என்னையே

கொல்லலாமா? யஜமான த்ரோகம் செய்யாதீர்கள். என்னை மாத்திரம் விட்டுவிடுங்கள். உங்களுக்கு புண்ய முண்டு. உங்கள் காலில் விழுந்து கேட்டுக்கொள்கி றேன்.

(எல்லோர் காலிலும் விழுகிருன்.)

ஓர் ஸேவகன் :—ஐயா, ஏனிப்படி ஸாஹஸம் செய்கிறீர்? இதை யெல்லாம் முன்பே நினைத்திருக்க வேண்டும்.

துர்ஜயன் :—அடே! சண்டாளப் பதர்களே! நான் போனால் போகிறேன். இதற்காக மஹாராணி மதாலஸை உங் கள் மேல் நல்ல பழி வாங்குவாள். மதாலஸே! மதா லஸே!! இந்த துர்ஜயன் உலகை விட்டுப் போகிருன்! அவனை மறக்காதே.

(ஸேவகர் அவனைக் கட்டி யிழுத்துக்கொண்டு போகிருர்கள்.)

(காட்சி முடிகிறது)

அங்கம் 7. களம் 1.

இடம் :—போர்க்களம்.

(மதாலஸை பிரவேசம்.)

மதாலஸை :—ஆஹா, இன்று என் ஸர்வ பிரபஞ்சமும் அஸ் தமித்து விட்டது. என் ஸைன்யங்களும் அழிந்தன. எனக்கு நானே துணை. மதாலஸே! போயிற்று. உன் அவதாரத்தின் அந்த்யமும் அணுகி விட்டது. இனி உயிர் வாழ்வதிற் பயனில்லை. மரணமே மேல். (கட் டாரியைக் கையில் எடுத்து) சஸ்திரமே! முடி உன் வேலையைச் சற்றும் தயங்காது....இரு. இரு. (தன் மகுடத்தைக் கையிலெடுத்து) என் சிரத்தின் மீதிருந்து புனிதமடைந்த இந்த ஸாம்ராஜ்ய மகுடம், நானிறந்த பின் இந்த ரணகளத்தில் கிடக்கும். என்னை வென்ற

பாக்யசாலி நானிறந்த பின் இதைத் தன் முடிமீது அணிந்து களித்து விளங்கிடுவான்....ஆஹா, அப்படியா நடக்க விடுவேன்?....ஏ! மஹா பாக்யசாலியான மகுடமே! இதுவரை நீ மதாலஸையின் மகத்தான மஸ்தகத்தின் ஸாந்நித்யத்தில் மகிழ்வுடன் விளங்கினாய். ஆனால் இனி ஒரு அற்பப் பதரின் முடிமீதிருந்து ப்ரஷ்டமடைய வேண்டாம் நீ. போ! பூமா தேவியின் புஷ்ப கர்ப்பத்தில் புகழ் குன்றாது புகுந்திடு.

(அதைப் பொடிப் பொடியாய் உடைத்துத் தரையுடன் தேய்த்து விடுகிறாள்.)

ஹா! இப்பொழுதென் ஹ்ருதயம் சாந்த மடைந்தது. இனி நிம்மதியாய் மடிவேன்.

(கட்டாரியால் தன்னைக் குத்திக் கொள்ளப்போகும் ஸமயத்தில் கோதண்டன் ஓடி வந்து அவள் கையைப் பிடித்துக் கொள்கிறான்.)

கோதண்டன் :—ஆஹா! மதாலஸே! இதென்ன ஸாஹஸம்? நிறுத்து உன் கையை.

மதாலஸை :—யாரது? கோதண்டனா? போ! போ! என்னை விட்டு.

கோதண்டன் :—மாட்டேன். உன்னை விடமாட்டேன். நீ உயிருடன்தா னிருக்க வேண்டும்.

மதாலஸை :—சீ! சத்ருக்கள் கையிலகப்பட்டு அவர்களுக்கு தாஸியா யிருப்பதினும் நான் மரித்திடுவேன்.

கோதண்டன் :—வேண்டாம், வா. நாமிங்கிருந்து விரைந்து சென்று விடலாம்.

மதாலஸை :—விரைந்து சென்று விடுவதா? அப்படி யென்றால்... என்னையா யுத்த பூமியிலிருந்து ஓடச் சொல்லுகிறாய்? கோதண்டா! என் சத்ருக்கள், விக்ராந்தனும், ம்ருநாளினியும் என்றாவது எனக்குப் புறங்காட்டி ஓடி

ளுர்களா? அப்படியிருக்க, நாளு அவர்களுக்குப் பயந்து ஓடுவேன் ?

கோதண்டன் :—ஆனல் அவர்கள் ஆத்மஹத்தி செய்து கொள்ள வில்லையே? நீயேன் செய்துகொள்ள வேண்டும்? வா. என்னுடன் வந்துவிடு. உன்னை யழைத்துப் போகவே உன்னை முழுதும் தேடி யிங்கு கண்டேன். வா. நான் சொல்வதைக் கேள்.

மதாலஸை :—போதும். நான் உயிருட னிருந்தாலவர் கைகளிலகப்பட வேண்டியதுதான். என்னைக் காட்டிலகப்பட்ட கொடு மிருகமென்று கூட்டிலிட்டல்லவோ குறித்தேசுவார்கள்! எனக்கெண்ணிலா அவமானங்கள் இழைத்திடுவார்களே! போராடி மடியவேண்டுமென்று எவ்வளவோ முயன்று பார்த்தேன். ஆனல் என்னை ஒருவரும் மாய்த்திடலாகாதென்று அந்த அதமன் விக்ராந்தன் தன் வீரர்க்கெல்லாம் கட்டளை செய்து விட்டான். இனி ஆத்ம ஹத்தியன்றி வேறு வழியில்லை. விடு என்னை. மானமுடன் வாழ்ந்திட்ட நான் மானமுடன் மரிப்பேன். இதோ உனக்கும் சொல்வேன். நீயும் நடைப்பிணமாய் பிழைத்திருக்க வேண்டாம். நாமிருவரும் ஒருவரை யொருவர் மாய்த்துக்கொண்டு வீர ஸ்வர்க்க மேகிடலாம் வா.

(அவளைப் பிடிக்கப் போகிருள். இருவரும் சண்டை செய்கிருர்கள். அதற்குள் ம்ருநாளினி வீரர்களுடன் பிரவேசிக்கிருள்.)

ம்ருநாளினி :—பிடியுங்கள் அவர்களை! கைதியாக்குங்கள்!!

(இருவரையும் வீரர் பிடித்துக்கொண்டு அவர்கள் ஆயுதங்களைப் பிடுங்கிக் கொள்கிருர்கள்.)

மதாலஸை :—வீரர்களே! விடுங்களென்னை. நான் ஓடமாட்டேன். என் கையில் ஓர் வாளைக் கொடுங்கள். உங்களுடன் போர் செய்து மடிகிறேன்.

விக்ராந்தன் :—(பிரவேசித்து) எங்கள் வாள்களைத் தொடவும் உனக்கு யோக்யதை யில்லை. வீண் ஆசையை விடு....மருநாளினீ! மெச்சினேன், உன் திறத்தை. சந்திரசேகர மஹாராஜாவின் ஜய கோஷம் முழங்கட்டும்.

(யாவரும் ஜெயகோஷம செய்கிறார்கள்.)

மதாலஸை :—(உரக்கச் சிரித்து) கத்துங்கள்! கதறுங்கள்! சந்திரசேகர னிருக்குமிடத்தி லிருந்து இங்கேவர வேறு ஜன்மம்தான் எடுக்க வேண்டும். இத்தனை நேரம் துர்ஜயன் என் ஆக்ஞைமீது சென்று கூர்ம துர்க்கத்திலே சந்திரசேகரனை யமலோக மனுப்பி யிருப்பான்.

விஜயஸேனன் :—(பிரவேசித்து) அனுப்பியே யிருப்பான்! ஆனல் அவன் செய்த ஏற்பாடுகள் மாறுதலடைந்து இப்பொழுது அவனே அங்கு போயிருக்கிறான். சீக்கிரத்தில் அவனை நீ பார்க்கலாம்....இதோ பார் சந்திரசேகர மஹாராஜா! ராணி ஸரோஜினி! ராஜாதிராஜ சந்திரசேகர மகாராஜாவுக்கு ஜேய்!

(யாவரும் ஜெயசோஷம் செய்கிறார்கள்.)

(சந்திரஸேகரன், ஸரோஜினி, ஸர்தார்கள் முதலியவர் வருகிறார்கள்.)

விக்ராந்தன் :—(ஓடிப்போய்) வா! வா!! பாலா! சந்திரசேகரா வா!

(அவனை ஆலிங்கனம் செய்கிறான்.)

மதாலஸை :—(ஸ்வகதம்) ஐயோ! என் கண்ணெதிரில் என் பரம வைரிகள் ஜெயங் கொண்டாடுவதையும் நான் பார்க்க வேண்டுமா?

(தலையைத் திருப்பிக் கொள்கிறாள்.)

விக்ராந்தன் :—ஸரோஜினீ! உனக்கு நான் என்றும் கடமை பட்டவனு யிருப்பேன். நீ ஸூர்யகுல ரக்ஷண தேவ

தையென்று உலகெங்கும் உன் கீர்த்தி பரவிடும். மதாலஸே! உன்னுடைய ராக்ஷஸ எண்ணங்களையெல்லாம் அழித்து ஜயமுடன் விளங்குகிருன் உன் ஜன்ம வைரி. பார் அவனை நன்ருய். நீ அபகரித்தணிந்திட்ட மகுடத்தை உன் கண்ணெதிரிலேயே அவன் முடிமீதிருத்திடும் காட்சியைப் பார். எங்கே அந்த மகுடம்?

மதாலஸை:—(நகைத்து) அதோ பார்.

(கீழே காண்பிக்கிருள்.)

விக்ராந்தன்:—என்ன? ஆஹா! எந்த சண்டாளன் செய்த அகிருத்தியமிது?

மதாலஸை:—மனமாற அழு. இதிலாவது உங்களை வென்றேன்.

விக்ராந்தன்:—மதாலஸே! நீ செய்துள்ள பாபங்களுக்காக உன் மனதில் இப்போதாவது பச்சாத்தாபம் தோன்றுகிறதா?

மதாலஸை:—பச்சாத்தாபமா? ஒரு நாளுமில்லை. சூரஸ்திரீகளிடம் அது என்றும் கிடையாது.

ம்ருநாளினி:—உன்னுடைய சூரத்வம் எல்லாம்தான் சூன்யமாய் விட்டதே. இனியாவது ஈசனை நினைத்திடலாகாதா?

மதாலஸை:—ஐச்வர்ய லக்ஷ்மியின் மடிமீது தலைசாய்த்து ஸுகசயனம் புரிந்திட்ட நாளில் எவன் மீது நான் கடைக்கண் பார்வையும் நாட்டவில்லையோ அவனையா இப்பொழுது நினைப்பேன்?

விக்ராந்தன்:—சந்திரசேகர மஹாராஜா! இதோ தம்மெதிர் நிறுத்தியிருக்கும் கைதிக்குத் தக்க தண்டனை விதிக்

திடல் தம்முடைய ஸ்வதந்திரம். தமது சித்தத்தை வெளியிடவேண்டும்.

சந்திரசேகரன் :—விக்ராந்த மஹாராஜா! அந்த ஸ்வதந்திரத்தை எனக்கு அளித்தது நீங்களன்றோ? என் ராஜ்ய பாரத்தில் பிறந்திடும் முதல் ஆக்ஞை உம்முடைய வாக்கிலிருந்து வருவதே முறை. ஆகையால் உமதிஷ்டம்போல் தண்டனை விதித்திடும்.

விக்ராந்தன் :—என் பாக்யம். அம்மா ஸரோஜினீ! நாதனையே தண்டித்து நியாயத்தை நிலைநிறுத்திய நாரீமணி யன்றோ நீ? ஸூர்ய குலத்திற்கே அடைக்கலமளித்துக் காப்பாற்றிய உனக்குத்தான் அவ்வுரிமையுண்டு. ஆகையால், நீ உரைத்திடு இவள் தண்டனையை.

ஸரோஜினி:—மஹாராஜா! நான் என்ன செய்தேன்? என் அரசனுக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்தேனே யன்றி நான் விசேஷமாய் ஒன்றும் ஸாதித்துவிடவில்லையே. இவளைக் கைதியாக்கினது ம்ருநாளினி. சந்திரசேகர மஹாராஜாவுக்கும் உங்களுக்கும் பிறகு, இவளுக்குத் தண்டனை விதித்திடும் ஸ்வதந்திரம் ம்ருநாளினி யுடையதே. ஆகையால் அவளே உரைக்கட்டும்.

விக்ராந்தன் :—புத்ரீ! எல்லோருடைய அபிப்பிராயமும் ஒத்திருக்கிறது. மதாலஸைக்கு உன் வாயால் தண்டனை விதித்திடு.

சந்திரசேகரன் :—ஆம். மிகவும் ஸரி.

ம்ருநாளினி :—மஹாராஜா! நானும் ஸரோஜினியும் இனி பிரம்மசாரிணிகளாய் லோகஸேவை செய்து ஈசனருளைப் பெறுவதென்று தீர்மானித்து விட்டோம். விக்ராந்த மஹாராஜாவோ ஸந்நியாஸம் பெற நிச்சயித்து

விட்டார். எங்களுடைய பிரபஞ்ச ஜீவனம் இப்பொழுது ஸமாப்தியடைந்துவிட்டது. ஆகையால் அதற்குரிய ராகத்வேஷ விகாரங்களை விட்டுவிட வேண்டியது. பாரமார்த்திக ஜீவன சாம்ராஜ்யத்தில் ஸகல பாதகங்களுக்கும் விதித்திருக்கும் தண்டனை ஒன்றே. அதன் பெயர் "தயை." அந்த தண்டனையையே விதித்திட வேண்டுமென்று உங்களை வேண்டிக்கொள்வேன்.

சந்திரசேகரன் :—விக்ராந்த மஹாராஜா! ம்ருநாளினி உரைத்ததைக் கேட்டீர்களா? உமதிஷ்டம்போல் செய்யும்.

விக்ராந்தன் :—மருநாளினீ! உன் உதார குணத்தை இன்று நான் கண்டேன்? உன் மனதிற்கிசைந்தபடியே செய்வோம்——மதாலஸே! இப்பொழுதில்லாவிடினும் இதற்குப் பின் எப்பொழுதாகிலும் உன் மனதில் பச்சாத்தாபம் உதித்திடும். அம்மாதிரி ஸம்பவித்து உன் ஆத்மா சுத்தமடைய வேண்டுமென்றே உன்னுடைய பெருங் குற்றங்கள் யாவையும் க்ஷமித்திருக்கிறோம். போ! எங்காவது ஓர் மடத்திற்குச் சென்று நல்லவழியில் காலங் கழித்திடு.

மதாலஸை:—விக்ராந்தா! ம்ருநாளினீ!! உங்கள் ஔதார்யத்தைக் காட்டி என்னை அவமானப்படுத்தவா நினைத்தீர்கள்? உங்கள் க்ஷமையை இதோ என் காலால் திரஸ்கரித்தேன்!

கோதண்டன் :—மதாலஸே! வேண்டாம்!

மதாலஸை :—சீ! வாயை மூடு! உன்னைப் போன்றவன் எப்படியும் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

கோதண்டன் :—மானத்தைப்பற்றி இப்பொழுது பேசிப் பயனில்லை. உயிரைக் காப்பாற்றிக் கொள்வதைப்பற்றி யோசிப்போம்

மதாலஸை :—உயிரா பிரதானம்? நபும்ஸக நாயே! இந்த விக்ராந்தன் என் ஸபையில் கைதியாய் நின்றபோது ஒரு க்ஷணமாயினும் தலை குனிந்தானா? நாமிப்பொழுது அவனெதிரில் வணங்குவது அழகாகுமா? கோதண்டா! மோசம் போகாதே! வீரனாய் நடந்துகொள்.

கோதண்டன் :—நீ ஏன் வீணாய் கெடுகிறாய்? உன்னைத்தான் மன்னித்தார்களே! நானும் மன்னிப்படைந்து உன்னுடன் வருகிறேன்! வா.

மதாலஸை :—அதனிலும் நான் இன்றே ரௌரவம் போவேன்.

கோண்டதன் :—போ ஆனால்! என் உயிரை நான் காப்பாற்றிக் கொள்கிறேன். சந்திரசேகர மஹாராஜா! என் குற்றங்களை யெல்லாம் க்ஷமித்து என்னை ரக்ஷிக்க வேண்டும்.

(சந்திரசேகரன் பாதத்தில் பணிகிறான்.)

மதாலஸை —நில்! நில்!! மாட்டாயா? ஸரி! உன் மனத்தை நீ காத்துக்கொள்ளாவிடினும் நான் காப்பாற்றுகிறேன்.

(திடீரென்று மார்பில் ஒளித்திருந்த கட்டாரியை எடுத்து கோதண்டன் மேல் பாய்ந்து அவனைக் குத்திக் கொன்று விடுகிறாள்.)

இதோ இரண்டாவது காணிக்கை! சண்டாளா! மடி!

(என்று கட்டாரியை ஓங்கிக்கொண்டு விக்ராந்தன்மீது பாய்கிறாள். விக்ராந்தன் அவள் கையை கெட்டியாய்ப் பிடித்துக்

கொள்கிருன். போர்வீரர் கட்டாரியை எடுத்துக் கொண்டு மதாலஸைக் கிருபுரமும் காவலாய் நிற்கிருர்கள்.)

சந்திரசேகரன் :—போதும்! இவளுக்களித்திட்ட ப்ராண தானம் ரத்தாய் விட்டது.

விக்ராந்தன்:—வீரர்களே! இவளை ஜாக்கிரதையாய் காவலில் வைத்திருங்கள், ராஜதர்மப்படி இவளுக்கு தண்டனை விதிக்கும் வரையில்.

சந்திரசேகரன்:—இதோ, இப்பொழுதே விதித்தோம் ராஜ தர்மப்படி தண்டனையை. இவளை வெளியிற் கொண்டு போய் சிரச்சேதம் செய்து விடுங்கள்.

மதாலஸை :—அடே! பிச்சைக்காரப் பதர்களே! நீங்களென்னபேசுவது? உங்கள் தயையை எப்படி உதைத்து தள்ளினேனோ அப்படியே உங்கள் தண்டனைக்கும் மரியாதை செய்கிறேன்.

(பக்கத்திலிருக்கும் வீரனிடமிருந்து கத்தியைப் பிடுங்கிக் கொண்டு தன் மார்பில் குத்திக்கொண்டு விழுகிருள்.)

விக்ராந்தன் :—கொலையும், கொடுமையும் உருவெடுத் தவதரித்த இந்த ராக்ஷஸியின் பேரெண்ணங்களெல் இக்கதிக்கு வந்தனவே! ஈசன் இவளையும் க்ஷமித்திடுவாராக!

மதாலஸை:—விக்ராந்தா!.......காந்தா"

(மடிகிருள்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 7. களம் 2.

இடம் :—தேவாங்கனையின் ஸமாதி

விக்ராந்தன், ம்ருநாளினி, ஸரோஜினி, பிரவே சிக்கிறார்கள்.

விக்ராந்தன் :—பெண்களே! நாம் மேற்கொண்ட ராஜகார்யங்கள் ஈசனுடைய அநுக்ரஹத்தால் சுபமாகவே முடிந்துவிட்டன. ஸரோஜினி! உன்னுடைய ராஜ்யத்தை சந்திரசேகரனுக்கு அர்ப்பணம் செய்து லோகஸேவை செய்வதாய் நீ கொண்ட தீர்மானத்திற்காக உன்னை மிகவும் போற்றுகிறேன். ம்ருநாளினீ! உன்னைப்பற்றி நான் நினைக்கும்போதும் என் மனம் குதூஹலத்துடன் பொங்குகிறது.

ஸரோஜினி, ம்ருநாளினி :—எங்கள் ஞான தாதாவான பிதாவின் சரணங்களை என்றும் பணிந்திடுவோம்.

(இருவரும் கீழே விழுந்து அவன் பாதங்களை முத்தமிடப் போகிறார்கள்.)

விக்ராந்தன் :—(அவர்களைத் தடுத்து) வேண்டாம். வேண்டாம் நான் அதற்குரியவனல்ல. நீங்கள் என்னிலும் மிகவும் மேம்பட்டவர்கள். நானல்லவா உங்களை நமஸ்கரிக்க வேண்டும்?

(அவர்கள் பாதத்தை நமஸ்கரிக்கப் போகிறான்.)

[ம்ருநாளினியும் ஸரோஜினியும், அதைத் தடுக்க மூவரும் ஆலிங்கனம் செய்து கொள்ளுகிறார்கள்.]

விக்ராந்தன் :—பரமேச்வரா! இந்த உத்தமச் சிறுமிகளின் சிரங்கள்மேல் உன் வரதஹஸ்தம் என்றும் இருக்கட்டும். குழந்தைகளே! சந்திரசேகரனின்று இங்கு வந்து தேவியின் ஸமாதியைத் தரிசிக்கப்போகிறான்.

ஜனங்கள் யாவரும் அவனுக்கு இங்கே மகுடாபிஷே கம் செய்யப் போகிறார்கள். நாமதைக் கண்குளிரக் கண்டு நமது வழிச் செல்வோம்.

(வாத்ய கோஷம் முழங்க, பொது ஜனங்கள் புடைசூழ, ராஜ்ய பிருதுகளுடன் சந்திரசேகரன் பிரவேசிக்கிறான். விக்ராந்தன், ஸரோஜினி, ம்ருநாளினி அவனை எதிர் கொண்டழைத்து வாழ்த்துகிறார்கள். சந்திரசேகரன் ஒரு வார்த்தையும் பேசாமல் வணக்கத்துடன் நேராக ஸமாதியை அணுகி, கைகளைக்கூப்பிக்கொண்டு, "மாதுஸ்ரீ திவ்ய சரணங்களில் அநந்தகோடி நமஸ்காரம்" என்று சொல்லி, ஸாஷ்டாங்கமாய் தரையில் விழுந்து நமஸ் கரிக்கின்றான்.)

ஜனங்களின் பிரதிநிதி:—ஸகல ஜனங்களும் பிரீதியுடன் செய்வித்திட்ட இந்த ராஜ மகுடத்தை, விக்ராந்த மஹாராஜா சந்திரசேகர மஹாராஜாவின் சிரத்தில் சூட்டவேண்டுமென்று ஸகல ஜனங்களும் வணக்க மாய் வேண்டிக் கொள்ளுகிறார்கள்.

விக்ராந்தன்:—(மகுடத்தை கையிலெடுத்துக்கொண்டு) மஹா ஜனங்களே! சாஸ்த்ரோக்த ராஜ்யாபிஷேக ஸமாரம் பம் சீக்கிரத்திலேயே நடைபெறும். ஆனாலும் மஹா ராஜாதிராஜனை நீங்களிவ்வாறு கௌரவிப்பது மிகவும் ஆநந்தகரமாயிருக்கிறது. உங்களுடைய உத்கிருஷ்ட மான ராஜநிஷ்டைக்காக உங்களுக்கு நன்றி பாராட்டி இதோ இந்த சோபித மகுடத்தை உங்கள் கோரிக் கைப்படி மஹாராஜாவின் மஸ்தகத்தின்மேல் அணிவிக் கிறேன். ஜயவிஜயீபவ!!

(சந்திரசேகரன் தலைமீது வைக்கப்போகிறான்.)

சந்திரசேகரன் (பின்வாங்கி) வேண்டாம். அதை என் முடி மீது சூட்டாதீர்கள். மஹாஜனங்களே! இந்த திவ்ய மகுடத்தைத் தரித்திட எனக்கு யோக்யதையில்லை.

விக்ராந்தன் :—மஹாராஜா! ஏன் இப்படி செய்கிறீர்கள்? ஜனங்களின் கோரிக்கையை நிறைவேற்றி இதை அணிந்து கொள்ளவேண்டும்.

சந்திரசேகரன் :—என் தந்தையே! நான் ஜனங்களின் கோரிக்கையை உபேக்ஷித்திடவில்லை. எனக்கு வேறு வழியில்லை. ஸூர்ய குலோத்பன்னனும் விக்ரமாதித்யனின் ஸத்புத்ரனுமான நான் என் கத்தியை உறையினின்றும் எடுக்காமல் அடைந்திட்ட இந்த ராஜ்யத்தை எவ்வாறு அங்கீகரிப்பது? ஆகையால், ஜனங்களே! இந்த மகுடத்தை மஹாராஜா விக்ராந்தருடைய முடி மீதமர்த்துங்கள்—(விக்ராந்தன் மறுக்கிறன்) அவர் வேண்டாவிடில் மஹாராணி ஸரோஜினியின் மங்கள முடிக்கு பூஷணமாய் இடுங்கள்—(ஸரோஜினி மறுக்கிறள்) அந்த உத்தமியும் வேண்டாவிடில் பாலயோகினி ம்ருநாளினியின் உஜ்வல கிருத்யங்களுக்கு காணிக்கையாய் அளித்திடுங்கள்.

(ம்ருநாளினி மறுக்கிறள்.)

விக்ராந்தன் :—குழந்தாய்! எங்களில் யாரும் ஸர்வ ராஜ்யாதிகார பதவிக்கு அருகரல்ல.

சந்திரசேகரன் :—ஆனல் கொடுங்கள் அந்த மகுடத்தை இங்கு.

(கையிலெடுத்துக் கொண்டுவந்து சமாதியின் முன் நின்றுகொண்டு)

தாயே! இந்த சிறிய பாலகனைக் காத்து ரக்ஷிக்கப் பதியையும் விட்டாய்! புத்திரனையும் கொடுத்தாய்; கடைசியில் உன் விலையற்ற உயிரையும் அளித்தாய். நீ செய்த தியாகத்திற்கு நான் எதை யளித்தாலும் ஸரியான பிரதிபலனுகாதே. இதோ இந்த ப்ரம்மாவர்த்த ஸாம்ராஜ்ய மகுடத்தை ஸர்வஜன ஸம்மதியுடனும் உன் பாதாரவிந்தத்தில் பக்தியுடன் ஸமர்

பிக்கிறேன். தேவி! இந்த சிறியவனுடைய ப்ரேமா பூஜனையை வாத்ஸல்யத்துடன் ஸ்வீகரிக்க வேண்டும்.

(க்ரீடத்தை சமாதியின் மேல் பரிவுடன் வைக்கிறான்.)

பந்துக்களே! இனி இந்த ப்ரம்மாவர்த்தத்தின் ராஜ்ய பாரம் தேவி தேவாங்கனையின் திவ்ய நாமத்திலேயே நடைபெறும். தன் அகண்ட சீலத்தின் மஹிமையால் இந்த ஸாம்ராஜ்ய பதவியை யடைந்த மஹா பாக்ய சாலினி சக்ரவர்த்தினி, தேவி தேவாங்கனையின் திவ்ய சரணங்களில் தசானுதாஸனான சந்திரசேகரன் அதி விநயத்துடன் நமஸ்கரிக்கிறான்.

(பணிவுடன் சாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கிறான்.)

மஹா ஜனங்களே! ப்ரம்மாவர்த்த சக்ரவர்த்தினி தேவி தேவாங்கனைவிற்கு பராக்.

(ராணுவ முறைப்படி கத்தியை உருவி கௌரவிக்கிறான். யாவரும் அவ்வாறே செய்கிறார்கள். புஷ்பவர்ஷம், "ஜய ஜய கோஷம்" மங்கள வாத்தியம் எல்லாம் சுபத்தைக் குறிக்கின்றன.)

மங்களம்

ஆனந்த விகடன் பிரஸ், மதராஸ்.